
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | அக்டோபர் 02, 2014 | புரட்சி 13 | முழக்கம் 38 | விலை: ரூ.3.00



தலையங்கம்

## தமிழக அரசியல்-அரசுகளில் திடீர் மாற்றம்

அரசியலில் தனக்கு எதிரிகளே இல்லாமல் காணாமல் போய் விட்டார்கள் என்று சில வாரங்களுக்கு முன் தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியபோது, ஊழல் தடுப்புச் சட்டம் தனக்கு எதிரியாக வந்து நிற்கப் போகிறது என்று அவர் நினைத்துக்கூட பார்த்திருக்க மாட்டார். 18 ஆண்டுகாலம் பல்வேறு தடைகளைத் தாண்டி வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கு செப்டம்பர் 27ஆம் தேதி முடிவுக்கு வந்தது. 4 ஆண்டு சிறைத் தண்டனை பெற்ற ஜெயலலிதா, சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் முதல்வர் பதவியையும் இழந்தார். ரூ.100 கோடி அபராதத் தொகை. அவருடன் குற்றச்சாட்டு நிரூபிக்கப் பட்டுள்ள சசிகலா மற்றும் அவரது உறவினர்கள் வி.என்.சுதாகரன், இளவரசி ஆகியோருக்கும் 4 ஆண்டு சிறை; ரூ.10 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்று பதவி இழக்கும் முதல் முதலமைச்சர் ஜெயலலிதாதான். 4 ஆண்டுகால தண்டனைக் காலத்துடன் சேர்த்து அடுத்த 6 ஆண்டுகாலம் தேர்தலில் போட்டியிட சட்டம் தடை விதிப்பதால் இனி 10 ஆண்டுகாலம் தேர்தலில் போட்டியிடும் தகுதியை ஜெயலலிதா இழக்கிறார்.

எவ்வளவு பெரிய இடத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் சட்டம் அனைவருக்கும் பொதுவானது என்ற உண்மையை இத்தீர்ப்பு நிரூபித்துக் கொண்டிருப்பதாக அரசியல் வட்டாரங்களில் கருத்துகள் முன் வைக்கப் படுகின்றன. சட்டங்கள் எல்லாக் காலத்திலும் இப்படி நேர்மையாக நடை போடுவதும் இல்லை. சட்டங்களைக் கையாளும் நீதிபதிகள் நேர்மையானவர்களாக இருக்கும்போதுதான் அது சாத்தியமாகிறது.

2003 ஆம் ஆண்டு இந்த வழக்கு உச்சநீதிமன்ற ஆணைப்படி பெங்களூருக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து 4 நீதிபதிகள் மாறி 5ஆவது நீதிபதியாக ஜான் மைக்கேல் டி குன்கா முன் விசாரணைக்கு வந்தது. வழக்கு விசாரணையை இழுத்தடிக்கும் முயற்சிகள் அனைத்தை யும் உறுதியாகப் புறக்கணித்து, தனது தீர்ப்பை வழங்கியிருக்கிறார் நீதிபதி.

“அம்மா மீதே வழக்கா? அம்மாவுக்கே சிறை தண்டனையா?” என்று அம்மாவின் கட்சித் தொண்டர்கள் “விசுவாசிகள்” புலம்புவதும், வன்முறைகளைக் கையில் எடுப்பதும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஜெயலலிதா பற்றி விமர்சிப்பதற்கோ, எழுதுவதற்கோ அ.இ.அ.தி.மு.க. ஆட்சி முற்றாக தடை போட்டு. அவமதிப்பு வழக்குகளை அடுக்கடுக்காகத் தொடர்ந்து தமிழகத்தை தங்களது அதிகாரப் பிடிக்குள் அச்சுறுத்தி வைத்திருந்தது; அந்த உளவியலில்தான் அம்மாவுக்கே தண்டனையா என்று கேட்கும் நிலையை உருவாகியிருக்கிறது.

அம்மா - ஊழலே செய்யவில்லை என்று கூறுகிறார்களா? அல்லது ஊழல் செய்தாலும் தண்டிக்கும் உரிமை நீதிமன்றத்துக்கு கிடையாது என்கிறார்களா?

சரி; இந்த வழக்கைத் தொடர்ந்த சுப்ரமணியசாமி மரியாதைக்குரிய மனிதர் அல்ல; பார்ப்பன வெறியர்; தமிழினத் துரோகி என்பதில் கருத்து வேறுபாடே கிடையாது. ஆனால் 18 ஆண்டுகளுக்கு முன்பு அவர் வழக்கைத் தொடர்ந்ததற்குப் பிறகு, இடையில் அம்மையார் ஜெயலலிதாவுடன் அவர் நட்பு பாராட்டிய காலமும் உண்டு; இல்லை என்றுகூற முடியுமா? அண்மையில் தில்லை நடராசன் கோயில் தீட்சதர் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் வரை சென்று சுப்ரமணியசாமி வழக்குப் போட்டபோது அம்மையார் ஜெயலலிதாவும் சிறப்பு வழக்கறிஞரை அமர்த்த மறுத்து வழக்கை உறுதியாக நடத்தாமல் நீர்த்துப் போகச் செய்து சுப்ரமணியசாமிக்கே மறைமுக ஆதரவளித்ததையும், இதில் சுப்ரமணியசாமியே அம்மையாரை பாராட்டியதையும் எவரும் மறந்துவிட முடியாது. இன்று சுப்ரமணிய சாமி கொடும்பாவிகளை எரிக்கும் அக்கட்சியின் உணர்ச்சி வயப்பட்ட தொண்டர்கள், இதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஊழல் தடுப்பு வழக்கிலிருந்து அம்மையார் விடுதலை பெறுவதற்காக “கடவுள்”களுக்கு லஞ்சம் தரும் சிறப்பு பூஜைகளும் யாகங்களும் நடந்தன. தமிழ்நாட்டுக் கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடத்துமாறு அறநிலையத் துறையே சுற்றறிக்கை அனுப்பியது. பெங்களூரில் பார்ப்பனர்களை வைத்து “சத்ரு சம்ஹார யாகம்” நடத்தப்பட்டது. லஞ்சம், ஊழல் தொடர்பான வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் விடுதலை பெறுவதற்காக சிறப்புப் பூஜைகள், யாகங்கள் நடத்துவதா என்று பார்ப்பன அர்ச்சகர்களே வெட்கப்படவும் இல்லை. “அவாளு”க்கு பூஜை, லாபத்துக்காக நடத்தப்படும் ஒரு தொழில்; அவ்வளவுதான்.

தீர்ப்பு வெளியான பிறகு தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, வன்முறை தலைவிரித்தாடியது. தமிழக காவல்துறை கைகட்டி வேடிக்கைப் பார்த்தது. தமிழ்நாட்டில் பெரியார் இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள், சுற்றுச் சூழல் அமைப்புகள், ஜாதி ஒழிப்பு இயக்கங்கள் - ஒரு பொதுக் கூட்டம், அறப் போராட்டத்துக்கு அனுமதி கேட்டால், அதற்கு தமிழக காவல்துறை காட்டும் கெடுபிடிகள் கொஞ்ச நஞ்சமல்ல. அதிலும் குறிப்பாக பெரியார் இயக்கங்கள் கூட்டம் நடத்தினால், நிபந்தனைக்கு மேல் நிபந்தனை போடுவார்கள். கூட்டத்தில் பேச வேண்டிய கருத்துகளை அவர்களே தீர்மானிப்பார்கள். கடைசி நேரத்தில் அனுமதியை ரத்து செய்வார்கள். நீதிமன்றம் போய் அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள் என்று உத்தரவு போடுவார்கள். இவ்வளவு ‘கெடுபிடி’கள் காட்டி, “சட்டம் ஒழுங்கு பிதாமகன்களாக” வேடம் கட்டி ஆடிய காவல்துறை, தமிழ்நாடு முழுதும் கல்வீச்சு, பேருந்து எரிப்பு, கடைகள் உடைப்பு எல்லாம் நடந்தபோது, எங்கே போய் பதுங்கிக் கொண்டது என்ற கேள்வியை நாம் கேட்க வேண்டியிருக்கிறது.

தி.மு.க. தலைவர்கள் மீது இப்படி ஒரு தீர்ப்பு வந்து, தி.மு.க. தொண் டர்கள், இதேபோல் வன்முறையை கையில் எடுத்தால், காவல்துறை இதே போன்ற “கண்டும் காணாத அணுகுமுறையை” மேற்கொண்டிருக்குமா? இதுதான் காவல்துறை நேர்மையாக கடமையாற்றும் இலட்சணமா?

அதே நேரத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த ஒருவர், இப்படிப்பட்ட தண்டனைக்கு உள்ளாகும்போது அதற்கு அரசியல் மாற்று சக்தியாகக் கருதப்படும் தி.மு.க.வின் நிலை என்ன? தி.மு.க. தலைவர் கலைஞர், இது குறித்து கருத்து ஏதும் தெரிவிக்க மறுத்து ‘மவுனம்’ சாதித்து விட்டார். அவரால் மவுனம் சாதிக்கத்தான் முடியும். “யார் இலஞ்ச ஊழல் செய்தாலும் சட்டம் வழங்கும் தண்டனையை ஏற்றுத்தான் தீரவேண்டும்; பெங்களூர் நீதிபதி நேர்மையாக தீர்ப்பளித்திருக்கிறார்” என்று கலைஞரால் கருத்து தெரிவிக்கவே முடியாது. அதே இலஞ்ச ஊழல் வழக்குகள் அவரது குடும்பத்தையும் கட்சியையும் சூழ்ந்து மிரட்டிக் கொண்டிருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. தலைமைக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவை தங்களது வெற்றிக்கான படிக்கட்டுகளாக மாற்றக்கூடிய வலிமையான தளத்தை தி.மு.க. இழந்து நிற்கிறது என்பதுதான் அவலமான உண்மை.

ஜெயலலிதா தமிழக முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, தமிழ்நாட்டின் உரிமைகளானாலும் ஈழத் தமிழர் பிரச்சினையானாலும் தூக்குத் தண்டனைக்குள்ளான தமிழர்கள் விடுதலையானாலும் உறுதியான குரல் கொடுத்து, தனது கடந்தகால கொள்கைகளிலிருந்து மாறுபட்ட நிலைப்பாடுகளை எடுத்து வந்தார். இதன் வழியாக, தனது முதலமைச்சர் பதவியை வலிமையான அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி வந்தார். இப்போது, அந்தத் தலைமைப் பதவியை ஊழல் தடுப்புச் சட்டம் பறித்துவிட்ட நிலையில் தமிழக அரசியலில் ஒரு வெற்றிடம் உருவாகியிருக்கிறது என்பது உண்மை.

இந்த வெற்றிடத்தை நிரப்பப் போவது தாங்கள்தான் என்று இந்துத்துவா சக்திகள் மணல் கோட்டைகளை கட்டிக் கொண்டிருக்கின்றன. இதற்கு தமிழ் மண் ஒரு போதும் இடம் தராது. ஆனாலும், தமிழகத்தில் உருவாகியுள்ள சமூக-அரசியல் நெருக்கடிகள் எப்படி எதிர்கொள்ளப்படப் போகின்றன என்பது மிக முக்கிய கேள்வி.

மதம்-ஜாதி-தலைவர்களை கடவுளாக வழிபடும் போக்கு, சந்தர்ப்ப வாதம், எல்லாவற்றையும் விலை கொடுத்து வாங்கிட முடியும் என்ற அசட்டுத் துணிவு போன்ற அரசியல்களுக்கு எதிரான வலிமையான இயக்கம் உருவாக வேண்டும். அதற்கு மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். மக்களைக் காப்பாற்ற “கடவுள் அவதாரமாக தலைவர்கள் வந்து விட்டார்கள்” என்ற ‘அரசியல் பக்தி’ மார்க்கத்திலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும். ஏற்கெனவே மதம், கடவுள், பக்தி உருவாக்கி வைத்துள்ள உளவியல் கட்டமைப்புகள் இத்தகைய சீழ் பிடித்த அரசியலுக்கும் வழியமைத்து தருகிறது என்பதையும் கவனத்தில் நிறுத்த வேண்டும்.

தமிழ்நாட்டு மக்களுக்கான சமூக-அரசியல் கருத்துக்களை உருவாக்கி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்கள் விரோத அரசியல்களின் முகத்திரையைக் கிழித்தெறிய இயக்கங்கள் - தீவிரமாக களமிறங்கி மக்களை அணி திரட்ட வேண்டும். காலம் விடுக்கும் இந்த அறைகூவலை சந்திக்கத் தயாராக வேண்டும்!

*“மக்களின் அறிவு சரியாகப் பயன்படுத்தப்படாத வரையில் யார் அரசியல் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டாலும், அவர்கள் மக்கள் எதை விரும்புகிறார்களோ, அதைச் செய்து அவர்களை ஓரளவிற்குத் திருப்தி செய்துவிட்டு மற்றபடி தம் சுயநலத்துக்கான சகலத்தையும் செய்து கொள்ள முடியுமே தவிர, மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய காரியங்களைச் செய்ய முடியாது.”* – பெரியார்

# பீகார் முதல்வருக்கு பார்ப்பனர்களின் அவமதிப்பு

நாடாளுமன்ற தேர்தல் முடிவுக்குப் பிறகு பதவி விலகிய பீகார் முன்னாள் முதல்வர் நிதிஷ்குமார், தனது அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஜித்தன் ராம் மஞ்சி அவர்களை முதல்வர் பதவியில் அமர்த்தினார். பீகார் ஆட்சி, இந்தியாவிலேயே தொழில்-பொருளியல் வளர்ச்சியில் முதல் மாநிலமாக முன்னேறியிருப்பதை அண்மையில் வெளிவந்த ஆய்வுகள் சுட்டிக்காட்டின. பீகார் தலைநகர் பாட்னாவிலிருந்து 160 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பர்மேஸ்வரிஸ்தான் மாவட்டத்திலுள்ள கோயிலுக்கு முதல்வர் வழிபடச் சென்றார். அவர் வழிபட்டுவிட்டு திரும்பியவுடன் 'சாமி' தீட்டாகிவிட்டது என்று கூறி, பார்ப்பன புரோகிதர்கள் கோயிலையும் கோயில் உள்ள சிலைகளையும் 'சுத்தம்' செய்து தீட்டுக் கழித்துள்ளனர். இது குறித்து முதல்வர் ஜித்தன் ராம் மஞ்சி கூறுகையில், "மக்கள் தான் என்னை அந்த கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கிருந்து நான் கிளம்பிய பிறகு, 'சிலைகள்' சுத்தம் செய்யப்பட்டதாக எனக்குத் தகவல் கிடைத்தது. இந்தச் செயலைச் செய்தவர்களை நான் கண்டிக்க மாட்டேன். இது குறித்து புகார்அளிக்கப் போகிறேன்" என்று கூறியுள்ளார். ஒரு முதலமைச்சராக இருப்பவருக்கே இதுதான் நிலை என்ற கேவலம், பீகார் போன்ற மாநிலங்களில் தலைவிரித்தாடுகிறது.

இதே பீகாரில்தான் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த பாபுஜெகஜீவன்ராம், சம்பூரனானந்தா என்ற சமஸ்கிருதப் பண்டிதர் சிலையை திறந்து வைத்த போது, சிலை தீட்டுப்பட்டுவிட்டது என்று கூறி, பார்ப்பனர்கள் கங்கை நீரைக் கொண்டு வந்து, சிலையை கழுவி தூய்மைப்படுத்தினார். உ.பி.யில் தாழ்த்தப்பட்ட நீதிபதி ஒருவர், பதவி ஓய்வு பெற்றப் பிறகு, அவரது அலுவலகத்தில் பொறுப்பேற்க வந்த பார்ப்பன நீதிபதி, தலித் நீதிபதியின் அறையில் தீட்டுப் பிடித்துவிட்டதாகக் கருதி, தூய்மைச் சடங்குகளை செய்தார். திருவையாறு 'தியாராயர்' சங்கீத விழாவில் 'சூத்திரர்' தண்டபாணி தேசிகர் பாடியதால் மேடை தீட்டாகிவிட்டது என்று பார்ப்பனர்கள் தீட்டுக் கழித்த சம்பவம் ஒரு வரலாறாக பதிந்து நிற்கிறது. மகத் குளத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுடன் தண்ணீர் எடுக்கும் உரிமைப் போராட்டத்தை புரட்சியாளர் அம்பேத்கர் நடத்தியபோது, குளம் தீட்டுப்பட்டுவிட்டது என்று கூறி, பார்ப்பனர்கள் 'பசு மாட்டுச் சாணம் மூத்திரத்தைக்' கொட்டிக் குளத்தைச் சுத்தப்படுத்தினார்கள். பார்ப்பனர்களைத் தவிர, வேறு சாதியார் அர்ச்சகர் ஆனால் சாமி சிலை தீட்டாகிவிடும் என்று பார்ப்பனர்கள் கூறுவதை இன்று வரை உச்சநீதி மன்றமும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த சமூக இழிவை பார்ப்பன மேலாதிக்கத்தைக் கண்டிக்கவோ விவாதத்துக்குள்ளாக்கவோ எந்த புரட்சிகர அமைப்புகளோ சமூக மாற்றம் பேசும் இயக்கங்களோ ஊடகங்களோ முன்வரவில்லை. இந்த 'அமைதி'க்குள்தான் பார்ப்பனியத்தின் வெற்றியே அடங்கிக் கிடக்கிறது.

### மத அடையாளம்: உயர்நீதிமன்றம் தந்த தீர்ப்பு

அரசு ஆவணங்களிலோ, விண்ணப்பங்களிலோ எவர் ஒருவரும் தனது மதத்தை அறிவிக்க வேண்டும் என்று கட்டாயமில்லை என்று பம்பாய் உயர்நீதி மன்றம் வரவேற்கத்தக்க ஒரு தீர்ப்பை செப்.24, 2014 அன்று வழங்கியிருக்கிறது. மதத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது என்றும் அந்தத் தீர்ப்பு கூறுகிறது. டாக்டர் ரஞ்சித் மொகைத், கிஷோர் நசரே மற்றும் சுபாஷ் ரானாவேர் ஆகிய மூவரும் மகாராஷ்டிரா அரசுக்கு எதிராக தொடர்ந்த வழக்கு இது. தங்களுக்கு ஏகநாதர் மீது நம்பிக்கை உண்டு. அதற்காக கிறிஸ்தவ மதத்தையோ, வேறு மதத்தையோ நம்பவில்லை. கடவுளை மட்டுமே நம்புகிறோம். மதத்தை நம்பாதவர்கள் என்று கூறி, தங்களை 'மதமற்றவர்கள்' என்று அரசிதழில் பதிவு செய்ய முன் வந்தார்கள். மகராஷ்டிரா அரசு இதை ஏற்க மறுத்தது. அதைத் தொடர்ந்து பம்பாய் உயர்நீதி மன்றத்தில் பொதுநலன் வழக்கை தொடர்ந்தனர். மனுவை விசாரித்த நீதிபதிகள் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளனர். தீர்ப்பில் நீதிபதிகள் வெளியிட்ட கருத்துகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

"எனக்கு எந்த மதமும் இல்லை; எந்த மதத்தையும் பின்பற்றவோ, பரப்பவோ மாட்டேன் என்று அறிவித்துக் கொள்ளும் உரிமை ஒவ்வொரு தனி மனிதருக்கும் உண்டு. இந்தியா, மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசு நாடு என்பதால் அரசுக்கு மதம் கிடையாது (No State Religion). எனவே, எந்த அரசு அதிகாரமுள்ள அமைப்பும் அரசியல் சட்டம் 25ஆவது பிரிவு வழங்கியுள்ள, அடிப்படை உரிமையில் குறுக்கிட முடியாது. 25ஆவது பிரிவு மனசாட்சி சுதந்திரத்தையும், விரும்பும் மதத்தைப் பின்பற்றிப் பரப்பும் உரிமையையும் வழங்கியிருக்கிறது. மதத்தை ஏற்பதற்கும் ஏற்க மறுப்பதற்கும் இந்த சட்டப் பிரிவு உரிமை அளித்துள்ளது. ஒருவர் மதத்தை நம்பாதவராக இருக்கலாம். ஒரு மதத்தை நம்பி ஏற்றுக் கொண்டிருந்தவர், பிறகு அதில் நம்பிக்கையில்லை என்றால், தனக்கு எந்த மதமும் கிடையாது என்று அறிவிக்கலாம். ஒரு குடிமகனோ அல்லது தனி நபரோ ஏதேனும் ஒரு மதத்தில் இருந்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடிய எந்த சட்டமும் இல்லை.

சட்டத்தின் 25ஆவது பிரிவு வழங்கியுள்ள 'மனசாட்சி சுதந்திரம்' எந்த மதத்திலும் நம்பிக்கை கிடையாது என்பதை வெளிப்படையாக அறிவித்துக் கொள்ளும் உரிமையையும் உள்ளடக்கிய தாகும். ஒரு குடிமகனின் பெற்றோர்கள், எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றியிருந்தாலும் அவர்களுக்குப் பிறந்தவர்கள் மனசாட்சி சுதந்திரப்படி மதமற்றவர்கள் என்று அறிவிக்கவும், மதத்தைப் பின்பற்றாமல் இருப்பதற்கும் உரிமை உண்டு" என்று தீர்ப்பில் கூறிய நீதிபதிகள், மத அடையாளத்தை அரசு கேட்டால், தனக்கு மத அடையாளம் கிடையாது என்று கூறலாம் என்று திட்டவட்டமாக கூறி யுள்ளனர். இந்தியா இந்துக்களின் தேசம்; இந்துக் கலாச்சாரமே இந்தியாவின் தேசிய கலாச்சாரம் என்று கூறிக் கொண்டு அரசு எந்திரத்தை இந்துமய மாக்கும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு பம்பாய் உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு சரியான பதிலடியாகும்.

### சத்தீஸ்கரில் – இப்படி நடக்கிறது

சத்தீஸ்கர் மாநிலத்தில் பஸ்தார் மண்டலத்தில் இந்து மதப் பிரச்சாரம் மட்டுமே நடத்த முடியும். இந்து மதத்தைத் தவிர கிறிஸ்தவம் உள்பட ஏனைய மதப் பிரச்சாரங்கள் செய்வதற்கோ, கிறிஸ்தவ நிறுவனங்கள் செயல்படுவதற்கோ தடை செய்து, 50 கிராம பஞ்சாயத்துகள் ஆணைகள் பிறப்பித்துள்ளன. சட்டீஸ்கர் 'பஞ்சாயத்து ஆட்சி' சட்டத்தின் 129(ஜி) பிரிவின் கீழ் இந்த பஞ்சாயத்துகள் இந்த ஆணைகளை பிறப்பித்துள்ளன. அரசியல் சட்டம் அனைத்து மதத்துக்கும் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிரான இந்த உத்தரவு பிறப்பிக்கக் காரணம், 'விசுவ இந்து பரிஷத்' அமைப்புதான். இதை எதிர்த்து கிறிஸ்தவ மத அமைப்புகள் பிலாஸ்பூர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளன. வழக்கை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதி மன்றம் சத்தீஸ்கர் அரசுக்கு விளக்கம் கேட்டு தாக்கீது பிறப்பித்துள்ளது. கிறிஸ்தவர்கள் சார்பில் மனு தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர் என்.எல். சோனி, "இந்திய நாட்டுக்குள் இந்தியர்கள் நுழைவதற்கே எப்படி தடை போட முடியும்?" என்ற அடிப்படையில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக தெரிவித்தார். பஸ்தார் மாவட்ட விசுவ இந்து பரிஷத் தலைவர் சுரேஷ் யாதவ் கூறுகையில், "கிராம பஞ்சாயத்து எடுத்துள்ள முடிவு இது. இந்த முடிவுக்குக் கட்டுப்பட்டே தீரவேண்டும்" என்று மதவெறியோடு கூறியுள்ளார். கடந்த ஒரு மாதத்தில் 10 பஞ்சாயத்துகள் இதே போன்று ஆணைகள் பிறப்பித்துள்ளதாகவும் கூறியுள்ளார். மோடி ஆட்சி வந்த பிறகு இந்து மத வெறி அமைப்புகள் நாட்டை இந்து மயமாக்க அதிகாரத்தை முறை கேடாகப் பயன்படுத்துவதில் தீவிரம் காட்டி செயல்படுகின்றன.

### பக்தியின் பெயரால் பெற்ற மகளுக்கு 'சமாதி'

'கடவுளை நம்புகிறவன் காட்டுமிராண்டி' என்று பெரியாரியல்வாதிகள் கூறுவதால் மனம் புண்படுகிறது என்று புலம்பும் போலி பக்தர்களுக்கு கீழ்க்கண்ட செய்தியை சமர்ப்பிக்கிறோம். ராஜஸ்தான் மாநிலத்தில் பரத்பூரிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கும்ஹர் எனும் கிராமம். இந்த கிராமத்தில் தங்களது இரண்டரை வயது மகளை குழி தோண்டி உயிரோடு புதைத்து, சமாதி எழுப்பியுள்ளனர், அந்தப் பெண்ணின் பெற்றோர். அந்தப் பெண் 'கடவுள்' ஆகவிட்டதாகக் கூறினாராம். கிராமமே கூடி, இந்த காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டிக்காமல், சமாதிக்கு பூஜை செய்ய ஆரம்பித்துவிட்டனர். ஊடகங்களும் 'கடவுள் சமாதி'யைப் படம் பிடிக்க திரண்டு விட்டன. அந்தப் பெண்ணின் பெயர் குஷ்பூ. சமாதியைத் தோண்டி எடுத்து சவப் பரிசோதனை நடத்தப்பட்டதில் அந்த சிறுமி கடுமையான வயிற்றுப் போக்கால் பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்தது. செப்.18, 2014இல் இந்த சம்பவம் நடந்தது. சிறுமியின் தாயார் சிறீபதி, தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில், தன்னுடைய மகள் விருப்பப்படி 'சமாதி'க்குள் புதைத்ததாகவும், அவள் 'கடவுள்' ஆகிவிட்டதாக தங்களிடம் கூறியதாகவும் தெரிவித்தார். தந்தை வினோத், இதே போன்ற கதையை முதலில் கூறினாலும், பிறகு, தனது மகளுக்கு நோய் இருந்ததாலும், 'மருத்துவர்கள், மாந்திரீகர்கள்' என்று பலரையும் அணுகிய பிறகும் நோய் தீரவில்லை என்பதால் இந்த முடிவுக்கு வந்ததாகவும் கூறினார். இவர்கள் 'நாட்' என்ற பழங்குடி சமூகத்தைச் சார்ந்தவர்கள். குழந்தைகளை உயிரோடு 'சமாதி'க்குள் அனுப்பும் வழக்கம் இந்தப் பகுதியில் பரவலாக இருந்து வருகிறதாம்.

### பார்ப்பன 'எச்சில் இலை' உருளுவதற்கு தடை

பார்ப்பனப் புரோகிதர்கள் சாப்பிட்டு வீசிய எச்சில் இலைகள்மீது உருண்டு புரளும் 'அங்கப் பிரதட்சம்' கருநாடக மாநிலத்தில் ஒருகோயிலில் பின்பற்றப்பட்டு வந்தது. கருநாடக மாநில அரசு தோல் வியாதியைப் பரப்பும் இந்த அநாகரீக பழக்கத்துக்கு தடை விதித்தது. 'அங்கப் பிரதட்சம்' செய்ய விரும்பும் பக்தர்கள், கோயில் பிரசாதத்தில் வேண்டுமானால் செய்து கொள்ளட்டும்; பார்ப்பனர்கள் எச்சில் இலை மீது உருள வேண்டாம் என்று கருநாடக அரசு விதித்த தடையை எதிர்த்து பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றம் போனார்கள். உச்சநீதிமன்றம், கருநாடக அரசு ஆணை பிறப்பித்தது சரியே என்று தீர்ப்பளித்து விட்டது. ✦

## வினாக்கள்... விடைகள்...!

✦ மனித உரிமை மீறல்களை அரசியல் ஆயுதமாக பயன்படுத்தக் கூடாது.

**– அய்.நா.வில் இராஜபக்சே**

அதாவது ஆயுத அரசியலாக்க வேண்டும் என்று கூற வருகிறீர்கள்; அப்படித்தானே?

✦ 'மங்கள்யான்' செவ்வாய் கிரகத்தை புதன்கிழமை சென்று அடைந்தது. **– செய்தி**

அதனால் என்ன? இராகு காலத்தில் போனால் தான் செவ்வாய்க்கு தோஷம் கழிக்க வேண்டும்.

✦ மோடி அமெரிக்காவில் நவராத்திரி விரதம்; பழச் சாறு மட்டுமே சாப்பிடுகிறார். **– செய்தி**

பரவாயில்லை; 'மவுன விரதம்' கடைபிடிக்காமல் இருந்தால் சரி.

✦ திருமலையில் பக்தர்கள் மீது தடியடி. **– செய்தி**

இதுக்கு, எவ்வளவு பணம் கட்டி டோக்கன் வாங்கணுங்க...

✦ காந்தி நமக்கு சுதந்திரத்தைக் கொடுத்தார். நாம் அவருக்கு என்ன கொடுத்தோம்?

**– நியுயார்க்கில் மோடி**

அதை ஏன் அமெரிக்கர்களிடம் போய் கேக்குறீங்க. ஆர்.எஸ்.எஸ்.காரர்களிடம் கேளுங்கள்!

✦ திருவத்திபுரத்தில் தென்கலை – மணவாள மாமுனி உற்சவத்தின்போது வடகலை தேவநாத் சாமி கோயில் கதவை மூடுவதற்கு தடைகோரி வழக்கு.

**– செய்தி**

விடாதீங்க! 'தேவநாதனே' முன்வந்து மூடிக் கொண்டாலும் தடை போட வேண்டும்.

✦ புதுடில்லி உயிரியல் பூங்கா கூண்டில் தவறி விழுந்த இளைஞனை வெள்ளைப்புலி கொன்றது.

**– செய்தி**

'புலியை அதன் குகையில் சந்திக்கத் தயார்' என்று இனி மேலாவது மேடையில் சவால் விடுவதை நிறுத்துங்க!

## ‘முன்னோடி – பின்னோடி’ வாதங்களுக்கு மறுப்பு (11)

# ஆந்திரப் பிரிவினையின்போது பெரியார் கூறியது என்ன?

**வடநாட்டிலிருந்து தமிழகம் வந்த தலைவர்களை வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்று பெரியார் ‘குடிஅரசு’ ஏட்டில் எழுதியதை கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.**

மேலும், 8.9.1929 குடிஅரசு தலையங்கத்தில் வல்லபாய் பட்டேலின் உரைகளைக் குறித்து எழுதுகிறார். தமிழ்நாடு வந்த பட்டேல், “இங்கு பிராமண வகுப்புக்கே விரோதமாக பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பிரச்சாரமானது பிராமணர்களைத் தாக்குவதாக மாத்திரமல்லாமல் நம்முடைய ஆரிய நாகரிகத்தில் சிறந்தவற்றை எல்லாம் தாக்குவதாகத் தெரிகிறது. ஒரு பிராமணரை (திரு.இராஜ கோபாலாச்சாரியாரை) ‘சைத்தான் சொரூபம்’ என்று ஒரு சாரார் துவேஷிக்கின்றனர். இது தேசிய தற்கொலையேயாகும். வகுப்பு துவேஷத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதைக் காட்டிலும் சிறந்த தேசிய வேலை வேறு கிடையாது” என்றெல்லாம் பேசிய பட்டேலைப் பார்த்து பெரியார் எழுப்பும் கேள்வி இது தான்.

**“திராவிட தேசத்துக்கு** வந்த இவருக்கு ஆரிய தர்மத்தைப் பற்றிய பிரச்சாரத்தில் கவலை எதற்காக வேண்டும்?” என்று கேட்டுவிட்டு, இந்த நாட்டில் ஏற்பட்டிருக்க வேண்டிய சீர்திருத்தங்களுக்கு எல்லாம் இது வரையில் முட்டுக்கட்டையாக இருந்து வந்திருப்பது ஆரிய பிரச்சாரமா? அல்லது ‘பார்ப்பன துவேஷ’ பிரச்சாரமா?முதலாவது இந்த நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாதார் யோக்கியதையும், அந்தஸ்தும் இன்னது இன்னது என்று இவருக்குத் தெரியுமா?

“பார்ப்பனர்களில் சி.இராஜகோபாலாச்சாரி, சீனிவாசய்யங்கார், சந்தானம், சத்தியமூர்த்தி, வரதாச்சாரி, ஏ.ரெங்கசாமி அய்யங்கார், எம்.கே.ஆச்சாரியார் முதலியோருடைய யோக்கியதை திரு.பட்டேலுக்குத் தெரிந்தது சரியாக இருக்குமா? அல்லது திரு.ராமநாதன், திரு.ராமசாமி முதலியோர்களுக்குத் தெரிந்தது சரியாக இருக்குமா?” என்று அடுக்கடுக்காய் கேள்விகளைப் பெரியார் எழுப்புகிறார்.

ஆக, இத்தலையங்கத்தில் **“திராவிட தேசத்துக்கு’** வந்தவராக படேலைக் கூறுகிறார். அடுத்து, இந்த நாட்டில் ஏற்பட்டிருக்க வேண்டிய சீர்திருத்தத்திற்குப் பார்ப்பனர் தடை என்று கூறுவதில் “இந்த நாட்டில்” என்று குறிப்பிடுவது இந்தியாவையா? ‘திராவிட தேசம்’ என்று கூறப்பட்ட சென்னை மாகாணத்தையா? என்ற அய்யம் நமக்குள் எழக்கூடும்.

அதைத் தெளிவாக்கத்தான், அடுத்ததாக **“இந்த நாட்டிலுள்ள”** பார்ப்பனரல்லாதார் யோக்கியதையை யார் நன்கு அறிந்திருக்க முடியும்? என்ற கேள்வியை எழுப்பி பார்ப்பனர்களில் ராஜாஜி, சத்தியமூர்த்தி, சீனிவாசயங்கார் போன்றோரையும், பார்ப்பனர் அல்லாதாரில் எஸ்.இராமநாதன், ராமசாமி (இது ஈ.வெ.ராமசாமியா? அல்லது சர்.ஏ.ராமசாமி முதலியாரா? தெரியவில்லை. யாராக இருந்தாலும்) போன்றோரைக் குறிப்பிடுவதால் **“இந்த நாடு”** என மீண்டும் சென்னை மாகாணத்தை தான் பெரியார் குறிப்பிடுகிறார் என்பதை எளிதில் உணர முடியும்.

ஆக வெளிநாட்டினர் என வடநாட்டினரையும், **‘இந்த நாடு’** என சென்னை மாகாணத்தையும் குறிப்பிட்டு எழுதி, இரண்டும் வெவ்வேறு நாடுகள்தான் என்ற சிந்தனைப் போக்கு 1929-லேயே பெரியாரிடம் வெளிப்படுவதை எவர் ஒருவராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். **வடநாட்டினரை வெளிநாட்டினர்** என்று குறிப்பிடும் பெரியார், சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக அப்போது விளங்கி வந்த ஆந்திரப் பகுதியினரை எப்படிப் பார்த்தார் என்பதையும் அதே ஆண்டில் எழுதப்பட்ட மற்றொரு தலையங்கம் தெளிவுபடுத்துகிறது.

அது, “நெல்லூர் மகாநாடு” என்ற தலைப்பில் 22.9.1929 ‘குடிஅரசு’ இதழில் எழுதப்பட்டுள்ள தலையங்கமே ஆகும். அந்த தலையங்கம் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் (நீதிக்கட்சியின்) மாகாண மாநாடு நெல்லூரில் அதற்கடுத்த மாதம் நடக்க விருப்பதை ஒட்டி எழுதப்பட்டதாகும். அந்த மாநாட்டில் பார்ப்பனரல்லாதாரின் அரசியல் கட்சியான நீதிக்கட்சியில் பார்ப்பனரையும் சேர்த்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும் முயற்சி நடந்து வருவதை அறிந்த பெரியார், அம்முயற்சியை கைவிட வேண்டும் அல்லது முறியடிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு தீட்டப்பட்டதே அத்தலையங்கம்.

### ‘கண்டதைப் படிப்பவன்’

அத்தலையங்கத்தில் “இம்மகாநாடு **தெலுங்கு நாட்டில்** கூடுவது நமக்கு மிக்கப் பலவீனமென்றே தோன்றுகின்றது. ஏனெனில், தெலுங்கு நாட்டு மக்களுக்கு இந்த விஷயம் அவ்வளவு தூரம் கவலைப்படத் தக்கதாக இல்லை” என்கிறார். சென்னை மாகாணத்தில் உள்ள தெலுங்கு பேசும் பகுதி/மாவட்டங்கள் என்று குறிப்பிடவில்லை; **தெலுங்கு நாடு** என்றே குறிப்பிடுகிறார் என்பது மனத்துள் பதிய வைக்க வேண்டியதொரு செய்தி.

அதற்கான காரணத்தையும் கூறுகிறார்.” அவர்களுக்கு (தெலுங்கு நாட்டவருக்கு) இன்னும் பார்ப்பனர்-பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற விஷயம் அர்த்தமானதாகவே சொல்வதற்கில்லை. இதற்கு முக்கிய உதாரணம் என்னவென்றால் **ஆந்திர தேசத்தில்** இன்னும் காங்கிரசுக்கு மதிப்பும் ஆதரவும் இருப்பதே ஆகும்” என்கிறார். முன்பு **தெலுங்கு நாடு** என்று சொன்ன பெரியார், இவ்வரிகளில் அதை **ஆந்திர தேசம்** என்று குறிப்பிடுகிறார். மேலும், அந்த ஆந்திர தேசத்தவர்களைப் பற்றியும் விவரிக்கிறார்.

“**ஆந்திர தேசத்துப்** பார்ப்பனர் அல்லாதார்கள் இனியும் மத சம்பந்தமான புராணங்களிலும் குருட்டு நம்பிக்கைகளிலும் ஈடுபட்டவர்கள் ஆவார்கள். எவ்வளவுக்கெவ்வளவு குருட்டு நம்பிக்கைகளிலும் புளுகு புராணங்களிலும் ஈடுபட்டு இருக்கின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களை மேதாவிகள் என்றும் பெரியவர்கள் என்றும் நினைத்துக் கொண்டிருப்பவர்கள். எனவே, மூடநம்பிக்கைகளிலிருந்தும், கண்மூடி பின்பற்றும் குருட்டு நடவடிக்கைகளிலிருந்தும் என்று ஆந்திர தேசத்தவர்கள் விடுதலை பெறுகின்றார்களோ அன்று தான் அவர்கள் பார்ப்பனர்களின் மதிப்புகளிலிருந்தும், அரசியல் புரட்டுகளிலிருந்தும் விடுதலையடைய முடியும். ஆதலால், அது வரையிலும் நாம் எந்த வகையிலும் ஆந்திர தேசத்தவர்களைப் பின்பற்றுவது, மறுபடியும் குழியில் போய் விழுவதையே ஒக்கும்.

இவ்வாறெல்லாம் **தெலுங்கு நாட்டவர், ஆந்திர தேசத்தவர்** என்ற சொற்களில் அவர்களைப் பிரித்து **தனிநாட்டவராக** மட்டுமல்ல, அவர்களோடு உறவு கொள்வது கூட நம்மை மறுபடியும் பார்ப்பன, புராண, மதப் படுகுழியில் தள்ளிவிடும் என்று எச்சரிக்கவும் செய்கிறார். 1929-இல் பெரியார் கொண்டிருந்த அதே கருத்தைத் தான் 1955, 56களிலும் கொண்டிருந்தார் என்பதையும் நாம் ஒப்பு நோக்க வேண்டும்.

“பொதுவாக ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலையில்லாமல் போய் விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகமும், கேரளாவும்) பிரிவதில் இருந்து இரண்டு, மூன்று காரணங்களால் சீக்கிரத்தில் பிரிந்தால் தேவலாம் என்கிற எண்ணம் தோன்றி விட்டது..” என்று 1955 ஆம் ஆண்டில் கூறுகிறார்.

அப்படிக் கூறிய பெரியாரைத் தான், இங்குள்ள **‘தூய’** தமிழர்களும், **‘திடீர்’** தமிழ்த் தேசியர்களும் தமிழ்நாட்டில் தெலுங்கு, கன்னட, மலையாளிகள் ஆதிக்கத்தை உருவாக்கியவர்; காத்து நின்றவர் என்றெல்லாம் தூற்றித் திரிகின்றனர். ஆந்திராவோடு, கன்னடியனும், மலையாளியும் போய்விட்டால் தேவலாம் என்று ஏன் பெரியார் விரும்பினார். அதையும் அவரே கூறுகிறார்: “ஒன்று கன்னடியனுக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ, இன சுயமரியாதையோ, பகுத்தறிவு உணர்ச்சியோ இல்லை என்பதாகும். எப்படியெனில் அவர்களுக்கு வருணாசிரம வெறுப்பு கிடையாது. சூத்திரன் என்பது பற்றி இழிவோ, வெட்கமோ பெரும்பாலானோருக்குக் கிடையாது. மத மூடநம்பிக்கைகளில் மூழ்கி விட்டவர்கள். இரண்டு அவர்கள் இருவரும் மத்திய ஆட்சி என்னும் வடவர் ஆட்சிக்குத் தங்கள் நாடு அடிமையாக இருப்பது பற்றியும் அவர்களுக்கு சிறிதும் கவலை இல்லை. ஆகவே, இவ்விரு துறைகளிலும் நமக்கு எதிர்ப்பான எண்ணம் கொண்டவர்கள் - எதிரிகள் என்றே சொல்லலாம்.” என்றெல்லாம் விளக்கம் கொடுத்ததோடு பெரியார் நின்று விடவில்லை. 1953-இல் ஆந்திரா பிரிந்ததற்குப் பின்னரும் சென்னை மாகாணத்தின் 14 மாவட்டங்களில் ஒரு கன்னட மாவட்டமும் (தென் கன்னடம் - South Canara) ஒரு மலையாள மாவட்டமும் (மலபார் மாவட்டம்) இருந்தது. அந்த இரண்டு மாவட்டங்களால், தமிழர்கள் உரிமைக்கு, தமிழ்நாட்டு உரிமைக்கு ஏற்பட்டு வந்த இன்னல்கள், இடையூறுகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

“மூன்றாவது.. அப்படி 14-இல் 2, 7-இல் ஒரு பாகஸ்தர்களாக இருந்து கொண்டு தமிழ்நாட்டின் அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் முதலியவைகளில் 3-இல் 2 பாகத்தை அடைந்து கொண்டு, இவை கலந்து இருப்பதால் நம் நாட்டை “தமிழ்நாடு” என்று சொல்வதற்கு இடமில்லாமல் தடுத்து ஆண்டு கொண்டிருக்கிறார்கள்” என்கிறார் பெரியார். அதாவது, தமிழர், தமிழ்நாட்டு உரிமைகளில் 3இல் 2 பங்கை அனுபவிக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, இந்த இரண்டு மாவட்டம் மட்டும் நம்மோடு இருப்பதால் நமது நாட்டை “ தமிழ்நாடு” என்றுகூட கூற முடியாமல் “சென்னை மாநிலம்” என்று சொல்ல வேண்டி இருக்கிறதே என்பதற்காகவும் சீற்றம் கொள்கிறார்.

தொடர்ந்து, “இதை நான் ஆந்திரா பிரிந்தது முதல் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறேன். ஆதலால், இவர்கள் சீக்கிரம் ஒழியட்டும் என்றே கருதி வந்தேன். அந்தப்படி நல்ல சம்பவமாக பிரிய நேர்ந்துவிட்டார்கள். ஆதலால் இந்த பிரிவினையை வரவேற்கிறேன்”. (விடுதலை அறிக்கை 12.10.1955) இவ்வாறான சிந்தனையோடிருந்த பெரியார் கன்னடராம், பிற திராவிட மொழிக் குடும்பத்தினர் ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டில் உண்டாக்கியவராம். சரி, ஏதோ தனது கழகத் தோழர்கள் மட்டும் படிக்கும் தனது ஏட்டில் அறிக்கையோடு விட்டுவிட்டாரா பெரியார்? இல்லை, தனது அமைப்பான திராவிடர் கழகத்தின் நடுவண் குழுவைக் கூட்டி, ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி, திராவிடர் கழகத்தின் அதிகாரப் பூர்வமான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறார்.

திராவிடர் கழகத்தின் மத்திய செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தைக் காண்போம். “வடநாட்டானுடைய ஆட்சி ஆதிக்கத்திலிருந்து முழுச் சுதந்திரத்துடன் விலக வேண்டும் என்ற முயற்சிக்கு ஒத்துழைக்க முன்வர இஷ்டப்படாத ஆந்திரா, கேரளா, கன்னட நாடுகள் திராவிட நாட்டிலிருந்து விலக்கமடைந்துவிட்டதற்கு இக்கமிட்டி மகிழ்ச்சி அடைவதோடு, இனி தமிழ்நாடு முழு சுயேச்சை விடுதலைக்கு அதிதீவிரமாக பாடுபட வேண்டியதென இக்கமிட்டி தீர்மானிக்கிறது. (விடுதலை: 26.10.1956) என்பதே அந்தத் தீர்மானம். தீர்மானத்தோடு பெரியார் மனநிறைவடைந்துவிடவில்லை. 1938-இல் ‘தமிழ்நாடு தமிழர்க்கே’ என்ற முழக்கத்தை முன் வைத்திருந்தாலும், அப்போதைய அரசியல் பரப்பால் ஒருங்கிணைந்திருந்த சென்னை மாகாணத்தில் இணைந்திருந்ததோடு மட்டுமின்றி, பார்ப்பனர் அல்லாத மக்களின் அமைப்பான நீதிக்கட்சியிலும் கலந்திருந்த மலையாள, கன்னட, தெலுங்கு மக்களின் ஒத்துழைப்புக்காக 1939-இல் அவர்களையும் இணைக்க ‘திராவிடநாடு திராவிடருக்கே’ என்ற முழக்கத்தை முன்வைத்து இயங்கி வந்தார் பெரியார்.

ஆனால், 1953-இல் ஆந்திரமும், 1956-இல் கன்னட, மலையாளப் பகுதிகளும் தனியாகப் பிரிந்து போன பின்பும், அம்முழக்கத்தை ஏன் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் எனக் கருதி முழக்கத்தை ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என மாற்றியமைத்து, அதையே தன் வாழ்நாள் இறுதிவரை கைக் கொண்டிருந்தார்.

தொடர்ந்து ‘திராவிடநாடு திராவிடருக்கே’ என்ற முழக்கத்தை வைத்துக் கொண்டு இயங்கிய திராவிட

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 01.10.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# தி.மு.க. கேட்ட 'திராவிட நாட்டை' விமர்சித்தவர் பெரியார்

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*முன்னேற்றக் கழகத்தை இது குறும்பல்லவா? நமது வேலைகளைக் குலைப்பதல்லவா? குறுக்குசால் ஓட்டுவதல்லவா? என்று கடுமையாகச் சாடியதையும் இக்கட்டுரையின் முன் பகுதிகளில் பார்த்தோம். ஆக, 1929-ஆம் ஆண்டில் பெரியாரின் பார்வையில், உத்திர பிரதேசம், குஜராத், இராஜஸ்தான், இன்றைய சட்டீஸ்கர் ஆகியவற்றை வெளிநாடாகவே கருதி வந்திருக்கிறார். அதோடு, பிற்காலத்தில் தமிழ்நாட்டோடு இணைந்து நீண்ட நெடுங்காலம் ஒரே அரசியல் அலகாய் இயங்கி வந்த கன்னடர், தெலுங்கர், மலையாளிகள் ஒழிந்தால் தேவலாம் என்று கூறி வந்திருக்கிறார். 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை 1973-ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ந்த தன் சாவு வரை தொடர்ந்து கைக் கொண்டிருந்துள்ளார். ஆனால், நெடுஞ்செழியன் தனது 'தி.மு.க.' என்ற நூலில் தவறுதலாக, எவ்வித ஆதாரத் துணையுமின்றி, நினைவுப் பிசகாக குறிப்பிட்டுள்ள ஒற்றைக் குறிப்பைக் கையிலெடுத்துக் கொண்டு, தமிழறிஞர்களே 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை முன் வைத்தார்கள் என குதூகலமாக குறிப்பிடும் தோழர் மணியரசன் தொடர்ச்சியாகத் தங்கள் வாழ்நாள் இறுதி வரை கூட வேண்டாம், 1938-க்குப் பிறகு தமிழ்நாட்டு விடுதலை குறித்து, அந்த தமிழறிஞர்கள் பேசியதை எடுத்துக் காட்ட முடியுமா என்று சவால் விட்டுக் கேட்க விரும்புகிறோம். சரி, 1929-இல் கூறியதன் தொடர்ச்சி உண்டா? உண்டு. அவற்றையும் பார்ப்போம்.*

*சேலத்தில் நடைபெற்ற வன்னியகுல சத்திரியர் மாநாட்டில் பெரியார் ஆற்றிய சொற்பொழிவில் அவர் குறிப்பிடும் ஒரு செய்தி நாம் விவாதித்துக் கொண்டுள்ள செய்தி குறித்த அவர் பார்வையை விளக்குகிறது.*

*"இந்தியா ஒரு நாடு என்று. அதனால் தானே இந்தியா முழுமையும் பற்றிப் பேச நமக்கு உரிமை உண்டு. இப்போது இந்தியா ஒரு நாடாக இருக்கின்றதா? நீங்களே யோசித்துப் பாருங்கள்! சாதிகள் காட்சி சாலையாக, மத கண்காட்சி சாலையாக, பாஷைகள் கண்காட்சி சாலையாக, சாமிகள் காட்சி சாலையாக இருக்கின்றதே ஒழிய வேறு என்னமா யிருக்கின்றது? இந்த நிலையிலுள்ள இந்தியா விடுதலையோ முன்னேற்றமோ அடைவது என்பது சாத்தியமானதாகுமா? என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்" என்பதே அது. (குடிஅரசு 01-06-1930)*

*இதன் வழியாக பெரியார் கூறவரும் கருத்துகள் தான் என்ன? முதலில் இந்தியா என்பது ஒரே நாடு அல்ல என்று கூறுகிறார். அது பல நாடுகள் சேர்ந்த ஒரு நிலப்பரப்பு என்பதே அவர் கருத்து. இந்தியா ஒரே நாடு என்றால்தானே நாம் அதுபற்றி, அதாவது, இந்தியா முழுமையையும் பற்றிப் பேசமுடியும் என்ற சொற்கள் இந்தியா முழுமையையும் பற்றிப் பேசமுடியாது; தமிழ்நாடாகிய நமது நாட்டைப் பற்றி வேண்டுமானால் பேசலாம் என்ற கருத்தைதானே அது காட்டுகிறது !*

*அது மட்டுமல்ல, வேறு வேறான பலவற்றின் தொகுப்பாக விளங்கும் கண்காட்சி சாலை போன்றே இந்தியா உள்ளது. அதாவது பல்வேறு சாதிகளாய் உள்ளவற்றின் தொகுப்பாக, மதங்களின் தொகுப்பாக மட்டுமல்ல; பல்வேறு மொழிகளின் (பாஷைகளின்) தொகுப்பாகவும் இந்தியா விளங்குகிறது என்பதைத் தான் அவர் குறிப்பிடுகிறார். அதாவது பல்வேறு மொழிகளைப் பேசும், பல்வேறு மொழிவழி தேசிய இனங்களைக் கொண்டதுதான் இந்தியா என்ற கருத்தை 1930-இலேயே அவர் கொண்டிருந்தார் என்பதைத் தானே இது காட்டுகிறது!*

*அடுத்து 1936-ஆம் ஆண்டுக்கு வருவோம். 1936-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ஆம் நாள் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் திருநாள் விழா நடைபெறுகிறது. பொங்கல் விழாவையொட்டி நடைபெற்ற அவ்விழாவில் பெரியார், " தீபாவளி போன்ற மூடநம்பிக்கையும், சுயமரியாதை அற்றதும், ஆபாச மானதுமான பண்டிகைகளைக் கொண்டாடுவதைவிட இப்படி தமிழ்த் திருநாள் என்று தமிழ்மக்கள் கூட்டுறவுக்கும், மகிழ்ச்சிக்கும் கொண்டாட்டத்துக்கும் அனுகூலமாகத் திருநாள்களைப் பரப்பவேண்டும். நமது பெண்களும் பகுத்தறிவும், சுயமரியாதையும் இருந்தாலும் ஒரு திருநாள் வேண்டியிருக்கிறதால், தீபாவளியை யும், மதப் பண்டிகைகளையும் கொண்டாட ஆசைப்படுகிறார்கள்" என்று பொங்கலை தமிழ்த் திருநாள் என ஒரு மாற்று விழாவாகக் கொண்டாடுமாறு பரிந்துரைத்ததும் அக்கூட்டத்தில் தான்.*

*அதே கூட்டத்தில் இந்தியா குறித்தும் பேசுகிறார். "ஷேக்ஸ்பியர்வேண்டுமா? இங்கிலாந்துவேண்டுமா? என்றால் இங்கிலீஷ் மகனே ஷேக்ஸ்பியர் வேண்டும் என்பானாம். நாம் எதைக் கேட்பது?* ***இந்தியா வேண்டுமா? கம்ப இராமாயணம் வேண்டுமா?*** *என்றால் உண்மைத் தமிழ்மகன் என்ன சொல்லுவான்? இரண்டு சனியனும் வேண்டாம் என்றுதானே சொல்லுவான்" என்கிறார் பெரியார்.*

*இதில் முதல் கேள்விக்கு வெறுமனே இங்கிலீஷ் மகன் என இங்கிலாந்தின் குடிமகனைக் குறிப்பிட்டவர், இரண்டாவது கேள்விக்கு "உண்மைத் தமிழ்மகன்" என்று பிரித்துக் கூறுகிறார். அதாவது உண்மையான தமிழ்நாட்டினர் எவர் ஒருவரும் தமிழரை இழிவுபடுத்தும் கம்பராமாயணத்தை மட்டுமல்ல; தமிழரை அடிமைப்படுத்தும் 'இந்தியா' என்ற அரசியல் கட்டமைப்பையும் ஏற்க மாட்டார்கள் என்பதையே கூறுகிறார். ஆக, சுயமரியாதையுள்ள தமிழர் 'இந்தியா' வில் இருக்க விரும்பமாட்டார்கள் என்பதன்வழி தனித் தமிழ்நாட்டை விழைவது தான் இதன் உள்ளடக்கம் என்பதை அறிய முடியும். இதுவே 1936-ஆம் ஆண்டில் இந்தியா, தமிழ்நாடு குறித்து பெரியார் கொண்டிருந்த நிலைப்பாடு ஆகும்.*

*அடுத்ததாக இந்தி திணிப்பு குறித்த இராஜாஜி அரசின் கருத்துகள் வெளிவரத் தொடங்கிய 1937-ஆம் ஆண்டின் நிலைப்பாடுகளைக் குறித்துப் பார்ப்போம்.*

*25.9.2014-ஆம் நாளிட்ட 'பெரியார்முழக்கம்' இதழில் 1937 அக்டோபரில் நடைபெற்ற சென்னை பொதுக் கூட்டத்திலும், அதே அக்டோபரில் திருநெல்வேலியில் தமிழ்ப் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் 12.11.1937 அன்று திருவையாறு செந்தமிழ்க் கல்லூரி சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் ஆந்திரா தனியாகப் பிரிய முயல்வதைப் போல தமிழருக்கு என்றும் தனியாக தமிழ்மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானங்களை நாவலர் சோமசுந்தர பாரதியார் முன்மொழிந்த செய்திகளைப் பார்த்தோம். மேற்கூறப்பட்ட மூன்று கூட்டங்களுக்கும் முன்னதாக 19.91937 அன்று ஈரோடு கொல்லம்பாளையத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பெரியார் ஆற்றிய உரையைப் பார்ப்போம்.*

*"இந்தியா நம் தாய்நாடு என்று சொல்வதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? இந்தியா என்கிற பெயர் இந்த நாட்டுக்கு எப்போது ஏற்பட்டது? இதற்கு எல்லை என்ன? பர்மா போன வருஷம் பிரிந்து விட்டது. அதற்கு முன் இலங்கை பிரிந்துவிட்டது. அதற்கு முன் மலேயா பிரிந்து விட்டது. அதற்கு முன் நேப்பாளம், புத்தான் (பூட்டான்) பிரிந்து விட்டது. இப்படியே எவ்வளவோ பிரிந்து எவ்வளவோ சேர்ந்திருக்கிறது. இந்த நிலையில் தாய்நாடு எது? தகப்பன் நாடு எது? புராணகாலத்தில் 56 நாடுகள் இருந்ததே. அப்போது ஒரு நாட்டுக்காரன் ஒரு நாட்டைத் தாய்நாடு என்று கருதினானா?*

*இப்போதும் நேற்று சட்டசபையில் ஆந்திரர்கள் தங்களைத் தமிழ்நாட்டிலிருந்து பிரித்துத் தனி மாகாணம் ஆக ஆக்க வேண்டுமென்கிறார்கள். மாகாண சுதந்திரம் கொடுத்து, மாகாணத்திற்கு மாகாணம் சர்வ சுதந்திரமாய் தன்தன் காலிலேயே நிற்கும்படியான நிலைமை ஏற்பட்டு, ஐரோப்பா தேசத்தைப் போல் பாஷை வாரியாக தனித்தனி நாடாகப் பிரிந்து கொண்டால் இந்தியா எப்படி எல்லோருக்கும் தாய்நாடாகும்? நேபால் நம் ஒரு ஜில்லா போலுள்ள விஸ்தீரணம். அவர்கள் இந்தியாவைத் தாய்நாடென்பார்களா? சையாமில் (இன்றைய தாய்லாந்து )பெரிதும் இந்து மதம் தான். அவர்கள் இந்தியாவைத் தாய்நாடென்பார்களா?*

*ஐரோப்பாவில் நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஹாலண்ட், பெல்ஜியம், போர்த்துக்கல், கிரீஸ் ஆகிய நாடுகள் நமது நான்கு ஜில்லா, மூன்று ஜில்லா, இரண்டு ஜில்லா விஸ்தீரணமுள்ளவை. இவர்கள் எல்லோரும் தங்கள் நாட்டைத் தாய் நாடென்பார்களே ஒழிய, ஐரோப்பாவைத் தாய்நாடென்பார்களா? ஆகவே, தமிழ் நாட்டவர்கள், திராவிடமக்கள் எந்தக் காரணம் கொண்டு இந்தியாவை தாய் நாடென்று கூறவேண்டும் என்பதும், இந்தியா பூராவும் எப்போதும் ஒரே குடையின் கீழ் இருக்கவேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை" என்கிறார் பெரியார்.*

*இவ்வுரைப் பகுதி வெளிப்படுத்தும் செய்திதான் என்ன? ஒரு மாவட்ட அளவிலான பரப்பு கொண்ட நேபாளம் தனிநாடாக இருக்கமுடியும்போது, இரண்டு, மூன்று, நான்கு மாவட்டங்களின் பரப்புடைய பல ஐரோப்பிய நாடுகள் தனிநாடுகளாக இருக்க முடியும் என்கிறபோது, தமிழ்நாடு மட்டும் ஏன் தனிநாடாக இருக்கமுடியாது? என்பது ஒன்று.*

*மொழிவழியாக அப்போது கேட்கப்பட்டு வந்த ஆந்திர மாநிலம் போல சர்வ சுதந்திரமான வாய்ப்போடு அனைத்து மொழிபேசும் பகுதிகளும் தனிநாடுகள் ஆகவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் ஆவலும் மற்றொன்று.*

*குறிப்பாக தமிழ்நாட்டவர் எதற்காக இந்தியாவை தாய்நாடென்று கூறவேண்டும்? தேவையில்லையே என்ற குறிப்பு மற்றொன்று ஆகிய மூன்று செய்திகளை அழுத்தமாக உரைக்கும் பகுதிகளல்லவா இவை?*

*அதே உரையின் தொடர்ச்சியாகக் கூறும் செய்திகளையும் பார்ப்போம்.*

*"இந்தியா ஒருநேஷனா? அதற்கு பாஷை எது? மதம்எது? இந்தியாவில் எத்தனை மதம்? எத்தனை ஆச்சார அனுஷ்டானம்? இந்து மதத்தால் இந்தியா நேஷனாயிற்று என்றால் அதாவது நேஷனுக்கு மதமே பிரதானம் என்றால் இஸ்லாமியருக்கும், கிறித்துவருக்கும், பௌத்தருக்கும், பார்சிகளுக்கும் இந்தியா நேஷனாகுமா? எதைக் கொண்டு அவர்கள் இந்தியாவை நேஷன் என்பது. பாஷையைக் கொண்டு நேஷன் பிரிப்பது என்றால் மாகாணம் ஒன்றுக்கு நான்கைந்து நேஷன் ஆகிவிடாதா?" என்ற கேள்விகளை எழுப்புகிறார் பெரியார்.*


*தொடர்ச்சியாக, "மதராஸ் ஒரு நேஷன் அல்லவென்றும், அது தனித்து இருக்கமுடியாது என்றும் கே.பி.பிள்ளை சொன்னார். மதராஸ் ஒரு தனி நேஷனாய் இருந்தது. இன்றும் இருக்கிறது" என்றுகுறிப்பிடுகிறார்.*

*எல்லாம் சரி. அதற்குத் தீர்வுதான் என்ன? அதையும் அதே உரையின் பிற்பகுதியில் கூறுகிறார் பெரியார். "இன்றைய அரசியலைப் பார்க்கின்றபோது, எக்காரணம் கொண்டாவது, எப்பாடுபட்டாவது, நம் நாட்டை வடநாட்டு சம்பந்தத்திலிருந்து தனியாய் பிரித்துக் கொண்டால் ஒழிய நமக்கு நாட்டு விடுதலையோ, மானமோ ஏற்படப் போவதில்லை". இதுதான் பெரியார் கூறும் தீர்வு. 19.9.1937-இல் ஆற்றிய இவ்வுரை 26.9.1937 நாளிட்ட 'குடிஅரசு' இதழில் வெளியிடப்பட்டுள்ளது.*

*(தொடரும்)*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 2nd October 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | அக்டோபர் 09, 2014 | புரட்சி 13 | முழக்கம் 39 | விலை: ரூ.3.00


# சென்னை 'தூர்தர்ஷன்' அலுவலகம் முற்றுகை, கழகத்தினர் கைது!

இந்திய அரசு கட்டுப்பாட்டிலுள்ள 'தூர்தர்ஷன்' தொலைக்காட்சி, நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ். தசரா விழாவில் அதன் தலைவர் மோகன் பகவத் உரையை நேரடியாக ஒன்றரை மணி நேரம் ஒளிபரப்பியது. அக்டோபர் 3ஆம் தேதி இந்த செய்தி வந்தவுடன் அடுத்த நாள் அக்.4 ஆம் தேதியே சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம், சென்னை தூர்தர்ஷன் முன் முற்றுகைப் போராட்டத்தை அறிவித்தது. தூர்தர்ஷன் வாயிலிலேயே இந்தப் போராட்டம் நடந்தது. ஏராளமான போலீசார் குவிக்கப் பட்டிருந்தனர். தூர்தர்ஷன் வரலாற்றிலேயே ஆர்.எஸ்.எஸ். தலைவரின் பேச்சு நேரடியாக ஒளிபரப்பப்பட்டது இதுவே முதன்முறையாகும்.

'தூர்தர்ஷன்' - ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இதற்கான தலைமை இயக்குனர் மத்திய அமைச்சரவை யால் நியமிக்கப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒளிபரப்பை பிரதமர் மோடியும் தொலைக்காட்சி இயக்குனரும் நியாயப்படுத்தியுள்ளனர். "சமூகத்துக்கு நல்ல செய்திகளை தந்ததால் ஒளிபரப்பப்பட்டது" என்று மோடி கூறுகிறார். நேரடி ஒளிபரப்புக்கு சென்ற தூர்தர்ஷன் ஆர்.எஸ்.எஸ். தலைவர் எந்தக் கருத்துகளைப் பேசப் போகிறார், அது சமூகத்துக்கு நன்மையானதா? தீமையானதா என்பதை முன்கூட்டியே எப்படி தெரிந்து கொண்டது? என்ற கேள்விக்கு பதில் இல்லை. அதேபோல் சமூகத்துக்கு நன்மை தரும் கருத்துகளை நக்சல்பாரிகளோ அல்லது இஸ்லாமியர் அமைப்புகளோ பேசினால், அதை நேரடியாக ஒளிபரப்புவார்களா? இந்தக் கேள்விகளுடன் கழகம் போராட்டத்துக்கு தயாரானது.

4.10.2014 மாலை 4 மணியளவில் தூர்தர்ஷன் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடந்தது. தேசிய முக்கியத்துவம் நிறைந்த குடியரசுத் தலைவர், பிரதமர் உரைகள் மற்றும் குடியரசு, சுதந்திர நாள் விழாக்களை மட்டும் நேரடி ஒளிபரப்பு செய்து வரும் தூர்தர்சன், அதற்கு இணையாக ஆர்.எஸ்,எஸ். தலைவர் உரையை ஒளிபரப்புவது அரசின் மதச்சார்பின்மை கொள்கைக்கு எதிரானதாகும். இந்தியாவில் மூன்றுமுறை தடை செய்யப்பட்ட அரசியல் சட்ட அங்கீகாரம் இல்லாத அமைப்பின் நிகழ்ச்சியை நேரடி ஒளிபரப்பு செய்வது அரசு எந்திரத்தை மதவாத அரசியலுக்கு முறை கேடாகப் பயன்படுத்துவதாகும் என்று செய்தியாளர்களிடம் விடுதலை இராசேந்திரன் விளக்கினார்.




மக்கள் வரிப்பணத்தில் நடத்தப்படும் அரசு தொலைக்காட்சியை ஆர்.எஸ்.எஸ். தொலைக்காட்சியாக மாற்றுவதை எதிர்த்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இதில் கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா உமாபதி, வழக்கறிஞர் துரை அருண் மற்றும் இளந் தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினரும் பங்கேற்றனர். 60பேர் கைது செய்யப்பட்டு திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

## வினாக்கள்... விடைகள்...!

+ காவிரியை எடுத்துக் கொள்; எங்கள் அம்மாவை கொடுத்து விடு. – அ.தி.மு.க. சுவரொட்டி

அம்மா விடுதலைக்கும் லஞ்சம் தான் தருவாங்க போல; அப்படி ஒரு கொள்கை உறுதி!

+ காந்தி ஜெயந்தியில் பிரதமர், அமைச்சர்கள், பா.ஜ.க. தலைவர்கள் துடைப்பம் எடுத்து பொதுவிடங்களில் குப்பைகளை கூட்டினார்கள். – செய்தி

இனி, அடுத்த 'காந்தி ஜெயந்தி' வரும்வரை 'தீண்டப்படாத' துப்புரவுத் தொழிலாளர்கள் தான் துடைப்பத்தை 'தீண்டி'க் கொண்டிருக்க வேண்டும்.

+ தில்லை நடராசன் கோயில் உண்டியல் வசூல் உரிமையை உச்சநீதிமன்ற தீர்ப்பையேற்று அரசு மீண்டும் தீட்சதர்களிடமே ஒப்படைத்தது. – செய்தி

அப்படியே தில்லை நடராசன் கோயிலையும் தீட்சதர்களுக்கே எழுதிக் கொடுத்துடுங்க; 'பகவா னுக்கு' நன்னா தொண்டு செய்வா...

+ ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்ததில் எந்தத் தவறும் இல்லை. – தூர்தர்ஷன்

மதக் கலவரம் செய்யும் போதும் சொல்லி அனுப்புங்க; கேமிராவை தூக்கிக்கிட்டு ஓடி வந்துடறோம்!

+ கடவுளுக்கே தண்டனையா? திரைப்பட நடிகர்கள் போராட் டத்தில் 'பேனர்'. – செய்தி

என்ன செய்யுறதுங்க! 'கடவுள்' கவர்னர் மாளிகையில் 'எழுந்தருளி' பதவிப் பிரமாணம் எடுக்காமலிருந்தால் இப்படி ஒரு தொல்லையே வந்திருக்கா துங்களே. தண்டனையும் 'கடவுள் செயல்' தான்னு நினைச்சுக்குங்க...

+ 'அம்மா'வை விடுதலை செய்ய பல்வேறு ஊர்களில் யாகம். – செய்தி

அநேகமாக, இந்த யாகங்கள் எல்லாம் தண்டனைக்கு முன்பு நடத்தப்பட்ட யாகங்கள், பயனற்றுப் போய்விட்டதை வன்மையாகக் கண்டித்து நடத்தப்படுற யாகங்களாகத் தான், இருக்கும் போலிருக்கு!

+ ஆம்னி பேருந்து பயணிகளிடம் கொள்ளை அடித்த வட மாநில கும்பல் கைது. – செய்தி

அதே பயணிகளிடம் கட்டணக் கொள்ளை அடிக்கும் சொந்த மாநிலக் கும்பல் எப்போது பிடிபடப் போவுது சார்?

## பிரதமரையே மாற்றியது 'தூர்தர்ஷன்'

ஆர்.எஸ்.எஸ். தசரா கொண்டாட்டத்தையும் அதன் தலைவர் மோகன் பகவத் பேச்சையும் நேரடியாக ஒளிரப்பியது அரசு தொலைக்காட்சியான 'தூர்தர்ஷன்'. இதற்குப் பதிலளித்த தொலைக்காட்சி இயக்குநர், "ஆர்.எஸ்.எஸ். தலைவர் உரையைக் கேட்பவர் எண்ணிக்கை அதிகம் என்பதால், தொலைக்காட்சியின் பார்வையாளர் எண்ணிக்கையை உயர்த்தவே ஒளிபரப்பினோம்" என்று கூறியுள்ளார். உண்மையில் 'தூர்தர்ஷன்' பார்வையாளர் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு முயற்சிக்கிறதா? அதன் யோக்கியதை என்ன?

ஒரு தமிழ் நாளேட்டில் வந்துள்ள தலையங்கம் இது:

"நியூயார்க்கில் மோடி பங்கேற்ற நிகழ்ச்சிகள் பற்றிய செய்தியை ஒளிபரப்பியது தூர்தர்ஷன். மோடியின் கோப்புப் படங்களை ஒளிபரப்புவதற்குப் பதில், முந்தைய பிரதமர் மன்மோகன் சிங்கின் கோப்புப் படங்களோடு! தூர்தர்ஷன் செய்தி அலைவரிசையின் இந்த அபத்தம் ஒரு முறை இரு முறை அல்ல; பல முறை தொடர்ந்தது. பார்வையாளர்கள் தலையில் அடித்துக் கொண்டு, தொலைக்காட்சி நிலையத்துக்கே தொடர்பு கொண்டு பேசிய பின் மாற்றியிருக்கிறார்கள். அமெரிக்க ஊடகங்களுக்கு இப்போது இதுவும் ஒரு செய்தி. அப்படியானால், செய்திகள் ஒளிபரப்பாகும்போது செய்திக் குழுவினர், தூர்தர்ஷன் அதிகாரிகள் யாரேனும் அதைப் பார்க்கிறார்களா, இல்லையா?

சில நாட்களுக்கு முன்புதான் சீன அதிபர் ஜி ஜின்பிங் இந்தியா வந்தபோது, அவருடைய பெயரைச் சரியாக உச்சரிக்கத் தெரியாமல் ஜி (XI) என்பதை ரோமன் எழுத்தாக நினைத்துக் கொண்டு 'லெவன் ஜின்பிங்' என்று வாசித்து, சீன ஊடகங்களுக்குச் செய்தி பரிமாறினார் தூர்தர்ஷனின் செய்தியாளர். விஷயம் அம்பலமானதும் ஒப்பந்த அடிப்படையிலான பணியில் இருந்தவரை வேலையிலிருந்து நீக்கி, கதையை முடித்தார்கள்.

தூர்தர்ஷனின் 'தேசிய சேவை'யின் தரம் மட்டும் அல்ல; 'உள்ளூர் சேவை'யின் தரமும் இப்படித்தான் இருக்கிறது. ஜெயலலிதா பதவி பறிக்கப்பட்ட அன்றைய இரவு, ஒரு மாநிலமே ஸ்தம்பித்திருந்தது. எல்லாத் தொலைக்காட்சிகளும் விடிய விடிய செய்திகளை உடனுக்குடன் கொடுத்துக் கொண்டிருந்தன. மறுநாள் காலை 7 மணி தூர்தர்ஷன் தமிழ்ச் செய்தியிலோ ஜெயலலிதா வழக்கு, சிறைவாசம், தமிழகத்தின் நிலை தொடர்பாக ஒரு வரி இல்லை. காரணம் என்ன? அச்சமா, அலட்சியமா, இது செய்தியே இல்லை என்ற முடிவா? எதுவாக இருந்தாலும் அது தவறு தானே? யாருக்காகச் செய்தி அளிக்கிறார்கள்?

தூர்தர்ஷனின் 'ரேட்டிங்' உயர்த்தும் யோக்கியதை இதுதான்.

– சென்னை தொலைக்காட்சி முற்றுகைப் போராட்டத்தில் விடுதலை இராசேந்திரன்

# அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜையை நிறுத்தக் கோரி கழகம் ஆர்ப்பாட்டங்கள்

### திருச்சி ஆர்ப்பாட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். குழப்பம்

தலைமை கழக அறிவின்படி 29.9.2014 திங்கள் மாலை 5 மணிக்கு திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் திருச்சி மரக்கடை அருகில் அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை நடத்துவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருவரங்கம் நகரத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து தலைமையில், மாவட்டத் தலைவர் மீ.இ. ஆரோக்கியசாமி, மாவட்ட செயலாளர் வே.கந்தவேல் குமார், வழக்கறிஞர் சந்துரு மற்றும் ஆதித் தமிழர் பேரணி மாநில மகளிரணி பொதுச் செயலாளர் செங்கை குயிலி ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட அமைப்பாளர் குணா, திருவரங்க நகர செயலாளர் அசோக், முருகானந்தம், திராவிட மணி, மாணவர் பாரத், மாநகர அமைப்பாளர் தமிழ்முத்து, ஆதித் தமிழர் பேரவை மலர் மன்னன், அருந்ததி மைந்தன், கமலா அம்மாசி மேலும் பெண்கள் உள்பட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஒருங்கிணைப்பு: மண்டல அமைப்புச் செயலாளர் த. புதியவன்.

ஆர்ப்பாட்ட முடிவில் 4 ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் ‘பாரத் மாதா கீ ஜே’ என முழக்கமிட்டனர். காவல் துறையினர் உடனடியாக அவர்களை கைது செய்தனர். “மதவெறி அழியட்டும்-மனித நேயம் மலரட்டும்” என்ற முழக்கத்தோடு தோழர்கள் அவர்களை எதிர்கொண்டனர்.

### நாகர்கோவில்

அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை மற்றும் எவ்வித மத விழாக்களும் கொண்டாடக் கூடாது என்ற அரசாணையை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி ஆர்ப்பாட்டம், நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழக்குரைஞர் வே.சதா தலைமையிலும் மாவட்ட செயலாளர் சூசையப்பா முன்னிலையிலும், மாவட்ட தலைவர் தமிழரசன், சு.க.சங்கர் (மாநில கொள்கைப் பரப்பு செயலாளர்-ஆதித் தமிழர் பேரவை), போஸ் (மாவட்ட தலைவர் ஆதித்தமிழர் பேரவை), குமரேசன் (மாவட்ட செயலாளர் ஆதித் தமிழர் பேரவை), அம்பேத் ரமேஷ் (ஆதி பேரவை), நீதியரசர் (மாவட்ட தலைவர் நேஷ்னல் பேந்தர்ஸ் பார்ட்டி), வழக்கறிஞர் ஜவஹர் (மாவட்ட தலைவர் பகுஜன் சமாஜ் கட்சி), வழக்கறிஞர் ஜெரால்டு, வழக்கறிஞர் சக்திவேல், வழக்கறிஞர் சிவராச பூபதி (மனித உரிமைகள் பாதுகாப்பு இயக்கம்), பந்தல் முருகன், பெரியார் பிஞ்சுகள் கீர்த்தனா, பிரபா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல்

திராவிடர் விடுதலைக் கழக தோழர்களின் முயற்சியால் நாமக்கல் மாவட்டம் முழுவதும் உள்ள எல்லா காவல் நிலையங்களிலும் ஆயுத பூசை தடுக்கப்பட்டது. முன்னதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அரசு அலுவலகங்களில் குறிப்பாக காவல் நிலையங்களில் ஆயுத பூஜை கொண்டாடக் கூடாது என்பதை வலியுறுத்தி அதற்கான அரசாணை இணைத்து, கடிதம் தொலை நகலில் அனுப்பட்டது. அதன் காரணமாக நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு, பள்ளிபாளையம், குமாரபாளையம், மல்ல சமுத்திரம் உள்ளிட்ட காவல் நிலையங்களில் முந்தைய காலங் களில் படுவிமரிசையாக கொண்டாடப்படும் ஆயுத பூஜை இந்த ஆண்டு கொண்டாடப்பட வில்லை. மாவட்ட செயலாளர் வைரவேல், மாவட்ட தலைவர் சாமிநாதன் மற்றும் அந்தந்த பகுதி தோழர்கள் பணியாற்றினார்கள்.

### சேலத்தில்

அரசு அலுவலகங்களில் மதவழிபாடுகள், ஆயுத பூஜை கொண்டாட்டங்களைத் தடுக்கக் கோரி கழகம் சார்பாக சேலம் மாநகரில் கண்டன ஆர்ப்பாட்டம் 29.9.2014 அன்று காலை 11 மணியளவில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது.

*அரசு அலுவலகமா? கோயில் கூடாரமா?*
*பூஜை எதற்கு? பூஜை எதற்கு?*



*காவல் நிலையத்தில் பூஜை எதற்கு?*
*குற்றத்தை குறைக்கவா? குற்றத்தை பெருக்கவா?*

என்ற ஒலிமுழக்கங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் க.சக்திவேல் தலைமை தாங்கினார். சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், மாநகர தலைவர் மூனாங்கரடு சரவணன், மாநகர செயலாளர் பரமேஸ்குமார், மேற்கு மாவட்ட தலைவர் சூரிய குமார், மாவட்ட செயலாளர் கோவிந்தராஜூ, மேற்கு மாவட்ட அமைப்பாளர்கள் அண்ணாதுரை, டைகர் பாலன், கிழக்கு மாவட்ட அமைப்பாளர் முத்து மாணிக்கம், மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் குமரப்பா, இளைஞரணி செயலாளர் நங்கவள்ளி கிருஷ்ணன், மேட்டூர் நகர செயலாளர் சம்பத்குமார், நகர தலைவர் பாஸ்கர், நகர பொருளாளர் கதிரேசன், ஆத்தூர் நகர தலைவர் மகேந்திரன், மேலும் மேட்டூர், கொளத்தூர், இளம்பிள்ளை, சேலம், ஆத்தூரிலிருந்து சுமார் 60 தோழர்கள் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

சென்னையில் ஆர்ப்பாட்டத்துக்கு கடைசி நேரத்தில் காவல்துறை அனுமதி மறுத்தது.

# கோயிலுக்குள் அவமதிக்கும் கூட்டம் ‘சலுகை’க்காக காலில் விழும்–பீகார் முதல்வர்

பீகார் தலித் முதல்வர் ஜித்தன் ராம் மஞ்சி, மதுபானி மாவட்டத்திலுள்ள கோயிலுக்கு கடந்த மாதம் சென்றபோது கோயில் தீட்டுப்பட்டுவிட்டது என்று பார்ப்பன அர்ச்சகர்கள் ‘தீட்டு கழித்த’ செய்தியை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ கடந்த வாரம் வெளியிட்டது. இது குறித்து அரசு விசாரணைக்கு மாநில அரசு செப்டம்பர் 29ஆம் தேதி உத்தரவிட் டுள்ளது.

“பீகாரில் தேர்தல் பிரச்சாரம் நடந்தபோது ஆகஸ்டு 18 ஆம் தேதி ஊர் மக்கள் அழைத்ததினால் பகவதி பரமேசுவரி கோயிலுக்குச் சென்றேன். நான் சென்று வந்த பிறகு கோயிலுக்குள் ‘தீட்டுக் கழிப்பு’ சடங்குகள் நடத்தி, கோயில் கழுவப்பட்ட செய்தியை மாநில கனிம வளத்துறை அமைச்சர் இலக்கன் ராம் ராமன் என்னிடம், ஒருமுறை அல்ல, இரண்டு முறை கூறினார். தேர்தல் நேரத்தில் இப்பிரச்சினையை அரசியலாக்கிடக் கூடாது என்ற நோக்கத்தில், இதை வெளிப்படுத்தாமல் தவிர்த்தேன். ஆனால், அதே அமைச்சர், அப்படி எதுவும் நடக்கவில்லை என்று இப்போது மறுப்பதற்கான காரணம் எனக்கு தெரியவில்லை. நான் பொய் சொல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. முன்னாள் மத்திய அமைச்சர் தேவேந்திர பிரசாத் யாதவுக்கும் இது தெரியும். அவர் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இப்படி ஒரு சம்பவம் நடந்துள்ளதைக் குறிப்பிட்டு, அது குறித்து விசாரணை நடத்துமாறு என்னிடம் கேட்டார். 200க்கும் மேற்பட்ட பொது மக்கள் தன்னிடம் இதைத் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்” என்று பீகார் முதல்வர் கூறியுள்ளார். “கோயிலுக்குள் இப்படி தன்னை அவமதிக்கும் உயர்ஜாதியினர் (பார்ப்பனர்) தங்களுக்கு ஏதாவது சலுகை வேண்டும் என்றால் அலுவலகத்துக்கு வந்து என் காலில் விழத் தயங்குவதில்லை. இந்த உண்மையை தலித் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்” என்றும் பீகார் முதல்வர் கூறினார்.

பீகார் முன்னாள் முதல்வரான தலித் சமூகத்தைச் சார்ந்த போலோ பஸ்வான் சாஸ்திரி நினைவாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி அது. இதில் பீகார் முதல்வர் தனக்கு நேர்ந்த அவமானத்தை வெளியிட்ட போது, மேடையில் இருந்த கனிம வளத்துறை அமைச்சர் இராம் இலக்கன் ராம் ராமன், “முதல்வர் கூறுவது உண்மையல்ல” என்று மேடையிலேயே மறுத்த போது, பீகார் முதல்வர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார். ‘லோக் ஜன்தள்’ கட்சித் தலைவரும் மத்திய அமைச்சருமான ராம்விலாஸ் பஸ்வான், “பீகார் முதல்வரை அவமதித்த பார்ப்பன அர்ச்சகர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்” என்று கருத்து கூறியுள்ளார். ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு செய்திகளை விரிவாக பதிவு செய்துள்ளது.

ஆனால், ‘இந்து’ நாளேடு, பீகார் முதல்வர் பொய் சொல்வதுபோல் செய்தி வெளியிட்டுள்ளதோடு, கோயில் அர்ச்சகர், முதல்வரின் கட்சிக்காரர்கள் முதல்வர் கூறுவது உண்மையல்ல என்று கூறுவதாக செய்தி வெளியிட்டுள்ளது. “பீகாரில் அடுத்த முதல்வராகவும் ஒரு தலித் வருவார்” என்று பீகார் முதல்வர் பேசியதாகவும் இந்தக் கருத்தை அவரது கட்சிக்காரர்களே விரும்பாமல் ஒதுங்கி நிற்பதாகவும் ‘இந்து’ ஏடு, செய்தி வெளியிட்டுள்ளது.

கோயிலை ஒவ்வொரு நாளும் காலையிலும் இரவிலும் தூய்மைப்படுத்துவது வழக்கம் என்று கோயில் பார்ப்பன அர்ச்சகர் அசோக் குமார் ஜா சுறியதாக ‘இந்து’ செய்தி வெளியிட்டுள்ளது. பீகார் முதல்வர் நிகழ்வை உறுதிப்படுத்தியதையோ அரசு விசாரணைக்கு உத்தரவிட்டதையோ வெளியிடாமல் ‘இந்து’ ஏடு மறைத்துவிட்டது. ✦

## உக்கம்பருத்திக்காட்டில் குழந்தைகளுக்கான பழகு முகாம்

தமிழ்நாடு அறிவியல் மன்றம் சார்பில் 03.10.14 உக்கம்பருத்திக்காடு பெரியார் படிப்பகத்தில் குழந்தைகளுக்கான பழகு முகாம் காலை 10.00 மணிக்கு ஆசிரியர் சிவகாமி தலைமையில் நடைபெற்றது. இதில் 30 குழந்தைகள் கலந்துகொண்டனர். அறிவியல் மன்ற பொறுப்பாளர்கள் ரஞ்சிதா, தமிழ்செல்வன், செல்வேந்திரன் ஆகியோர் குழந்தைகளுடன் ஊடகம், சிற்றுளி இதழ், மாணவப்பருவ திறன் வெளிப்பாடு குறித்து உரையாடினர். குழந்தைகளுக்கு காலை 11.30க்கு தேநீர், மதிய உணவு, மாலை 4.00 மணிக்கு தேநீர் ஆகியவைகளை ஆசிரியர் செல்வேந்திரன் ஏற்பாடு செய்திருந்தார். குமரேசன், சித்ரா, பிரபு, அவினாசி, விஜயகுமார், அறிவுசெல்வி ஆகியோர் உடனிருந்து செயல்பட்டனர்.



## 'முன்னோடி – பின்னோடி' வாதங்களுக்கு மறுப்பு (12)

# கருத்துகளை விதைத்து, களத்தில் நின்றவர் பெரியார்!

'கண்டதைப் படிப்பவன்'

*தமிழறிஞர்கள் முன்னெடுத்தப் போராட்டத்தை பெரியார் தனதாக்கிக் கொண்டார் என்ற அடிப்படையில்லாத வாதங்களை ஏராளமான வரலாற்றுத் தகவல்களுடன் மறுத்து தொடராக வெளிவந்த கட்டுரையின் நிறைவுப் பகுதி இது.*

தொடர்ச்சியாக தமிழ்நாடு தனிநாடு, வடநாடு வெளிநாடு என்ற சிந்தனையையும், இந்தியா ஒரே நாடல்ல; பலநாடுகளின் கூட்டமைப்பே என்ற கருத்தையும், வடநாட்டார் பிடியில் இருந்து தமிழ்நாட்டைப் பிரித்து தனிநாடாக அமைத்துக் கொண்டால் ஒழிய, பார்ப்பன, பனியா முதலாளிகள் சுரண்டலிலிருந்து நாம் மீளவே முடியாது என்ற கருத்தையும் 1937இலேயே பெரியார் கொண்டிருந்தார் என்பதை எவர் ஒருவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

ஆனாலும், பெரியாருக்குத் தமிழ் மக்களிடையே உள்ள புகழ், பெருமை ஆகியவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள், அல்லது தாம் விரும்பும் கொள்கைகளை மக்களிடம் எடுத்துச் சென்று அவற்றை ஏற்க வைக்க முடியாதவர்கள், பெரியார் பெற்றிருந்த நம்பிக்கையை மக்களிடம் பெற முடியாதவர்கள், "ஆடத் தெரியாதவள் கூடம் கோணல்" என்று கூறியதைப் போல அன்று முதல் இன்று வரை ஏதேனும் வக்கணை பேசியே வந்திருக்கிறார்கள்.

பெரியார், 'திராவிட நாடு' என்ற கோரிக்கையோடு இயங்கிய காலம் 1939 முதல் 1956 வரையான 17 ஆண்டுகளே. 1956 முதல் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கத்தை முன்வைத்தே பேசினார், இயங்கினார். அண்ணா முன்வைத்த "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற கோரிக்கை 1963இல் கைவிடப் பட்டு விட்டது. அண்ணா கோரியதும் கூட, திராவிட நாடு என்ற ஒற்றை நாட்டை அல்ல; "மொழிவழி பிரிந்து, இனவழி கூடக் கூடிய, பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய திராவிட- சமதர்ம - குடியரசுக் கூட்டாட்சியே" என்றே அண்ணா தெளிவாக கூறி வந்திருக்கிறார். 29 மாநிலங்கள் கொண்ட இந்தியாவில் இருந்து பிரிந்து போகும் சுய நிர்ணய உரிமை கோருவோருக்கு, நான்கு மாநிலங்கள் அல்லது அரசுகள் கொண்ட திராவிட நாடு குறித்து ஏன் அவ்வளவு கோபம் என்பது ஒரு புரியாத புதிர்தான்.

எவ்வாறாயினும், கடந்த 50 ஆண்டுகளாக 'திராவிட நாடு' என்ற பேச்சே தமிழ்நாட்டில் இல்லை. 1939 முதல் 1956 வரை 17 ஆண்டுகள் மட்டுமே பெரியாரும், 1939 முதல் 1963 வரை 24 ஆண்டு காலமே அண்ணாவும் திராவிட நாட்டுக் கொள்கையைக் கொண்டிருந்தார்கள். அதிலும் பெரியார், 1956 இலிருந்து 1973இல் தனது இறுதிநாள் வரையிலும் தனித் தமிழ்நாட்டையே பேசி வந்திருக்கிறார். அண்ணா மறைந்து 45 ஆண்டுகளும், பெரியார் மறைந்து 41 ஆண்டுகளும் கடந்துவிட்டன . அவர்கள் 17, 24 ஆண்டுகள் கொண்டிருந்த கொள்கைகளை, அவர்கள் மறைந்து 41, 45 ஆண்டுகள் கழிந்த பின்னரும், தமிழ்த் தேசியத்தை வென்றெடுக்கத் தடையாக உள்ளன என்று பிதற்றித் திரிவதை, 'ஆடத் தெரியாதவள்- கூடம் கோணல்' என்பதைத் தவிர வேறு எப்படித்தான் விளக்குவது ?

அப்படிப்பட்ட ஆட்டக்காரக்களில் சிலர், எவ்வித அடிப்படை ஆதாரமுமின்றி சுயமரியாதை இயக்கத்தை உண்மையாகத் தோற்றுவித்தவர் எஸ்.இராமநாதன்தான் என்றும், பெரியாரின் எழுத்துகள் எல்லாம் குத்தூசி குருசாமியின் எழுத்துகளே என்றும் இப்போதும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

1925 நவம்பர் இறுதியில் தான் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினார். ஆனால் 1925, மே மாத தொடக்கத்திலேயே 'குடிஅரசு' ஏட்டைத் தொடங்கி இருந்தார்.

அந்த சமயம், ஈரோட்டின் முக்கிய சந்திப்பில் இருந்தது ஒரு விநாயகர் கோவில். அதற்கு அருகே இருந்தது ஓர் அசைவ உணவு விடுதி. அதை அப்புறப் படுத்த வேண்டும் என்று சிலரின் அழுத்தத்தால், நகராட்சியும் வற்புறுத்தியது. அதற்கிணங்க கடையை சிறிது தள்ளி 50 அடி தூரத்துக்கு அப்பால் வைத்துக் கொண்டனர்.

அது குறித்து 'குடிஅரசு' தொடங்கப்பட்ட இரண்டாம் மாதத்திலேயே, 5.7.1925 இதழில் பெரியார் எழுதுகிறார். "'சிவில்' விநாயகருக்கு 'மிலிடேரி' உணவு பக்கத்திலிருப்பது இந்துக்களுக்குப் பிடிக்க வில்லை. இந்துக்களின் உணர்ச்சியை மகம்மதிய நண்பர்கள் மதித்து அவைகளை எடுத்துவிட வேண்டும் என்று கூறியதற்கு என் வந்தனம்" என்று பாராட்டுகிறார். அந்த அசைவக் கடைகள் 50 அடிக்கு அப்பால் தள்ளி வைக்கப்பட்டு விட்டது என்றதும் கூச்சலிட்ட இந்துக்களும் அமைதி ஆனார்கள். வேறு உள்நோக்கங்களோடு செய்யப்பட்டதே இது என்பதை அறிந்து அதை எப்படி பதிவிடுகிறார் பாருங்கள். "'விநாயகர்' கூச்சல் வெறும் வார்த்தைகள் என்பது நிச்சயம். 'மிலிடேரி' உணவின் வாசனை 50 அடி தூரத்திலுள்ள விநாயகருக்கு எட்டாமல் போனால் அவருக்கு இந்துக்கள் "கௌரவமான கல்லறை அடக்கம்" செய்ய வேண்டியது தானே சரியாக இருக்க முடியும்" என்று, ஒரே நேரத்தில் இந்து மதவாதிகளின் சுயநல மத வெளிப்பாட்டையும், கடவுள்களின் 'சர்வசக்தி' பித்தலாட்டத்தையும் எள்ளி நகையாடுகிறார் பெரியார்.

'சுயராஜ்ய கட்சி' என்ற பெயரால் காங்கிரசில் இருந்த பார்ப்பனர்கள் சத்தியமூர்த்தி தலைமையில் தேர்தலில் ஈடுபடும் ஆசையோடு ஒரு கட்சியை இங்கு தொடங்கி இருந்தனர். அந்த சுயராஜ்ய கட்சியைப் பற்றி 25.10.1925 நாளிட்ட 'குடிஅரசு' இதழின் தலையங்கத்தில் இவ்வாறு எழுதுகிறார், பெரியார் (அப்போது பெரியார் காங்கிரசில் தான் இருந்தார்) "சுயராஜ்ய கட்சி என்ற பேர் மாத்திரம் இருக்கிறதே அல்லாமல் சுயராஜ்ய கட்சிக்கென்று ஏற்பட்டிருக்கும் திட்டமென்ன? ராஜீயத் (அரசியல்) திட்டம் ஏதாவது இருக்கிறதா? பொருளாதரத் திட்டம் ஏதாவது இருக்கிறதா? சமூக முன்னேற்றத் திட்டம் ஏதாவது இருக்கிறதா? என ஊன்றிப் பார்த்தால், உத்தியோகத்தை எல்லாம் தாங்களே கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதைத்தான் ராஜீயத் (அரசியல்) திட்டமாகவும், அதன் சம்பளமெல்லாம் தங்களுக்கே வர வேண்டும் என்பதைத் தான் பொருளாதாரத் திட்டமாகவும், இந்த உத்தியோகமும், சம்பளமும் பிராமணர்களாகிய தங்கள் ஜாதியாருக்கே வந்து விட வேண்டும் என்பது தான் சமூகத் திட்டமாகவும் வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது" என்று எள்ளல் நடையில் எழுதிச் செல்கிறார்.

ஆனால், பெரியாரின் எள்ளல் நடை எழுத்துக் களெல்லாம் குத்தூசி குருசாமி எழுதியது தான், பெரியார் அவற்றைத் தன் பெயரில் வெளியிட்டுக் கொண்டார் என்று கூறித் திரிவோர் சிலர் இன்றும் இருக்கிறார்கள். அதல்லாமல் 'சித்திரபுத்திரன்' என்ற பெயரில் எழுதபட்டுள்ளவை அனைத்தும் குத்தூசி குருசாமி எழுதியது தான் என்று கூறுவோரும் உண்டு. 1925 முதலாக எழுதப்பட்டுள்ள 'சித்திரப்புத்திரன்' கட்டுரைகளை எல்லாம் யார் எழுதியிருப்பார்கள்? 1927 இறுதியில் பெரியாரிடம் வந்து சேர்ந்த குத்தூசி குருசாமி தான் என்று எப்படி இவர்களால் கூசாமல் புளுக முடிகிறது? ஏன் பெரியாருக்கு இயக்கத்தை நடத்த ஆலோசனைகள் கூறி வழி நடத்தியவரே குத்தூசிதான் என்போரும்கூட இருக்கிறார்கள்.

ஆனால் பெரியாரை விட்டு வெளியேறிய குத்தூசி குருசாமி ஏன் தொடர்ந்து ஓர் இயக்கத்தை நடத்த முடியவில்லை? பெரியாரிடம் இருந்தவரை 'தனித் தமிழ்நாடு' பேசியவர், வெளியேறிய பின் 'அகில இந்தியா' பேசியதற்கு என்ன காரணம்? பதில் கூறுவார் உண்டோ?

சரி, அடுத்து எஸ்.இராமநாதன் தான் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கக் காரணமாக இருந்தவரும் வளர்த்தவருமா? அப்படிப்பட்ட கொள்கைக்காரர் ஏன் இராஜாஜியுடன் போய்ச் சேர்ந்தார்? சேர்ந்து அவர் அமைச்சரவையில் எப்படி அமைச்சரும் ஆனார்? அமைச்சராக இருந்த காலக்கட்டத்தில் கட்டாய இந்திக் கொள்கையை இராஜாஜி கொண்டு வந்த போதுகூட, அதை ஜீவாவைப் போலவே ஆதரித்துக் கொண்டு, எப்படி அமைச்சராகத் தொடர முடிந்தது? என்பதற்குப் பதில் கூறுவார் எவரும் இல்லை. அந்த எஸ்.இராமநாதன் எவ்வாறு பணியாற்றினார் என்பதற்கு ' குடிஅரசு'லேயே விடையும் இருக்கிறது.

2.5.1925 அன்று தொடங்கப்பட்ட 'குடிஅரசு' ஏட்டின் முதலாமாண்டு நிறைவு நாளை ஒட்டி 2.5.1926 அன்று 'நமது பத்திரிக்கை' என்ற தலைப்பிட்டு பெரியார் ஒரு தலையங்கம் எழுதியுள்ளார். அதில், "குடிஅரசு தோன்றிய பிறகு அது ராஜீய (அரசியல்) உலகத்திலும் சமூக உலகத்திலும் பெரிய மாறுதல் ஏற்படுத்தியிருக்கிறது என்று பலர் நமக்கு எழுதி யிருப்பதை நாமும் உபயோகித்துக் கொள்கிறோம். 'குடிஅரசு' ஆசிரியருக்கு உண்மை நண்பர்களாய் இருந்து வந்த ஸ்ரீமான்களான டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.கலியாணசுந்தர முதலியார் முதலியவர் களின் கூட்டுறவு 'குடிஅரசு'க்குக் கிடைத்திருக்குமே யானால், அல்லது குறைந்தபட்சம் அவர்களுடைய எதிர்ப்பாவது இல்லாது இருந்திருக்குமானால் இன்னும் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கும். என்ன செய்வது? உள்ளதைக் கொண்டு திருப்தி அடைய வேண்டியது தான்" என்று நிலவிய சூழலை வருத்தத்துடன் குறிப்பிடும் பெரியார், "திரு.வி.க. காங்கிரஸின் பேரால் பிராமணர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க ஊரூராய், கிராமம் கிராமமாய், தெருத் தெருவாய்த் திரிந்து, தனது தொண்டை கிழியும்வரை (கிழிந்தாலும் கூட) பிரச்சாரம் செய்யப் போவதாய் சொல்லியிருக்கிறார்" என்று குறிப்பிட் டுள்ளார். அதன்படி, திரு.வி.க., வரதராஜுலு நாயுடு ஆகியோர் தமது கட்சியைப் பரப்ப, எவ்வளவு கடுமையாக, வீச்சாக உழைக்கிறார்கள் என்பது குறித்து தொண்டை கிழிந்தாலும் கூட என்பதை அடைப்புக்குறி போட்டு அழுத்தமாகக் குறிப்பிடு கிறார் பெரியார். அதே வேளை சுயமரியாதை இயக்கத்தில் தனக்கு ஆதரவாக உள்ள நண்பர்களைப் பற்றியும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

"ஸ்ரீமான்கள் சர்க்கரைச் செட்டியார், சுரேந்திர நாத் ஆர்யா, எஸ்.இராமநாதன், தண்டபாணிப் பிள்ளை போன்றவர்கள் மனதில் மாத்திரம் வேகமாக இருக்கிறார்களே ஒழிய, வெளியில் வந்து அவர்களைப் போல் வேலை செய்ய கவலையில்லாதவர்களாய் இருக்கிறார்கள். இந்த நிலைமையில், 'குடிஅரசு'க்கு இருக்கும் பொறுப்பையும் கஷ்டத்தையும் நினைத்துப் பாருங்கள்" என்று கவலையோடு தொடர்கிறார் பெரியார்.

தாங்கள் ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டும் போதுமா? அதற்காக மனதளவில் ஆதங்கப் பட்டால், ஆவல்பட்டால் மட்டும் போதுமா? களத்தில் இறங்கிப் பணியாற்ற வேண்டாமா? என்பதே பெரியாரின் கேள்வி; பணியாற்ற வேண்டும் என்பதே அவரின் எதிர்பார்ப்பு; விழைவு; விருப்பம். அதே கதை தான் தோழர் மணியரசன் போற்றிப் புகழும் தமிழறிஞர்கள் இந்தி எதிர்ப்புப் போரில் நடந்து கொண்ட விதமும்.

கட்டாய இந்திக் கொள்கையை 1938 ஜூன் மாதம் தொடங்கும் கல்வி ஆண்டில் இருந்து, அன்றைய சென்னை மாகாணத்தில் உள் அடங்கியிருந்த தமிழகத்தில் 60; ஆந்திரத்தில் 54; கர்நாடகத்தில் 4; மலையாளத்தில் 7 என 125 உயர்நிலைப் பள்ளிகளில் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை இந்தி கட்டாயப் பாடமாக இருக்கும் என்ற அரசாணை 21.4.1938-இல் பிறப்பிக்கப்பட்டது. சில நாட்களில் அவ்வாணை குறித்த செய்திகள் அனைவருக்கும் போய்ச் சேர்ந்தது.

உடனடியாக பள்ளிகள் திறந்தவுடன் பள்ளி களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்கள், அமைச்சர்கள் வீடுகளுக்கு முன்னால் மறியல் என பல்வகை இந்தி எதிர்ப்பு செயல்திட்டங்கள் தீட்டப்பட்டன. பெரியாரும் தொடர்ச்சியாக 8.5.1938; 15.5.1938; 22.5.1938; 29.5.1938 ஆகிய நாளிட்ட 'குடிஅரசு' இதழ்களில் 'இந்தி வந்துவிட்டது. இனி என்ன? ஒரு கை பார்க்க வேண்டியது தான்!' 'நெருக்கடி என்றுமில்லா நெருக்கடி!' 'தொண்டர்களே! சென்னை செல்க!' 'போர் மூண்டுவிட்டது. தமிழர் ஒன்று சேர்க!' என்ற தலைப்புகளிட்டு தலையங்கங்களை எழுதி அனைவரும் கட்சி, மதம், ஜாதி வேற்றுமைகளையும் கடந்து இந்தி எதிர்ப்புப் போரில் குதித்து, வீச்சாக செயலாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

அப்படி 'இந்தி வந்துவிட்டது. இனி என்ன? ஒரு கை பார்க்க வேண்டியது தான்!' என்ற தலைப்பிட்டு எழுதப்பட்ட முதல் வார தலையங்கத்தில் (8.5.1938) 'மடாதிபதிகளுக்கு மன்னிப்பு' என உள்தலைப்பிட்டு

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 08.10.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# தோழமை சக்திகளை எதிரிகளாக்கிட வேண்டாம்!

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழ் மடாதிபதிகள் என்பவர்களே, நீங்கள் இது வரை நடந்து கொண்டதையும் மறந்து விடுகிறோம்", "உங்களிடம் பக்தி விசுவாசம் காட்டுபவர்களை எங்களிடம் விரட்டி விடுங்கள்" என்று வேண்டுகோள் வைக்கிறார்.

பொதுமக்களுக்கு மாபெரும் விண்ணப்பம் என்ற உள்தலைப்பில் "உங்கள் சௌகரியங்களுக்கு அடங்கின சகல பரிசுத்தமான ஆதரவுகளையும் அளியுங்கள். உங்களது வாலிப இளைஞர்களை போருக்குக் கச்சை கட்டி விரட்டி அடியுங்கள்" என வேண்டுகிறார்.

செல்வர்களுக்கு ஒரு வார்த்தை என குறிப்பிட்டு "உங்கள் பழைய நடத்தைகளை மறந்து விடுகிறோம்" என்று தொடங்கி, பழைய சுரண்டல் குற்றங்களுக்குப் பரிகாரம் என்ன தெரியுமா? "நடந்தது நடந்து விட்டது அதை பரிகரிக்க, உங்களால் செய்யக் கூடியது, நீங்கள் மானத்திலும் உயிரிலும் பெரிதாக மதிக்கும் உங்கள் செல்வத்தை இக்கருமத்திற்கு உதவி பெரிய வீரராகுங்கள்" என வலியுறுத்துகிறார்.

இளைஞர்களுக்கு வேண்டுகோள் என விளித்து, பல செய்திகளைக் கூறி "அடிபடவும், இராப்பட்டினி பகல் பட்டினி கிடக்கவும், து(தொ)லை வழி நடக்கவும் தயார் செய்து கொள்ளுங்கள். போர்முனை சிப்பாய் போல் ஆக்கினைக்கு (கட்டளைக்கு) அடி பணியவும் தயார் செய்து கொள்ளுங்கள்" என்று முடிக்கிறார்.

பெரியோர்களுக்கு விண்ணப்பம் என்ற மற்றொரு உள்தலைப்பில் "பெரியோர்களே! முன் மாதிரி காட்ட வாருங்கள்! உங்களுடைய உள்ளங்களுக்கு புதிய அங்கியை மாட்டிக் கொள்ளுங்கள் - உங்கள் மார்பைப் பார்க்காதீர்கள், அடிச்சுவட்டைப் பாருங்கள். வீர இளைஞர்களுக்கு நீங்கள் வழிகாட்டுகிறவர்கள் என்பதை ஒவ்வொரு அடி வைக்கும் போதும் ஞாபகத்தில் வையுங்கள்" என்று முடிக்கிறார்.

அத்தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ள சில சொற்களைத் தான் அனைவர் கவனத்துக்கும் முன்வைக்க விரும்புகிறோம். அது தான் நாம் சுட்டிக் காட்ட விரும்பும் பகுதியும் கூட

"தோழர்கள் எஸ்.எஸ். பாரதியார் (சோம சுந்தர பாரதியார்), உமாமகேசுவரம் பிள்ளை, கி.ஆ.பெ.விசுவநாதம், வள்ளல் சிவஞான தேசிகர் போன்றவர்கள் கீழிறங்கி வந்து வினைஞர்களாகி மற்ற வாலிபர்களுக்கு வழிகாட்டிகளாக செல்ல வேண்டும்" என்பதே அது.

இச்சொற்றொடர் நமக்குக் கூறும் செய்தி தான் என்ன? மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எவர் ஒருவரும் இது நாள் வரையிலும் கீழிறங்கி வரவுமில்லை; கருத்தாளர்களாக இருக்கிறார்களே அன்றி வினைஞர்கள் (செயற்படுவோர்) ஆகவுமில்லை என்பதுதானே.

எல்லோருடைய ஒத்துழைப்பும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தேவை என்று கருதிய பெரியார், இது எப்போதோ ஒரு சமயம் எழுதப்பட்டதல்ல; இந்தி எதிர்ப்புப் போர் தொடங்க வேண்டியிருந்த அதி உச்ச நிலையில் எழுதப்பட்டது. எங்கோ தனியிடத்தில் இரகசியமாய்க் கூறப்பட்டதல்ல; அப்போது தமிழ்நாட்டின் முன்னணி வார ஏடாகவும், இந்தி எதிர்ப்பு செய்திகளை, போராட்டங்களை, திட்டங்களை அறிய தமிழ்நாடு முழுதும் விரிவாக வாசிக்கப்பட்ட 'குடிஅரசு' ஏட்டில், கட்டாய இந்திப் பாட அரசாணை பிறப்பிக்கப்பட்டதன் பின்னர் வெளிவந்த முதல் இதழில் தலையங்கமாக எழுதப்பட்ட வரிகளே இவை.

இவ்வரிகள் இந்தி எதிர்ப்புப் போரை தமிழறிஞர்கள் நடத்தினார்களா? பெரியார் நடத்தினாரா? என்பதைத் தெளிவாக நமக்கு விளக்கும்.

மேலும், இத்தனைக்குப் பின்னரும், அம்மாதக் கடைசியில், 28.5.1938 அன்று திருச்சியில் கூடி நிறுவப்பட்ட தமிழ் மாநில இந்தி எதிர்ப்பு வாரியத்துக்கு (THE ANTI-HINDI HIGH COMMAND) மேற்குறிப்பிட்ட, விமர்சிக்கப்பட்ட சோமசுந்தர பாரதியாரைத் தலைவராகவும், கி.ஆ.பெ. விசுவநாதத்தைச் செயலாளராகவும் அமர்த்தி விட்டு, மேலே குறிப்பிட்ட உமா மகேசுவரம் பிள்ளை, ஊ. பு. அ. சவுந்தர பாண்டியன், கே.எம்.பாலசுப்பிரமணியம் ஆகியோரோடு தானும் ஒரு உறுப்பினராக இருந்துதான் பெரியார் செயல்பட்டுள்ளார். "பதவி அல்ல அவரது நாட்டம்; பணி நடைபெற வேண்டும் என்பது மட்டுமே அவரது நாட்டம்" என்பதை எவர் ஒருவராலும் எளிதில் உணர முடியும்.

அதுபோலவே, தொடர்ந்து 42 நாட்கள் நடைபெற்ற திருச்சி-சென்னை வழிநடைப் பிரச்சாரப் படையில் கலந்து கொண்டோர் பட்டியலும், போராட்டத்தில் சிறை சென்றோர் பட்டியலும் இந்தி எதிர்ப்புப் போரை நடத்தியது பெரியாரும், அவரது சுயமரியாதை இயக்கமுமே என்பதைத் தெளிவாக உணர்த்தும்.

ஆக, ஆந்திர மாநிலம் என தெலுங்கர்கள் தங்களுக்கான தனி மாநிலம் கோரி வைத்த கோரிக்கைகளைப் போல தமிழர்களுக்கு என்றும் தனி மாநிலம் அமைய வேண்டும் என்ற தீர்மானம் மட்டுமே தமிழறிஞர் சோமசுந்தர பாரதியாரால் 1937-இல் சில நிகழ்ச்சிகளில் முன் மொழியப்பட்டது என்பது உண்மை தான்.

அதுவும்கூட பெரியார் அந்நிகழ்வுகளுக்கு முன்னதாகவே ஈரோடு கொல்லம்பாளையம் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்தில் "எப்பாடுபட்டாவது நம் நாட்டை வடநாட்டு சம்பந்தத்திலிருந்து பிரித்துக் கொண்டால் ஒழிய நமக்கு விடுதலையோ, மானமோ ஏற்படப் போவதில்லை", என்று பேசிய பின்னர் தான். எப்படி இருப்பினும் பெரியார் விரும்பியது வடவர் ஆதிக்கமற்ற சுதந்திர தமிழ்நாட்டை; சோமசுந்தர பாரதியார் முன்மொழிந்தது சென்னை மாகாணத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளைக் கொண்ட தனி தமிழ் மாநிலத்தைத் தான்.

எனவே நாவலர் நெடுஞ்செழியன் நினைவுப் பிசகாக, ஒரு இடத்தில் 1938 மே மாதம் கடற்கரைக் கூட்டம் என தவறுதலாகக் கூறியதை வைத்துக் கொண்டு தோழர் மணியரசன் பேசியுள்ளார். ஆனால், அதே நெடுஞ்செழியன் எழுதிய பிற நூல்களில் பெரியார் தான் முதன்முதலாக தனித் தமிழ்நாடு பற்றி பேசியவர் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளதையும் கட்டுரையின் பிற இடங்களில் எடுத்துக் காட்டியிருந்தோம்.

ஆக, புரோகித மறுப்புத் திருமண முறையானாலும், இந்தி எதிர்ப்புப் போர் ஆனாலும், தனித் தமிழ்நாடு கோரிக்கை ஆனாலும் தமிழறிஞர்கள் முன்னெடுத்ததைப் பெரியார் தொடர்ந்தார்; வீச்சாக எடுத்துச் சென்றார்; மக்கள் மன்றத்துக்குக் கொண்டு சென்றார் என்பவை அனைத்தும் ஆதாரமற்றவைகளே.

ஆனாலும், எந்த ஒரு மக்கள் போராட்டமானாலும் அது திடீரென உதித்து விடாது. அதற்கு முன்னதாக நிலவி வந்த புறச்சூழல் சாதகமாக அமையும் போதே வெடித்தெழும் என்பதை நாம் மறுக்கவில்லை. பெரியாருக்கு முன் னதாகவே இவையொத்த சிந்தனைகள் ஏதேனும் வடிவில் நிலவியிருக்கலாம்; அல்லது பேசப்பட்டிருக்க லாம். ஆனால், தோழர் மணியரசன் கூறுவதைப் போல் அது தமிழறிஞர்களால் அன்று.

நாம் இவற்றை எழுத வேண்டி வந்ததன் காரணம் கூட, 19.4.2014 அன்று தஞ்சையில் நடந்தேறிய அய்ந்தாவது உலகத் தமிழ்ப் பொது மாநாட்டில் தோழர் மணியரசன் ஆற்றிய உரை மட்டுமல்ல; அவர் பல வேளைகளில் பெரியார் மீது வைத்து வந்துள்ள ஆதாரமற்ற, திசைதிருப்பும் வாதங்களையும் கருத்தில் கொண்டு தான்.

பொது வாழ்க்கையில் சமூக முன்னேற்றம், விடுதலை குறித்த அனைத்தையும் எந்த ஒரு இயக்கமும் தனியே நின்று சாதித்து விட முடியாது. ஆனால், ஜாதி ஒழிப்பு, பெண்ணுரிமை, பகுத்தறிவு, பொதுவுடைமை, தேசிய இன விடுதலை, தாய் மொழிக் கல்வி, மனித உரிமை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு முதலிய அனைத்துத் துறைகளிலும் நாம் பெறும் வெற்றிகளே ஓர் இலட்சிய தமிழ்நாட்டை, தமிழ்ச் சமூகத்தைப் படைக்கும்.

அவ்வாறான ஒரு நிலை அடைவதற்குத் தடையாக மதவெறி அமைப்புகள், ஜாதி வெறியர்கள், ஆணாதிக்க வாதிகள், லாபவெறி பெருமுதலாளிகள், ஆதிக்க இந்திய தேசியர்கள் என ஏராளமான எதிரிகள் உள்ளனர்.

மேற்சொன்ன இலட்சியங்களில் ஏதேனும் ஒன்றையோ, இரண்டையோ மட்டும் தான் ஒரு அமைப்பால் வீச்சாக முன்னெடுக்க முடியும். மற்றொரு அமைப்பு மற்ற ஒன்றிரண்டு இலட்சியங்களுக்கு உழைக்கும். நாம் முன்னெடுக்கும் இலட்சியத்தை நோக்கிய போராட்டங்களை எதிர்க்காத வரை நமக்கு சாதகம் தான் என்று கருதி, பணியாற்றுவதே சரியானதாக இருக்க முடியும்.

ஒரு இலட்சியத்துக்கு உழைக்கும் அமைப்பினரை நோக்கி, பிறதொரு இலட்சியத்தை முன்னெடுப்பவர்கள் எனது இலட்சியத்துக்கு நீங்கள் ஏன் உழைக்க மறுக்கிறீர்கள் என்று கேட்பது வேண்டாத ஒன்றே.

அதுவும் குறிப்பாக, புதைக்கப்பட்ட பிணங்களைத் தோண்டி எடுத்து முகர்ந்து பார்த்து குறை சொல்லும் போக்கு கைவிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

எவ்வித அரசியல் புரிதலும் அற்ற, 'திடீர்' தலைவர்கள், தலைகால் தெரியாமல் பிதற்றித் திரிவதைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. பூசிய சாயங்கள் அடுத்த மழையில் கரைந்ததும் உண்மை நிறம் வெளிப்பட்டு விடும்; வெளிப்பட்டுக் கொண்டும் இருக்கிறது. சுயநல எதிர்பார்ப்புகள், ஆசைகள் எதுவுமின்றி, இலட்சியத்துக்காக இழப்புகளைச் சகித்துக் கொண்டு இயங்கும் இயக்கங்களிடம் இவ்வகைப் போக்கு வேண்டாத ஒன்றே! எதிரிகளிடம் எய்ய வேண்டிய கணைகளை தோழமைகள் மீது எய்வது தேவையா? அனைவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நேரம் இது.

**(நிறைவு)**

## திருத்தம்


'கண்டதைப் படிப்பவன்' எழுதும் கட்டுரைத் தொடரில் கடைசியாக வந்த 2.10.2014 இதழில் 4ஆம் பக்கத்தில் வெளி வந்துள்ள பகுதியில் –

"1929–ஆம் ஆண்டில் பெரியாரின் பார்வையில், உத்திர பிரதேசம், குஜராத், இராஜஸ்தான், இன்றைய சட்டீஸ்கர் ஆகியவற்றை வெளிநாடாகவே கருதி வந்திருக்கிறார். அதோடு, பிற்காலத்தில் தமிழ்நாட்டோடு இணைந்து நீண்ட நெடுங்காலம் ஒரே அரசியல் அலகாய் இயங்கி வந்த கன்னடர், தெலுங்கர், மலையாளிகள் ஒழிந்தால் தேவலாம் என்று கூறி வந்திருக்கிறார். 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை 1956 முதல் 1973 ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ந்த தன் சாவு வரை தொடர்ந்து கைக் கொண்டிருந்துள்ளார்."

– என்று திருத்திப் படிக்கக் கோருகிறோம். தவறுக்கு வருந்துகிறோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 9th October 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | அக்டோபர் 16, 2014 | புரட்சி 13 | முழக்கம் 40 | விலை: ரூ.3.00


## உசிலம்பட்டி கவுரவக் கொலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

# அக்டோபர் 26 – திருச்சியில் செயலவைக் கூட்டம்

## கழகத் தலைமைக்குழு முடிவுகள்

திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு, அக்டோபர் 11, 2014 அன்று பகல் 11 மணியளவில் சென்னையில் தலைமை நிலையத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் கூடியது. கழகத்தின் அடுத்த செயல் திட்டங்கள், கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க'த்துக்கு உறுப்பினர்கள் சேர்ப்பு, கழக அமைப்பு முறைகளில் மாற்றங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டன. கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

26.10.2014 அன்று திருச்சியில் கழக செயலவைக் கூட்டத்தை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மதுரை உசிலம்பட்டி அருகே உள்ள பூதிப்புரம் ஊரைச் சேர்ந்த விமலா தேவி என்ற பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த பெண், திலீப் குமார் என்ற தலித் சமுதாயத்து இளைஞரை காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். திருமண வயதுள்ள இருவரும் சட்டப்படி செய்து கொண்ட திருமணத்தை பாலக்காடு சென்று காவல்துறை தலையிட்டு, அவர்களைக் கைது செய்துள்ளது. இது சட்ட விரோத நடவடிக்கை. பின்னர் விமலாதேவி கவுரவக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஆனால், உசிலம்பட்டி காவல்துறை 302 ஆவது பிரிவில் கொலை வழக்காக பதிவு செய்யாமல் தற்கொலைக்குத் தூண்டிய வழக்காக 306ஆவது பிரிவில் வழக்கைப் பதிவு செய்துள்ளது. தமிழ் நாட்டில் கடந்த 20 மாதங்களில் 32 சாதிவெறிக் கொலைகள், கவுரவக் கொலை என்ற பெயரில் நடந்துள்ளன.

கவுரவப் படுகொலை செய்தவர்களின் குற்றத்தை மறைக்கும் காவல்துறையினர் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும், ஜாதி மறுப்பு இணையர்களை பாதுகாக்கும் சட்டத்தை உடனே நிறைவேற்ற வலியுறுத்தியும், காவல்துறையில் உள்ளூர்ப் பகுதி ஆதிக்க ஜாதி அதிகாரிகளை இடம் மாற்றக் கோரியும் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மதுரையில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நவம்பர் 3ஆம் தேதி நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

திராவிடர் விடுதலைக் கழக அமைப்பு முறைகளில் மாற்றங்களை கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு வசதியாக கழகத் தலைவர், பொதுச் செயலாளர் பதவிகளைத் தவிர தலைமைச் கழகச் செயலாளர்கள் மற்றும் மண்டல அமைப்புச் செயலாளர்கள் பதவிகளை கலைப்பது என முடிவு செய்யப்பட்டது. தலைமைக் குழு நீடிக்கும். கழக மாவட்டத் தலைவர், மாவட்ட செயலாளர்கள் தொடர்ந்து பதவியில் நீடிப்பார்கள். இது தவிர, சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம், தமிழ்நாடு அறிவியல் மன்றம், தமிழ்நாடு மாணவர் கழகம் ஆகிய கழகத்தின் முன்னணி அமைப்புகள், தொடர்ந்து செயல்படும்.

## 'ஜீவா' – 'மெட்ராஸ்' திரைப்பட இயக்குனர்களுக்கு பாராட்டு!





மக்கள் ஆதரவோடு வெற்றி நடைபோடும் திரைப்படங்களான 'மெட்ராஸ்', 'ஜீவா' பட இயக்குனர்களுக்கு பாராட்டு மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு அக். 11 ஆம் தேதி மாலை சென்னை கவிக்கோ கலை அரங்கில் நடந்தது. 'மாற்றத்துக்கான ஊடகவியலாளர் மய்யம்' என்ற அமைப்பின் இளம் ஊடக வியலாளர்கள் இந்த நிகழ்வுக்கு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

வடசென்னை குடிசை மாற்று வாரியப் பகுதியில் வாழும் தலித் மக்களின் கலாச்சாரம் மற்றும் அரசியலை துல்லியமாக சித்தரிக்கும் படம் 'மெட்ராஸ்'. அதிகார அரசியலுக்கு மாற்றாக சமூக அரசியலை வலியுறுத்தும் படம். இதன் இயக்குனர் இரஞ்சித். கிரிக்கெட் விளையாட்டில் பார்ப்பன ஜாதி அரசியலை துணிவுடன் பேசுகிறது 'ஜீவா'. இப்படத்தின் இயக்குனர் சுசீந்திரன் (அவர் நிகழ்வில் பங்கேற்க இயலவில்லை).

விழாவில் பார்வையாளர்களாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கழகத்தினருடன் பங்கேற்கச் சென்றனர். ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோளை ஏற்று, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், இரண்டு திரைப்படங்களின் சமூகப் பார்வையை பாராட்டி உரையாற்றினார். இயக்குனர் இரஞ்சித்துக்கு மய்யத்தின் சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி விருதினை வழங்கினார்.

'மூடர்கூடம்' திரைப்பட இயக்குனர் நவீன், 'மதுபானக் கடை' திரைப்பட இயக்குனர் கமலக் கண்ணன், ஊடகவியலாளர்கள் ஆனந்த், ஆசிஃப் உரையாற்றினர். ஊடகத் தோழர்கள் உதயசூரியா, தமிழரசன் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தனர். பார்வை யாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு இயக்குனர் இரஞ்சித் விரிவாக பதிலளித்தார்.

## ஆண்கள் மட்டுமே பங்கேற்கும் பெண்கள் மாநாடு

அய்ஸ்லேண்ட் நாடு அய்.நா.வில் பெண்கள் மற்றும் பாலின சமத்துவத்துக்கான சர்வதேச மாநாட்டை நடத்த திட்டமிட்டுள்ளது. இந்த மாநாட்டின் தனித்துவம் பெண்கள் பங்கேற்காமல் ஆண்கள் மட்டுமே பங்கேற்பதுதான். ஜனவரி மாதம் அய்.நாவில் இந்த வித்தியாசமான மாநாடு நடைபெறும் என்ற தகவலை அய்ஸ்லாந்து வெளி விவகாரத் துறை அமைச்சர் குன்னர் பிராகி சுவன்சன் தெரிவித்துள்ளார். 'சுரிநாம்' நாடும் இந்த மாநாட்டுக்கு தனது பங்களிப்பை வழங்குகிறது. "ஆண்கள் மற்றும் ஆண் இளைஞர்களை ஒருங்கிணைத்து, பாலின சமத்துவம் குறித்து நேர்மறையான (Positive way) வழி முறைகளில் விவாதிக்க விரும்புகிறோம். இம்மாதத்தில் ஒரு இலட்சம் ஆண்களை திரட்டி சர்வதேச இயக்கத்தை நடத்த திட்டமிட்டுள்ளோம் என்கிறார், அமைச்சர்.

அய்.நா. பெண்கள் அமைப்பின் தலைவர் ஃபியும் கிலே லேம்போ நெருக்கா கூறுகையில் - "இதே நிலை தொடருமானால் பாலின சமத்துவம் 95 ஆண்டுகளில் சாத்தியமாகலாம்" என்றார். 'அவளுக்காக அவன்' (He for She) என்று இந்த இயக்கத்துக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. சீனாவில் பெய்ஜிங்கில் 1995இல் சர்வதேச பெண்கள் மாநாடு கூடி 20 ஆண்டுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து இந்த இயக்கம் மீண்டும் முனைப்பெடுத்துள்ளது. அப்போது பேசிய ஹிலாரி கிளின்டன் (அமெரிக்க அதிபர் துணைவி யார்), "பெண்கள் உரிமைகள் மனித உரிமைகளே" என்ற முழக்கத்தை முன் வைத்தார். 190 நாடுகள் இந்த இயக்கத்தில் அப்போது பங்கெடுக்க முன் வந்தன. பெய்ஜிங் மாநாட்டின் 20 ஆம் ஆண்டு நினைவாக நடக்கவிருக்கும் இந்த மாநாட்டிலும் ஹிலாரி கிளின்டன் முக்கிய பங்காற்றுவார் என்று அய்.நா. செயலாளர் பான்கி மூன் தெரிவித்துள்ளார்.

பெண்கள் சமத்துவத்தை ஆண்களிடம் வலியுறுத்தும் இந்த இயக்கம், தமிழ்நாட்டிலும் நடத்தப்படவேண்டும்.

**தலையங்கம்**

# வரலா றுப் புரட்டு

இந்துத்துவம் – புனைவுகளை வரலாறுகளாக கட்டமைக் கும் முயற்சிகளில் தீவிரம் காட்டி வருகிறது. இந்தியாவில் வர்ணாஸ்ரம சமூக அமைப்பை நிலைப்படுத்தியவர்கள் பார்ப்பனர்கள். வர்ணக் கலப்பில் பிறந்தவர்கள் மீண்டும் வர்ணத்தின் கீழ்கொண்டுவரப்பட முடியாததால், ஜாதிகளாக பிரிக்கப்பட்டனர். ஜாதிப் பிரிவுகள் ஜாதியமைப்பாகி அதுவே தீண்டாமைக்கும் வழி வகுத்தது. இந்த வரலாற்று உண்மைகளை புறந்தள்ளிவிட்டு, ‘தீண்டாமை’ உருவாக்கியதே இஸ்லாமியர்கள் என்ற புதிய கதைகளை கட்டமைக்கிறார்கள். உ.பி.யில் பா.ஜ.கவைச் சார்ந்த விஜய் சாங்கர் சாஸ்திரி என்ற முன்னாள் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் (இவர் ஒரு தலித்), பட்டியல் இனப் பிரிவினரின் “வரலாறுகளை” மூன்று தொகுதிகளாக எழுதியுள்ளார். வால்மீகி, காதிக்ஸ் மற்றும் சாம்கர் ஆகிய தலித் மக்களின் வரலாறாக முன் வைக்கப்பட்ட மூன்று தொகுதிகளை ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் வெளியிட்டுள்ளார். அந்த நிகழ்வில்தான் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை ஆர்.எஸ்.எஸ். ஆதரிக்கிறது என்ற கருத்தை முதன்முதலாக வெளியிட்டார். முஸ்லிம் மன்னர்கள ஆட்சியில் கட்டாய மத மாற்றத்தை ஏற்க மறுத்தவர்களே “தீண்டப்படாதவர்களாக” ஒதுக்கி வைக்கப் பட்டதாக புதிய கண்டுபிடிப்பை செய்திருக்கிறார்கள்.

இஸ்லாமியர் ஆட்சிகளுக்கு முன்பே மனு சாஸ்திரத்திலேயே ‘சூத்திரர்’ – தீண்டப்படாத மக்களாக்கப்பட்டு விட்டனர். அந்த ‘மனு சாஸ்திரத்தை’ ஆர்.எஸ்.எஸ். எதிர்க்கவில்லை. வெளிப் படையாக கோல்வாக்கர் ஆதரித்து எழுதியுள்ளார். இப்போதும் கூட மனிதர்களை பிறவியால் பாகுபடுத்தி இழிவுக்குள்ளாக்கும் ‘மனு சாஸ்திரம்’ தங்களுக்கு உடன்பாடானது அல்ல என்று அறிவிக்க ஆர்.எஸ்.எஸ். தயாராக இல்லை.

இஸ்லாமியர் ஆட்சியில்தான் சிதறிக் கிடந்த பல்வேறு குழுக்களை தங்கள் ‘பிராமண மத’ கட்டுப்பாட்டுக்குள் பார்ப் பனர்கள் கொண்டு வந்தார்கள். “முகலாயர் ஆட்சியில்தான் பிராமண மதம் எத்தகைய தயக்கமும் இன்றி சர்வ வல்லமையுடன் முன்னேறியது” என்கிறார் வரலாற்று ஆய்வாளர் ராதா முகுந் முகர்ஜி.

இந்த காலத்தில் தான் பார்ப்பனர்கள் ஜாதிச் சட்டங்களை கடுமையாக்கியதோடு, கொல்லர், தச்சர், வண்ணார், ஆசாரி போன்ற பிரிவினரை தீண்டப்படாத சாதிகள் என்று அறிவித்தனர். முகலாய மன்னர்கள் முகலாயர் அல்லாத மக்களின் சமூக வழக்கங்களில் தடையில்லாமல் ஒதுங்கிக் கொண்டபோது சமூகத்தின் மீதான அதிகாரங்களை பார்ப்பனர்கள் தங்கள் வசம் எடுத்துக் கொண்டார்கள் என்பதே வரலாறு. குழந்தைத் திருமணம், உடன் கட்டை ஏறுதல், விதவைகள் மறுமணத் தடை போன்ற சமூகக் கொடுமைகளை முஸ்லிம் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் பார்ப்பனர்கள் திணித்தனர்.

முஸ்லிம் மன்னர்கள்தான் இந்த சமூகக் கொடுமைகளுக்கு காரணம் என்று வரலாற்றைப் புரட்டிப் போடுகிறவர்கள், ஒரு கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும். முஸ்லிம் மன்னர் ஆட்சிக் காலம் முடிந்த பிறகு, இந்த சமூகக் கொடுமைகளை ஒழிக்க வேண்டும் என்று பார்ப்பனர்களோ அல்லது இந்துத்துவ வாதிகளோ குரல் கொடுத்ததாக வரலாறு உண்டா? இன்னும் சொல்லப் போனால் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நீதிமன்றங்களில் ‘மெக்காலே’ அறிமுகப்படுத்திய பொது கிரிமினல் சட்டம் வரும் வரை வர்ணாஸ்ரம அடிப்படையிலேயே தண்டனை வழங்குவதை ஆதரித்தவர்களும் பிரிட்டிஷ் நீதிபதிகளுக்கு அதற்கான ஆலோசகர்களாக இருந்தவர்களும் பார்ப்பனர்கள்தான். ‘பால்ய விவாகம்’, ‘விதவை மறுமணம்’, ‘தேவதாசி முறை’ போன்ற சமூகக் கொடுமைகளுக்கு எதிராக பிரிட்டிஷார் சட்டம் கொண்டு வந்தபோது அதை எதிர்த்து கூப்பாடு போட்டதும் பார்ப்பனர்கள்தான்!

இந்துமதத்தின் ஜாதி அமைப்புதான் முஸ்லிம் மன்னர்கள் ஆட்சிக்குப் பிறகும்கூட இந்து மதத்தை உறுதியாக ஆடாமல் அசையாமல் காப்பாற்றியது, என்கிறார், ஆர்.எஸ்.எஸ்.சுக்கு கொள்கையை உருவாக்கித் தந்த கோல்வாக்கர்.

இந்த வரலாறுகளை புறந்தள்ளிவிட்டு தீண்டாமைக்கு காரணமே இஸ்லாமியர்கள்தான் என்று நூல் எழுதுவது வரலாற்றுப் புரட்டு அல்லவா?

அதே தொகுப்புகளில் “‘சமத்துவம்’ என்ற கொள்கை இந்து கலாச்சாரத்துக்கு ஏற்புடையது அல்ல. சமத்துவ சமூகத்தில் போட்டிகளும் சண்டைகளும் இருக்கும். எனவே சமூக வேறுபாடுகளை அங்கீகரித்து சமூக நல்லிணக்கம் பேணுவதே இந்து கலாச்சாரம் என்றும் வெளிப்படையாகவே எழுதப்பட் டிருக்கிறது!” – என்பதையும் சுட்டிக்காட்டுகிறோம்.

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவு வலைவீசி இஸ்லாமிய, கிறிஸ்துவத்துக்கு எதிராக அணி திரட்டுவதற்கு இத்தகைய வரலாற்றுப் புரட்டுகள் இந்துத்துவத்துக்கு இப்போது தேவைப்படுகிறது.

# முத்துப்பேட்டையில் பெரியார் சிலை கூண்டு - கழக முயற்சியால் நீக்கம்



திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அருகில் கடந்த 16 செப்டம்பர் 1996ம் ஆண்டு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் தந்தை பெரியாருக்கு முழு உருவ சிலை வைக்கப்பட்டு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ திறந்து வைத்தார். 2 ஆண்டுகள் கழித்து முத்துப்பேட்டை பகுதியில் உள்ள இந்துத்துவ சக்திகளால் பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்டது. மீண்டும் கடந்த 2004ம் ஆண்டு மதிமுக சார்பில் புதிதாக முழு உருவ பெரியார் சிலை அமைக்கப்பட்டு மதிமுக பொதுச் செய லாளர் வைகோ திறந்து வைத்தார்.

இந்த நிலையில் முத்துப்பேட்டையில் இந்துத்துவா சக்திகளின் தொடர் சதி செயல்களால் பல்வேறு மத கலவரங்கள் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டன. வருடா வருடம் இந்து முன்னணி பா.ஜ.க. சார்பில் வினாயகர் ஊர்வலங்கள் நடத்தப்பட்டு தொடர்ந்து முத்துப்பேட்டை பகுதிகளில் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்து வந்தனர். தந்தை பெரியார் சிலையை எப்படியேனும் அகற்ற பல்வேறு சதி திட்டங்களை தீட்டி வந்தனர்.

இந்த சூழ்நிலையில் திடீரென அக்டோபர் 6ம் தேதி அன்று எந்த முன்னறிவிப்பும் கொடுக்காமல் முத்துப்பேட்டை பகுதியில் சட்ட ஒழுங்கை பாராமரிப்பதாக காரணம் காட்டி முத்துப்பேட்டை பேரூராட்சி செயல்அலுவலர் நாராயணமூர்த்தி என்ற பார்ப்பன அதிகாரி பெரியார் சிலையினை இரும்பு கூண்டு போட்டு அடைத்து வைத்தார். இந்த நிகழ்வு முத்துப்பேட்டை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

செய்தி அறிந்த திருவாரூர் மாவட்ட கழகச் செயலாளர் இரா. காளிதாசு உடனடி யாக முத்துப்பேட்டை பகுதிக்கு சென்று கூண்டு போடப்பட்ட பெரியார் சிலையை புகைப்படம் எடுத்து மன்னார்குடி கோட் டாட்சியரிடம் பெரியார் சிலைக்கு போடப் பட்ட இரும்புக்கூண்டை உடனடியாக அகற்றக் கோரியும், தவறினால் வரும் சனிக் கிழமை அக்டோபர் 11 அன்று திராவிடர் விடுதலைக்கழகத்தின் சார்பில் முத்துப் பேட்டையில் இரும்புக்கூண்டு அகற்றும் போராட்டம் நடைபெறும் எனக்கூறி மனு அளித்தார். மனுவை பெற்றுக் கொண்ட கோட்டாட்சியர் மாவட்ட ஆட்சித் தலைவர் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்.

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் மதி வாணன், அக்டோபர் 7 மதியம் இப் பிரச்சினையில் நேரடியாக தலையிட்டு பெரியார் சிலைக்கு போடப்பட்ட இரும்புக் கூண்டை உடனடியாக அகற்ற முத்துப் பேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தினார். அதிகாரிகள் மாலை 5 மணியளவில் இரும்புக்கூண்டை அகற்றினர்.

இப்பிரச்சினையில் உடனடியாக திராவிடர் விடுதலைக்கழகம் தலையிட்டதின் பேரில் முடிவுக்கு வந்தது இந்துத்துவா சக்திகளுக்கு தக்க பதிலடியாக அமைந்தது.

## நெமிலியில் பெரியார் 136ஆவது பிறந்தநாள்

நெமிலியில் 22-09-2014 அன்று மாலை 6 மணியளவில் தந்தை பெரியாரின் 136-வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. மரக்கன்று நடுதல் நிகழ்வும், அதைத் தொடர்ந்து பொதுக்கூட்டமும் நடை பெற்றது. பொதுக்கூட்டத்தின் முதல் நிகழ்வாக தேனிசை செல்லப்பா இசைக்குழு வினரால் பாடல்கள் பாடப்பட்டன. மாவட்ட அமைப்பாளர் திலீபன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

இளந்தமிழகம் இயக்கத்தைச் சார்ந்த பரிமளா, காஞ்சி மக்கள் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் மகேஷ், திராவிடர் விடுதலைக் கழகத்தின் விழுப்புரம் மாவட்ட அமைப்பாளர் அய்யனார், தமிழக மக்கள் சக்தி கன்.மோகன், ‘வெங்காயம்’ திரைப்பட இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். நிகழ்ச்சியில் காஞ்சி மக்கள் மன்றத் தோழர்கள் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### ‘தீபாவளி’ கொண்டாடலாமா?

ஆரியர்கள், திராவிடர்களைக் கொல் வதானால் மானம், வெட்கம் பார்க்காமல் மிருகங்களுடன் புணர்ந்தாலும் சரி, மலத்தைத் தின்னாலும் சரி, ‘எப்படியான இழிவான அசிங்கமான காரியத்தைச் செய்தாவது கொல்லலாம்’ என்கின்ற தர்மத்தை ஆரியர்களுக்குப் போதிக்க வந்த மனுநூல் போன்ற ஒரு கோட் (Code) தானே ஒழிய, இப்புராணங்களுக்கு வேறு என்ன கருத்துச் சொல்ல முடியும்?

ஆகவே, அப்பேர்ப்பட்ட கதையில் ஒன்றான நரகாசூரன் கதையை நம்பி நாம் பண்டிகை கொண்டாடலாமா? நாம் திராவிடரல்லவா?

– **பெரியார் ‘குடிஅரசு’** 7.10.1944

# ‘ஜனார்த்தன் பூஜாரி’யின் சமூகப் புரட்சி

ஜனார்த்தன் பூஜாரி என்ற பெயர் நினைவிருக்கிறதா? ராஜீவ் அமைச்சரவையில் அமைச்சர்; வங்கியில் ‘கேட்பாரற்று’ முடங்கிக் கிடக்கும் பணத்தை ஏழை மக்களுக்கு வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தியதன் வழியாக பிரபலமானவர்; ‘பில்லவா’ என்ற தாழ்த்தப்பட்டப் பிரிவைச் சார்ந்தவர்; அவர் மகத்தான புரட்சி ஒன்றை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார். கருநாடக மாநிலம் மங்களூரில் குத்ரோலியில் உள்ள கோகர் நந்தீசுவரன் கோயிலின் அர்ச்சகர்களாக இரண்டு பெண்களை அவர் நியமித்துள்ளார். அந்த இரண்டு பெண்களும் ‘தலித்’ சமூகத்தைச் சார்ந்தவர்கள். அதுமட்டுமல்ல, கணவர்களை இழந்தவர்கள். இந்தப் பெண்களை கண்களால் பார்ப்பதே தீங்கானது என்று இந்து மத ஆச்சாரத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள். இப்போது லட்சுமி (65), சந்திரவதி (45) என்ற அந்த இரண்டு பெண்களும் அர்ச்சகர்கள் என்று அறிவித்துள்ளார், கோயில் நிர்வாகக் குழுவின் தலைவர் ஜனார்த்தன் பூஜாரி. செப்டம்பர் 24, 2014 அன்று, இந்தப் புரட்சி நடந்துள்ளது. இரண்டு பெண்களையும் அன்று கோயிலுக்குள்ளும் கோயில் கர்ப்பகிரகத்துக்குள்ளும் அழைத்துச் சென்றார் ஜனார்த்தன் பூஜாரி. கோயில் தலைமை அர்ச்சகர் லட்சுமண காந்தி இந்த தலித் பெண்களுடன், கோயில் நிர்வாகக் குழுத் தலைவர் உத்தரவை ஏற்று, கோயில் கர்ப்பகிரகத்தில் இணைந்து ‘பூஜை’களை செய்தார்.

எந்த அடிப்படையில் இந்தப் பெண்கள் தேர்வு செய்யப்பட்டனர்? என்ற கேள்விக்கு, “சமூக சீர்திருத்தவாதி நாராயண குரு பரப்பி வந்த ஜாதிகளற்ற சமூகம் உருவாக வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் இந்தப் பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று பதிலளித்ததோடு, மக்கள் அனைவருமே கடவுளின் குழந்தைகள் என்பதே நாராயண குருவின் கொள்கை என்பதையும் சுட்டிக்காட்டினார். இதேபோல் தலித் பெண்கள் மேலும் அர்ச்சகர்களாக்கப்பட இருக்கிறார்கள் என்றும் அவர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் உருவாகி வருவதாகவும் கூறிய ஜனார்த்தன் பூஜாரி, இத்தகைய சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு எவருடைய ஆணைக்காகவும் அனுமதிக்காகவும் காத்திருக்க வேண்டியதில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இளம் வயதிலேயே தீண்டாமைக்கு உள்ளாக்கப்பட்டவன் நான். இந்த சமூக வேற்றுமைக்கு எதிராக நான் உறுதியாகப் போராடி வருகிறேன். நாட்டில் சட்டங்கள் இருந்தாலும் தீண்டாமை தொடரவே செய்கிறது. இந்த நியமனமும் தீண்டாமை ஒழிப்புக்கான நடவடிக்கைதான்” என்று உறுதிப்படக் கூறுகிறார் பூஜாரி.

பீகார் தலித் முதல்வர் ஜித்தன் ராம் மஞ்சி, கோயிலுக்குள் சென்றதால் கோயில் பார்ப்பன அர்ச்சகர்களால் தீட்டு கழிக்கப்பட்டது பற்றி கேட்டதற்கு சமூகம் எப்படி ஜாதி உணர்வுடன் இருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று என்றார். அரசு கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் தலித் பெண்களை அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டும் என்று மாநில முதல்வர் சித்தராமையாவுக்கும் அவர் வேண்டுகோள் விடுத்தார். தலித் மற்றும் தலித் பெண்களுக்காகவே அர்ச்சகர் பயிற்சி மய்யம் ஒன்றை உருவாக்கும் வேலைகள் நடந்து வருகின்றன என்றும் பூஜாரி கூறினார்.

இந்த ‘சமூகப் புரட்சி’ உங்களுக்கு வரலாற்றுப் புகழைத் தேடி தரும் பூஜாரி!

## அய்.அய்.டி. ‘அக்ரகாரம்’

இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி என்ற அய்.அய்.டி - உயர் தொழில் நுட்பக் கல்வி பார்ப்பனர்களின் ஆதிக்கக் கூடாரமாகவே விளங்குகிறது. இடஒதுக்கீட்டின் கீழ் இங்கே படிக்க வரும் மாணவர்கள், பார்ப்பனர்களின் அவமதிப்புகளைத் தாங்காமல் மன உளைச்சலுக்கு உள்ளாகிறார்கள். குறிப்பாக இங்கே படிக்க வரும் தலித் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதும் தொடர்ந்து நிகழ்கிறது. ரூர்கலாவில் உள்ள அய்.அய்.டி. வளாகத்தில் மூன்றரை ஆண்டுகளுக்கு முன்பு செருப்பு வைத்தும் ‘சாமார்’ சமூகத்திலிருந்து படிக்க வந்த மனிஷ்குமார், அவமானத்துக்குள்ளாக்கப்பட்டார். அவரது உடல் சடலமாக கல்லூரி வளாகத்தில் கிடந்தது. அவரது மரணம் குறித்த மர்மம் இன்னமும் நீடிக்கிறது.

கடந்த வாரம் பம்பாய் அய்.அய்.டி. வளாகத்தில் அனிகட் அம்ப்ஹோர் எனும் தலித் மாணவர் மர்மமான முறையில் இறந்தார். தனது மகனின் மரணத்தில் மர்மம் இருப்பதாக அவரது பெற்றோர்கள் கூறுகிறார்கள். இடஒதுக்கீட்டின் கீழ் படிக்க வந்தவர் என்று அவர் பார்ப்பனர்களால் தொடர்ந்து அவமதிக்கப்பட்டு வந்தார். அய்.அய்.டி.யில் ஜாதியம் குறித்து ஆய்வு செய்யும் அனுப்குமார் கூறுகையில் - “இதுபோன்ற தரமான உயர்கல்வி நிலையங்களில் படிக்கும் தகுதி தலித் மாணவர்களுக்கு இல்லை என்ற மனநிலைக்கு தலித் மாணவர்கள் தள்ளப்படுகிறார்கள்” என்று கூறுகிறார். ‘பார்ப்பன கலாச்சாரமே’ நிறுவனத்தின் மய்யக் கலாச்சாரமாக்கப்பட்டு, அதற்காக அய்.அய்.டி.க்கு, “அய்யர்-அய்யங்கார் நிறுவனம்” என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். பேராசிரியர்கள் ஜாதி-மத அடையாளங்களைப் பூண்டிருப்பதோடு, அதே போன்ற அடையாளங்களை (நாமம், விபூதி, பூணூல்) அணியும் மாணவர்களுக்கே தனி மரியாதை தனிச் சலுகை காட்டுகிறார்கள் என்று தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கூறுகிறார்கள். “ஜாதி அமைப்பு பெருமைக்குரியது” என்று தனது சக மாணவர் கூறுவதாக ஒரு தலித் மாணவர் கூறினார். இட ஒதுக்கீட்டை ஆதரித்துப் பேசினால், “உடனே நீ எந்த ஜாதி” என்று கேட்கப்படுவது வழக்கம். அதே போல், தலித் சமூகத்தின் பேராசிரியர்கள் கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள் என்று தலித் மாணவர்கள் கூறுகிறார்கள். பல கருத்தரங்கு களில் தாம் பங்கேற்கும்போது கல்வியாளர்களாக பார்ப்பனர்கள் மட்டுமே இருப்பதும், அங்கே எல்லாம் தான் தனிமைப்படுத்தப்படுவதையும், சமூக நீதிக்காக குரல் கொடுத்துவரும் பேராசிரியர் காஞ்ச்ச அய்லயா கூறுகிறார்.

பல்கலைக்கழக நிதிக்குழுவின் முன்னாள் தலைவர் சுகதேவ் தோரத் ஒரு அம்பேத்கரிஸ்ட். உயர் கல்வி நிறுவனங்களில் அவர் நடத்திய ஆய்வில் இட ஒதுக்கீட்டின் கீழ் வரும் மாணவர்களில் 72 சதவீதம் பேர் புறக்கணிப்புக்கும் அவமதிப்புக்கும் உள்ளாகிறார்கள் என்று கூறியுள்ளார். இடஒதுக்கீட்டின் கீழ் படிக்க வரும் மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் செயல்முறை பயிற்சிகளில் உயர்ஜாதிப் பேராசிரியர்கள் பாகுபாடு காட்டுவதாகவும், தோரத் ஆய்வறிக்கை கூறுகிறது. இடஒதுக்கீட்டுப் பிரிவால் ‘தகுதி’ கெட்டுப் போகிறது என்ற வாதம் உண்மையானது அல்ல என்று மறுக்கிறார் ஆய்வாளர் குமார். நுழைவுத் தேர்வுக்கு பார்ப்பன உயர்ஜாதிப் பிரிவு மாணவர்கள், தனிப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு மதிப்பெண் பெறும் எந்திரமாக வடிவமைக்கப்படுகிறார்கள். அந்த வாய்ப்பு வசதிகள் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கிடைப்பதில்லை. எனவே, மதிப்பெண் மட்டுமே ஒரு மாணவரின் தகுதிக்கான அடையாளம் அல்ல என்கிறார், ஆய்வாளர் குமார். ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (செப்.14, 2014) வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையில் இத்தகவல்கள் இடம் பெற்றுள்ளன. நீண்டகாலமாக பெரியார் இயக்கம் மக்கள் மன்றத்தில் முன் வைத்து வரும் இதே கருத்துகளை இப்போது ஆய்வாளர்கள் கூறுகிறார்கள் என்பது தான் இதிலே கோட்டிட்டுக் காட்டப்பட வேண்டிய உண்மை.

## தனியார் துறை வேலை வாய்ப்புகளை உறுதி செய்கிறது கருநாடகம்

தனியார் துறையில் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உறுதி செய்யும் தொழில் கொள்கையை கருநாடக காங்கிரஸ் ஆட்சி அறிவித்துள்ளது. இதன்படி தனியார் தொடங்கும் புதிய தொழில்கள், பெங்களூர் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் இருக்கக் கூடாது. மாநிலத்தின் வேறு பகுதிகளில்தான் தொடங்க வேண்டும். அப்படி தனியார் தொடங்கும் தொழில் நிறுவனங்களில் கீழ் மட்ட ‘டி’ பிரிவு வேலைகள் நூறு சதவீதம் உள்ளூர் மக்களுக்கே வழங்க வேண்டும், ஏ.பி.சி. போன்ற உயர்மட்ட பதவிகளில் 70 சதவீதம் உள்ளூர் மக்களுக்கே வழங்க வேண்டும் என்று கருநாடக அமைச்சரவை தனது கொள்கை முடிவை அறிவித்துள்ளது. 5 இலட்சம் கோடி முதலீட்டுக்கு இலக்கு நிர்ணயித்து 1.5 மில்லியன் வேலை வாய்ப்புகளை மாநிலத்தில் பின் தங்கியுள்ள மாவட்டங்களில் உருவாக்குவதே அரசின் நோக்கம் என்று, கூடுதல் தலைமை செயலாளர் கே. இரத்தினா பிரபா கூறினார். பெண் தொழில் முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்துவதற்கு அவர்களுக்காக தொழில் மண்டலங்களை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளதாக அவர் கூறினார்.

தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட கொள்கைகளை அரசு ஏன் உருவாக்கக் கூடாது? நோக்கியா நிறுவனம் திடீரென்று தனது உற்பத்தியை நிறுத்திக் கொண்டுள்ளதால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நட்டாற்றில் விடப்பட்டுள்ள நிலையில் இவர்களின் பாதுகாப்புக்கான எந்த நடவடிக்கையையும் தமிழக அரசு எடுக்கவில்லை.

## ஜாதியும் தூய்மையும்

“நாட்டில் அருவருப்பான தீண்டாமையை சுத்தப்படுத்தாமல் தெருவை சுத்தப்படுத்தக் கிளம்பிவிட்டார் மோடி” என்று ‘தி பிசினஸ் லைன்’ ஆங்கில ஏடு தலையங்கம் தீட்டியுள்ளது. தூய்மையான இந்தியாவும் ஜாதிய ஒடுக்குமுறையும் ஒரே காலத்தில் இருக்க முடியாது என்று எழுதியுள்ள அந்த ஏடு, தீண்டாமைக் குற்றங்களை ‘தேசியக் குற்றப் பதிவேடுகள் நிறுவன’ அறிக்கையிலிருந்து எடுத்துக் காட்டியுள்ளது. 2012 ஆம் ஆண்டில் 16.7 சதவீதமாக இருந்த தீண்டாமைக் குற்றங்கள் 2013 ஆம் ஆண்டில் 19.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள் 5.7 சதவீதத்திலிருந்து (2012), 6.5 சதவீதமாக (2013) அதிகரித்துள்ளது. மனித மலத்தை மனிதன் சுமப்பதும் தொடர்கிறது. தெற்காசிய மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு இயக்குனர் மீனாட்சி கங்குலி, இதை ‘தீண்டாமையின் மிக மோசமான அடையாளம்’ என்று கூறுகிறார். “மோடி அவர்களே! ஜாதிப் பாகுபாடற்ற தூய்மையான இந்தியாவை உங்களால் கொண்டுவர முடியுமா?” என்று கேள்வி எழுப்பி, காந்திக்கு செய்யும் மரியாதை அதுதான் என்று தலையங்கத்தை முடித்திருக்கிறது அந்த ஏடு. மலம் எடுப்பது கடவுளுக்கு செய்யும் தொண்டு என்று தனது ‘கர்ம யோகம்’ நூலில் எழுதிய மோடி, இதை எப்படி ஏற்பார்?

## ஜாதி பற்றி உச்சநீதிமன்றம்

ஜாதித் தடைகள் இல்லாமல் மக்கள் வாழ வேண்டும் என்பது சமூகத்தில் சடங்குத்தனமான பேச்சாக இருக்கிறதே தவிர, யதார்த்தமாகவில்லை என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. 2010இல் ஹரியானாவிலுள்ள மிர்ச்சூரில் தலித் குடியிருப்புகள், ஆதிக்க சாதியினரால் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டன. 100 தலித் குடும்பங்கள் ஊரை காலி செய்து ஓடிவிட்டனர். 70 வயது முதியவரும், அவரது உடல் ஊனமுற்ற மகளும் கொல்லப்பட்டனர். கடந்த 4 ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட தலித் குடும்பங்கள் மீண்டும் கிராமத்துக்கு திரும்ப முடியவில்லை. அவர்கள் மறு வாழ்வுக்கான நடவடிக்கைகளையும் மாநில அரசு எடுக்கவில்லை. இது குறித்து தொடரப்பட்ட பொது நலன் வழக்கை நீதிபதி எஸ்.ஜே.முகோபாத்யாயா தலைமையிலான அமர்வு விசாரித்து வழங்கிய உத்தரவில் ஜாதிய சமூகத்தின் மோசமான நிலையை படம் பிடித்தது.

“அனைத்து ஜாதியினரும் சேர்ந்து வாழ வேண்டும் என்பதுதான் நியதி. ஆனால் அப்படி வாழ்வது என்பது வெறும் பேச்சாகவே இருக்கிறது. அனைத்து மக்களும் அச்சமின்றி இணைந்து வாழவே வேண்டும். ஆனால், இப்போது அவர்கள் சேர்ந்து வாழ 4 போலீசாரின் பாதுகாப்பு எப்போதுமே தேவையாகிவிட்டது. அரியானாவின் பூபிந்தர் சிங் ஹீடா ஆட்சி பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறு வாழ்வை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு இருக்கிறது. இன்னும் கிராமத்துக்கு திரும்ப முடியாத இவர்களுக்கு நிலம் வழங்க வேண்டும். இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தின் கடமை” என்று நீதிபதிகள் தீர்ப்பில் கண்டிப்புடன் குறிப்பிட்டனர்.

**தொகுப்பு : இரா**

# வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு: கோபியில் எழுச்சிக் கூட்டம்

ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பாக மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் மற்றும் வஞ்சிக்கபடும் தமிழ்நாடு விளக்கப் பொது கூட்டம் 13.08.2014 அன்று கோபியில் நடைபெற்றது. மாலை 3.00 மணிக்கு வடக்கு மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் கோபி அருகே ல.கள்ளிப்பட்டியில் அமைந்துள்ள கண்ணப்பனார் மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்க மாநில பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன், மாநில பெருளாளர் ப.ரத்தினசாமி, மாநில செயலவைத் தலைவர் துரைசாமி, மண்டல செயலாளர் இராம இளங்கோவன் உள்ளிட மாவட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கழகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிப் பணிகள் பற்றியும் கழகத்தின் கட்டமைப்பு பணிகள் பற்றி தோழர்கள் பல்வேறு கருத்துகளை கூறினர். கூட்டத்தில் மறைந்த மேட்டூர் கழகத் தோழர் ஆசை தம்பிக்கு இரங்கல் தீர்மானமும், மாவட்ட கழகத்தின் சார்பாக 1000 பெரியார் முழக்கம் சந்தா சேர்ப்பதாகவும் கல்லூரி, பள்ளிகளின் முன்பாக வாயிற் கூட்டங்கள் நடத்துவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன. மேலும் அமைப்பிற்கு புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். அதன் அடிப்படையில் மாவட்ட கழக தலைவராக நாத்திக ஜோதி, மாவட்ட செயலாளராக அர்ஜீனன், மாவட்ட அமைப்பாளராக ம.நிவாசு, கோபி கோட்ட அமைப்பாளராக க.ஆனந்தராஜ், அந்தியூர் கோட்ட அமைப்பாளராக வேணுகோபால், சத்தி கோட்ட அமைப்பாளராக வேலுச்சாமி, தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளராக கூதாம்பி மூர்த்தி, தமிழ்நாடு அறிவியல் மன்ற மாவட்டத் தலைவராக சுந்தரம், மாவட்ட செயலாளராக வீரன், வழக்குரைஞர் பிரிவு-பொறுப்பாளராக ஜெகதீஸ்வரன், துண்டறிக்கை புத்தகம் மற்றும் பெரியார் முழக்கம் விற்பனை மற்றும் தொடர்பாளராக வே.ப.ரவிக்குமார் என புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கபட்டார்கள்.

பின்னர் இரவு 7 மணிக்கு கோபி பெரியார் திடலில் ‘வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு’ என்கிற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி தலைமையேற்க, ம.நிவாசு வரவேற்புரை ஆற்றினார். கூட்டத்தின் முதல் நிகழ்வாக சுயமரியாதை, கலை பண்பாட்டு கழகத்தின் வீதி நாடக குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்பு தலைமை கழகத்தின் பேச்சாளர் வேலுச்சாமி, ஈரோடு மண்டல செயலாளர் இராம. இளங்கோவன், மாநில பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன், மாநில பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினர். பின்னர் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய சிறப்புரையில், அணு உலையினால் தமிழ்நாட்டிற்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் மீதேன் எடுப்பதால் தஞ்சை டெல்டா பகுதி பாலைவனம் ஆக்கப்படுவது பற்றியும் இராமர்பாலம் என்ற பெயரில் சேது சமுத்திர திட்டத்தை முடக்கி தமிழர்களின் முன்னேற்றத்தைத் தடுக்கப்படுவதைப் பற்றியும் காவிரி மேலாண்மை வாரியம் மோடி ஆட்சியில் இருட்டடிப்பு செய்வது பற்றியும் பார்ப்பன சுப்பிரமணியசாமி தமிழர்களுக்கு எதிராக பேசியது பற்றியும் விளக்கி மக்களிடம் கூறும்போது இனிமேலும் தமிழ்நாடு இந்தியாவுடன் இருப்பது அவசியம் தானா? என்று மக்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சுமார் 1½ மணிநேரம் பேசினார். பொதுகூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மற்றும் வியாபாரிகள், பொதுமக்கள் அனைவரும் கூட்டம் முடியும் வரை தங்களது இடத்தை விட்டு நகராமல் கருத்துகளை கேட்டனர். கூட்டம் இரவு 10½ மணிவரை நடைபெற்றது. நகர செயலாளர் வே.ப.ரவிக்குமார் அனைவருக்கும் நன்றி கூறினார். இரவு த.பெ.தி.க நாகப்பன் இல்லத்தில் தோழர்கள் அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டத்திற்கான ஏற்பாடுகளை ஈரோடு வடக்கு மாவட்ட கழகத் தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்ச்சி முடிந்த மறுநாள் 14.08.2014 அன்று ஆன்மிகத்தில் நம்பிக்கையுள்ள பொதுமக்கள் ஈரோடு மண்டல செயலாளர் இராம. இளங்கோவனிடம், “பெரியார் என்றால் கடவுள் இல்லை என்று சொன்னவர் என்று தான் இருந்தோம். ஆனால் பெரியார் தமிழ்நாட்டுக்காக இவ்வளவு பாடுபட்டுள்ளார் என்பது தெரியாது நேற்றைய கூட்டத்தில் உங்கள் தலைவர் பேசிய போதுதான் தெரிந்து கொண்டோம்” என்று கூறினார்கள்.

**செய்தி:வே.ப.ரவி**

# ‘மைல் கல்லுக்கு’ ஆயுத பூஜை




*மேட்டூரிலிருந்து கொளத்தூர் செல்லும் வழியில் மூலக்காடு அருகில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான மைல் கல்லிற்கு 2.10.2014 ஆயுதபூஜை அன்று வாழைக்கன்று கட்டி, மாலை அணிவித்து பூஜை செய்யப்பட்டிருந்தது. இது குறித்து விசாரித்தபோது சாலைப் பணியாளர்கள் இந்த பூஜை செய்ததாக தெரிகிறது. ஆனால், இது குறித்து ஒரு வாரத்திற்கு முன்னதாகவே மேட்டூர் நகர திராவிர் விடுதலைக் கழகம் சார்பில் இது மதசார்பற்ற நாடு எனவே மத சம்பந்தமான எந்த நடவடிக்கைகளையும் அரசு அலுவலகங்களில் செய்யக் கூடாது என அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் அரசு ஆணைக்கு எதிராக ஆயுத பூஜை செய்யாதீர்கள். மீறும் பட்சத்தில் எதிர் நடவடிக்கைகளில் திராவிடர் விடுதலைக் கழகம் இறங்கும் என பதிவு தபால் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எனவே அலுவலகங்களில் நிறைவேற்ற முடியாத ஆயுத பூஜையை ஆள் நடமாட்டமில்லாதபோது சாலையோர மைல்கல்லிற்கு பூஜை செய்து வழிபட்டுள்ளனர் நெடுஞ்சாலைத் துறையினர்.*

# பாலமலை புள்ளம்பட்டியில் பெரியாரியல் பயிற்சி வகுப்பு



*திராவிடர் விடுதலைக் கழகம் சேலம் மேற்கு மாவட்ட காவலாண்டியூர் கிளைக் கழக ஏற்பாட்டில் 27, 28.9.2014 அன்று பாலமலை புள்ளாம்பட்டியில் புதிய மாணவர்களுக்கான பெரியாரியல் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இதில் அமைப்பை சாராத புதிய மாணவர்கள் 56 பேரும், கழகத் தோழர்கள் 25 பேர் உள்பட 81 பேர் கலந்து கொண்டனர். பயிற்சி வகுப்பிற்கான ஏற்பாடுகளை தோழர்கள் ஈசுவரன், விஜயகுமார், சித்துசாமி, இராசேந்திரன், பழனிச்சாமி, பச்சியப்பன், அபிமன்யூ, பாலமலை குமார், வெள்ளையம் ஆகியோர் முன்னின்று சிறப்பாக செய்திருந்தனர். பாலமலைப் பகுதி, பேருந்து வசதியில்லாத மலை கிராமப் பகுதியாகும். எவ்வித இடையூறுகளும் இல்லாமல் அமைதியான சூழ்நிலையில் இயற்கைச் சூழ்ந்த மலைப் பகுதியில் சிறப்பாக நடைபெற்றது.*

*27.9.2014 அன்று காலை உணவு முடித்துக் கொண்டு காலை 10 மணிக்கு தாமரைக்கண்ணன் அறிமுகத்தோடு பயிற்சி வகுப்பை துவக்கி வைத்தார். தொடர்ந்து தேநீர் இடைவேளைக்குப் பின் காலை 11 மணி முதல் 1.30 வரை கொளத்தூர் குமார், ‘சமூக வளர்ச்சியில் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கம்’ என்ற தலைப்பில் வகுப்பெடுத்தார். பின்னர் மதியம் பன்றிக்கறி, உணவு முடித்துக் கொண்டு மதியம் 2.30 முதல் 4 மணி வரை காவை. இளவரசன், ‘மூடநம்பிக்கைகளும், இந்துமதப் பண்டிகைகளும்’ எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். மாலை 4 மணிக்கு பனைக்கருப்பட்டி சுக்குகாபி முடித்துக்கொண்டு 4.30 முதல் 6 மணி வரை மேட்டூர் மே.கா.கிட்டு, ‘பெரியார் பன்முகம்-ஓர் அறிமுகம்’ எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். மாலை 6 முதல் 8 மணி வரை பொள்ளாச்சி விஜயராகவன், ‘கடவுளர் கதைகள்’ குறித்து வகுப்பெடுத்தார்கள். இரவு உணவு முடித்துக்கொண்டு 10 மணி வரை தோழர்கள் கலந்துரையாடினர்.*


*28.9.2014 அன்று காலை 6 மணிக்கு மாணவர்கள் அனைவரும் குமரேசன் தலைமையில் மலைப்பகுதியில் நடைபயிற்சி சென்று 7.30-க்கு திரும்பினர். காலை உணவு முடித்துக் கொண்டு காலை 8.30 முதல் 10 மணி வரை பொள்ளாச்சி விஜயராகவன், கொளத்தூர் குமார் ஆகியோர், ‘இளைஞர்களே உங்களுக்குத் தெரியுமா?’ என்ற தலைப்பில் வகுப்பெடுத்தனர். தொடர்ந்து புள்ளாம்பட்டியில் பாலமலை தோழர்கள் அமைத்திருந்த கம்பத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகக் கொடியை ஏற்றினார். பாலமலைத் தோழர்கள் கழகத் தலைவருக்கு உற்சாக வரவேற்பு கொடுத்து அழைத்து வந்தனர். காலை 10.30 மணிக்கு தேநீர் முடித்துக் கொண்டு கனியூர் தமிழ்ச்செல்வன், ‘திராவிடர் இயக்க முன்னோடிகள்’ எனும் தலைப்பில் வகுப்பெடுத்தார்கள். தொடர்ந்து மதியம் 12.30 முதல் 2 மணி வரை தமிழ்நாடு அறிவியல் மன்றப் பொறுப்பாளர்கள் சிவகாமி, ரஞ்சிதா, தமிழ்ச் செல்வன் ஆகியோர் ‘தனி வாழ்க்கையும், சமூகத்திற்கான வாழ்க்கையும்’ எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தனர். மதியம் ஆட்டுக்கறி உணவு முடித்துக் கொண்டு, 3 மணி முதல் 4.30 மணி வரை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘வகுப்புரிமையின் அவசியம்’ எனும் தலைப்பில் வகுப்பெடுத்தார். அதனைத் தொடர்ந்து பயிற்சி வகுப்புகளை முன்னின்று சிறப்பாக நடத்திக் கொடுத்த பாலமலை குமார், வெள்ளையன், காவை பச்சையப்பன், பழனிச்சாமி, கிருத்துவ சர்ச் பொறுப்பாளர் ஜெயக்குமார் ஆகியோருக்கு கழகத் தலைவர் சிறப்பு செய்தார்.*

## “பிரபாஸ் கணிணி மய்யம்” திறப்பு விழா

*23-09-2014 அன்று காலை 10 மணியளவில், திருவொற்றியூரில் உள்ள தோழர் பாண்டியனின் “பிரபாஸ் கணிணி மய்யம்” திறப்பு விழா நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கணிணி மய்யத்தைத் திறந்து வைத்தார்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 16th October 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | அக்டோபர் 23, 2014 | புரட்சி 13 | முழக்கம் 41 | விலை: ரூ.3.00


## நிர்வாகம் – உண்மையை வெளியிட மறுக்கிறது

# மீண்டும் முடங்கியது, கூடங்குளம்

கூடங்குளம் அணுமின் திட்டம் மீண்டும் முடங்கியிருக்கிறது. அணுமின் நிர்வாகம் இந்த செய்தியை நாட்டு மக்களுக்கு அறிவிக்காமல் மறைத்தாலும் இணைய தளங்கள் வழியாக உண்மைகள் வெளிவந்துவிட்டன.

அணுமின் நிலையத்தில் மின் உற்பத்தியில் அணு உலைக்கலன்போல முக்கிய பங்காற்றுவது ‘டர்பைன்’. டர்பைன் தான் சுழற்சியின் மூலம் மின் சக்தியை உற்பத்தி செய்கிறது. கூடங்குளத்தில் முதல் மற்றும் இரண்டாவது அணுஉலைகள் உற்பத்தியைத் தொடங்கிவிட்ட நிலையில், இப்போது முதலாவது உலையில் ‘டர்பைன்’ செயலிழந்துவிட்டது, இதை சரி செய்வதற்கு ரஷ்யாவிலிருந்து விஞ்ஞானிகள் வர வேண்டும். அதற்கு குறைந்தது 4 வார காலமாகும். அதற்கு மேலும் பல மாதங்கள் ஆகலாம். இணை யங்களில் வந்துள்ள இந்த செய்தியை முதன்முதலாக ‘சன்’ தொலைக்காட்சி அக்.20 அன்று செய்தியில் ஒளி பரப்பியது. இது குறித்து உச்சநீதிமன்றத்தில் கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு எதிராக வழக்கு தொடர்ந்த, பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சார்ந்த பொறியாளர் சுந்தர்ராஜனிடம் தொடர்பு கொண்டோம். அவர் கூறியதாவது:

“கடந்த மாதம் 26 ஆம் தேதியிலிருந்தே ‘டர்பைன்’ பழுதடைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த உண்மையை நிர்வாகம் வெளியிடாமல் இரகசியம் காத்து வருகிறது. இரண்டாம் தலைமுறை நவீன தொழில் நுட்பத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இந்த அணுமின் திட்டம் நூறு சதவீதம் பாதுகாப்பானது என்று நிர்வாகம் கூறுகிறது. அதுகூட உண்மைதான். மின் திட்டம் செயல்படவே முடியாமல் முடங்கிக் கிடக்கும்போது நூறு சதவீதம் பாதுகாப்பு இருக்கத்தானே செய்யும்? இப்போது 2 ஆம் பிரிவில் உள்ள ‘டர்பைனை’ எடுத்து முதல் பிரிவுக்கு மாற்றப் போவதாகக் கூறுகிறார்கள். அது அவ்வளவு எளிதானது அல்ல என்று தொழில்நுட்பவியலாளர்கள் கூறுகிறார்கள்.

மன்மோகன்சிங் பிரதமராக இருந்தபோது அவர் இரஷ்ய சுற்றுப் பயணத்தில் இருந்த நேரத்தில் ஒரு நாள் விடியற்காலை கூடங்குளம் மின் நிலையத்தின் ஒன்று மற்றும் இரண்டாவது பிரிவு உற்பத்தியைத் தொடங்கி விட்டதாக அறிவித்தார்கள். அது ஒரு வருட காலமாகி விட்டது. இன்னும் வணிக அடிப்படையில் உற்பத்தி தொடங்கவில்லை என்று இப்போது கூறுகிறார்கள். வணிக அடிப்படையில் உற்பத்தியை அறிவிக்க வேண்டும் என்றால் உற்பத்தி தொடர்ச்சியாக தடையின்றி ஒரு மாதகாலமாவது நடக்க வேண்டும். அப்போதுதான் வணிக ரீதியாக விலை கொடுத்து வாங்க - முன் வருவார்கள். தொடர்ச்சியாக மின் உற்பத்தி நடக்கவில்லை என்பதாலேயே வணிக ரீதியாக உற்பத்தியை தொடங்க முடியவில்லை.

இந்த அணுமின் திட்டத்திற்கு இரஷ்யாவிடமிருந்து பெறப்பட்ட எந்திரங்கள் மிகவும் தரம் குறைந்தவை. இந்த எந்திரங்களை விற்பனை செய்த நிறுவனத்தின் (Zio-Podolsk) தலைமை அதிகாரி ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். தரம் குறைந்த எந்திரங்கள் உதிரிப் பாகங்களை இந்தியா, சீனா, பல்கேரியா போன்ற நாடுகளுக்கு விற்பனை செய்தார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு. ஆனால், கூடங்குளம் நிர்வாகத்தினர் எந்திரங்கள் நன்றாகத்தான் இருப்பதாக சாதித்தனர். உண்மை என்னவென்றால் உற்பத்தி தொடங்கி ஓராண்டு காலத்துக்குப் பிறகும் வணிகரீதியான உற்பத்தி நடக்கவில்லை. இந்த நிலையில் மூன்று மற்றும் நான்காவது பிரிவுகளைத் தொடங்க போவதாகக் கூறுகிறார்கள்” என்றார், பொறியாளர் சுந்தர்ராஜன்.

“கல்பாக்கத்தில் அணுமின் நிலைய ஊழியர்கள் குடியிருப்பில் தொழில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த ஒருவர், சக பாதுகாப்புப் படையினர் மூவரை மன அழுத்தம் காரணமாக அண்மையில் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். குடியிருப்பு வளாகத்தில் நடந்த இந்த துப்பாக்கி சூடு, கல்பாக்கம் உற்பத்தி நிலையத்தில் நடந்திருந்தால் மிகப் பெரும் ஆபத்தை சந்தித்திருக்க வேண்டியிருக்கும்” என்றும் அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையே கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு ரூ.30 கோடிக்கு நிர்வாகம் டீசல் வாங்கியிருக்கிறது என்ற தகவலை மனித நேய மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஜவாஹிருல்லா, சட்டமன்றத்தில் தெரிவித்திருந்தார். அணுசக்தியை எரிபொருளாக்கி மின்சாரம் தயாரிக்கும் ஒரு நிறுவனத்தில் இவ்வளவு தொகைக்கு ஏன் டீசல் வாங்க வேண்டும்? என்ற கேள்விக்கு, நிர்வாகம் பதில் சொல்லாமல் மவுனம் சாதிக்கிறது.

## விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம்: அடுத்து என்ன?

விடுதலைப் புலிகள் மீதான தடையை அய்ரோப்பிய ஒன்றியங்களுக்கான நீதிமன்றம் தடைக்கு கூறப்பட்ட காரணங்கள் நியாயமற்றவை என்று கூறி தடையை நீக்கியுள்ளது. இலக்சம்பர்க்கில் உள்ள இந்த நீதிமன்றத்தில் விடுதலைப் புலிகள் சார்பில் நெதர்லாந்து நாட்டைச் சார்ந்த வழக்கறிஞர் விக்டர் கோப் வாதாடினார். தீர்ப்புக்குப் பிறகு அளித்துள்ள பேட்டியில் தமிழ் ஈழப் பிரச்சினையை அரசியல் ரீதியாக நகர்த்துவதற்கு இந்த தீர்ப்பு பயன்படும்; சட்டரீதியான இந்த வெற்றியை அரசியல் வெற்றிக்குப் பயன்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்தியாவிலும் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்க வேண்டும் என்ற கருத்து வலிமை பெற்று வருகிறது.

இந்தப் பின்னணியில் ஈழத் தமிழர்கள் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலை என்பதற்கான சான்றுகளைத் தொகுத்து பேராசிரியர் இராமு. மணிவண்ணன் உருவாக்கியுள்ள ஆவணத்தின் உள்ளடங்கங்கள் சுருக்கத்தை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பதிவு செய்துள்ளது.

(உள்ளே பக்.2-3)

## வினாக்கள்... விடைகள்...!

+ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஊழல் எதிர்ப்பு கருத்தரங்கிற்கு தமிழக காவல்துறை அனுமதி மறுத்தது. – **செய்தி**

ஊழலை ஆதரிச்சு நடத்தியிருந்தால், காவல்துறை அனுமதியே தேவைப்பட்டிருக்காதே! புரிஞ்சுகிட்டு, செயல்படுங்க, தோழர்!

+ பிரதமர் மோடி அலுவலகத்தைத் தொடர்ந்து குடியரசுத் தலைவர் மாளிகையும் சைவத்துக்கு மாறிவிட்டது. – **செய்தி**

அப்ப, இனி, குடியரசுத் தலைவர் மாளிகையிலிருந்து மரண தண்டனை அறிவிப்புகள் ஏதும் வராதுன்னு சொல்லுங்க....

+ கங்கையை சுத்தப்படுத்தும் திட்டத்தை சீர்குலைத்து வருவது ஊழல்தான். – **உச்சநீதிமன்றம்**

அதே கங்கையில் முழுக்குப் போட்டா, ‘ஊழல் பாவ’த்திலிருந்து கரை சேர்ந்து விடலாம்னு ஒரு நம்பிக்கைதான்!

+ ஜெயலலிதாவுக்கு உச்சநீதிமன்றம் ஜாமீன். – **செய்தி**

‘கடவுளுக்கே’ ஜாமீன் வழங்கும் அதிகாரத்தை வரலாற்றிலேயே முதன்முதலாக பெற்ற பெருமை நமது ‘பாரத’ உச்சநீதிமன்றத்துக்கே கிடைத்துள்ள பெரும் “பாக்யம்”.

+ அயோத்தியில் இராமன் கோயில் கட்ட பா.ஜ.க. ஆட்சிக்கு 2019 வரை ஆர்.எஸ்.எஸ். கெடு. – **செய்தி**

ஆமாம்! அப்படி கட்டாமல் போனால் ‘இராமனே’ – மீண்டும் அங்கே ‘அவதரிப்பதற்கு’ ஏற்பாடுகள் நடந்துகிட்டு, இருக்கு!

+ உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா ஜாமீன் விசாரணையின் போது, சமஸ்கிருத சுலோகத்தை உச்சரித்தவாறு இருந்தேன்; பிரார்த்தனைக்கு பலன் கிடைத்தது. – **அ.தி.மு.க. வழக்கறிஞர் திவாகர்**

நல்லவேளை! வாதாடிய வழக்கறிஞர் நாரிமன் சமஸ்கிருதம் தெரியாதவராக இருந்திருக்கிறார்!

+ செவ்வாய் கிரகத்தில் 68 நாள்கள் மட்டுமே மனிதர்கள் உயிர்வாழ முடியும். – **அமெரிக்க விஞ்ஞானிகள்**

எங்க ஊரு ஜோசியருங்க.... செவ்வாய் கிரகத்தையே காலம்காலமாக உயிரோடு வெச்சிகிட்டு இருக்காங்க; தெரியுமா, தேதி?

+ இராஜபக்சேயை சிறையில் அடைக்காமல் விட்டதற்காக இப்போது வருந்துகிறேன். – **உச்சநீதிமன்ற முன்னாள் சிங்கள நீதிபதி சில்வா**

அப்படி, அடைக்காததற்காக இப்போது வருந்துறீங்க; அடைச்சிருந்தா அப்போதே வருந்திருப்பீங்க; அதுதான் வித்தியாசம்.

# போர்க் குற்ற விசாரணைக்கு - சான்று தரும் ஆவணம்


“இலங்கை : யானையை மறைக்கும் முயற்சி” என்ற ஆங்கில நூலை சென்னை பல்கலைக்கழக அரசியல் மற்றும் பொது நிர்வாகத் துறையின் பேராசிரியர் இராமு. மணிவண்ணன் எழுதி வெளியிட்டிருக்கிறார். இலங்கை அரசின் பயங்கரவாதம், இனப்படுகொலைக்காக கட்டமைத்த அதன் அரசியல், “இறுதித் தீர்வு”க்காக மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட முழுமையான யுத்தம். அதில் பாதிக்கப்பட்டோர், நேரில் கண்டோர் சாட்சியப் பதிவுகள் என்ற மூன்று தலைப்புகளில் நூலாசிரியர் ஈழத் தமிழர் போராட்டம், வரலாற்றுப் பின்னணிகளை சர்வதேச சட்டங்கள், தேசிய இனங்களுக்கான உரிமைகள், ‘இறையாண்மை’க் குரிய அரசுக்கு வரையறுக்கப்பட்டுள்ள உரிமைகள் என்ற பார்வையில் அற்புதமாக விளக்குகிறார்.

இவற்றோடு, இறுதிக்கட்டப் போரில் பாதிக்கப் பட்டோர், நேரில் கண்டவர் சாட்சியங்கள், கொலைக் களமாக மாற்றப்பட்ட ‘போரில்லாத பகுதி’; அய்.நா. பொதுச் செயலாளர் பான்கி மூன் நியமித்த குழுவின் அறிக்கை; கடமை தவறிய அய்.நா. அமைப்புகளை அம்பலப்படுத்தும் அய்.நா. உள்ளக அறிக்கை; (அந்த அறிக்கையில் பல பகுதிகள் - கறுப்பு மையிட்டு அழிக்கப்பட்டுள்ளன) மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பின் அறிக்கை, தமிழர் பகுதிகளில் பெண்கள் பாதுகாப்பின்மையை விளக்கிடும் சர்வதேச ‘நெருக்கடிகளுக்கான’ குழுவின் அறிக்கை, சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை கண்காணிப்பு, இறுதிப் போருக்குப் பிறகு, வடக்கு, கிழக்கு மாநிலங்களில் மக்கள் மீதான இராணுவம் மற்றும் அரசு கூட்டு அடக்குமுறைகளை விளக்கும் தமிழ் தேசிய கூட்டணியின் அறிக்கை, தமிழர் பகுதி களில் இராணுவ ஆக்கிரமிப்புகள், இராணுவ அடக்கு முறைகளைக் கண்டித்த சிங்கள பத்திரிகையாளரின் மரண வாக்குமூலம் - என முக்கிய ஆவணங்கள் பலவும் இணைக்கப்பட்டுள்ளன. இணைக்கப்பட் டுள்ள மற்றொரு முக்கிய ஆவணம், 1474 யாழ்ப் பாணத் தமிழர்கள் இணைந்து சிறீலங்கா நீதி மன்றத்தில் நிலக் கையகப்படுத்தும் அதிகாரி மற்றும் நில மேம்பாட்டுத் துறை அமைச்சருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் மனு; இறுதிப் போருக்குப் பின் குடியிருப்புக்கு திரும்பிய இந்த தமிழர்களின் நிலங்கள், அறிவிப்பு இல்லாமலே இலங்கை அரசால் கைப்பற்றப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழர்களுக்கு உரிமையான 6381 ஏக்கர் நிலம், இராணுவத்தளம் அமைப்பதற்காக பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.

976 பக்கங்களில் இந்த நூல் ஆவணப் பெட்டமாக வெளி வந்திருக்கிறது. நான்கு அடிப்படையான கருத்துகளை ஆழமாகப் பதிவு செய்திருக்கிறார், நூலாசிரியர். ஒன்று - ஆளும் சிங்களப் பேரினவாத ஆட்சிகளின் நோக்கம் - இனப்படுகொலைதான். இரண்டு - இதற்கான நிகழ்ச்சி நிரல்கள் 60 ஆண்டு களாகவே திட்டமிட்டு தொழில்படுகின்றன. மூன்று - அரசு மட்டுமின்றி, ஆளும் வர்க்கமான ‘அறிவு ஜீவிகள்’ (புத்த பிக்குகள் உள்ளிட்டோர்) அழித் தொழித்தலுக்கான அதிகாரங்களை அரசு ஆதர வோடு கையில் எடுத்துள்ளனர். நான்கு - ஆட்சி யாளர்களும் ஆளும் ஆதிக்க அறிவுஜீவிகளும் தமிழர்களை ஒடுக்குவதற்கான அரசியல் மற்றும் சமூக வெளியை இலங்கை அரசியல் கட்டமைப்பே உருவாக்கித் தருகிறது.

1948 ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட தமிழர் இன அழிப்புக்கான திட்டங்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதற்கான வெற்றிக் கொண் டாட்டமே முள்ளிவாய்க்கால். இப்படி இனப்படு கொலைக்காகவே நடத்தப்பட்ட இறுதிப் போருக்கு இலங்கை அரசு ஒவ்வொரு காலகட்டத்திலும் படிப்படியாக தன்னை தயார்படுத்தியே வந்திருப்பதை விரிவாகப் பேசுகிறது, இந்த ஆவணம்.

நார்வேயின் தலையீட்டில் போர் நிறுத்த உடன்பாடு உருவாகி விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசு பிரதிநிதிக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளின் இலங்கை அரசு உள்நோக்கமே - அரசியல் தீர்வுக்கு தயாராக இருப்பதாக உலக நாடுகளை ஏமாற்றுவதற்குத்தான். போர் நிறுத்தமும் சமாதானப் பேச்சுகளும் நடந்த காலத்தில்தான் அரசுக் கட்டுப்பாட்டில் இருந்த தமிழர் பகுதியான கிழக்கு மாகாணம் முழுமையாக இலங்கை இராணுவத்தின் பிடிக்குள் கொண்டு வரப்பட்டது. தமிழர்களின்




கலாச்சார அடை யாளங்கள் சிதைக் கப்பட்டன. தமிழர் பிரதேசமான கிழக்கு மாகாணம், தமிழர்களுடன் கொண்டிருந்த அரசியல் தொடர்பி லிருந்து துண்டிக் கப்பட்டது. விடு தலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை மட்டுமே தக்க வைத்துக் கொள் ளும் போராட்டத் துக்கு தமிழர்கள் தள்ளப்பட்டனர். அதே நேரத்தில், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் போர் நிறுத்தக் காலத்தை தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதிலும் மக்களுக்கான நலத் திட்டங்களைக் கொண்டு வருவதிலும் தீவிர கவனம் செலுத்தியது. சமாதானப் பேச்சுக்குப் பின்னால் நடந்த ‘அரசியலை’ அவதானிக்க விடுதலைப்புலிகள் தவறி விட்டார்கள். கிழக்குப் பகுதியை இராணுவ மயமாக்கி, ஆயுதங் களைக் குவித்துக் கொண்டு நார்வேயுடன் கையெழுத்திட்ட உடன்பாடுகளையும் படிப்படியாக மீறி, தன்னை முழுமையாக ஆயத்தமாக்கிக் கொண்டு ஒரு கட்டத்தில் போர் நிறுத்தத்தை முறியடித்துக் கொண்டு இராணுவத் தாக்குதலை இலங்கை தொடங்கிவிட்டது.

அரசியல் தீர்வுகளை சீர்குலைத்து, இராணுவ மோதலுக்குத் தயாராகிவிட்ட இலங்கையின் இந்த மூர்க்கமான போக்கை அதுவரை அரசியல் தீர்வை வலியுறுத்தி வந்த நாடுகள் கண்டிக்கத் தயாராக இல்லை. சர்வதேச சமூகம் அரசு திணித்த இந்தப் போரை எதிர்க்காமல் வாய்மூடி நின்றதுதான் அவலம்!

திட்டமிடப்பட்ட இனப்படுகொலை முடிந்த பிறகு தான், 2009இல் சர்வதேச சமூகம், மனித உரிமை மீறல்களையும் போர்க் குற்றங்களையும் பேசத் தொடங்கியது. அப்போதும்கூட தமிழர்கள் வரலாற்று ரீதியாகவே 60 ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டு வந்துள்ளதையும் அதன் நீட்சியே முள்ளிவாய்க்கால் படுகொலை என்ற உண்மையையும் விவாதங்களுக்கு உட்படுத்த சர்வதேச சமூகம் தயாராக இல்லை. ஊடகங்கள், சர்வதேசப் பார்வையாளர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் என அனைவரையும் போர்ப் பிரகடனப் பகுதியிலிருந்து வெளியேற்றி விட்டு, ‘சாட்சிகளற்ற’ ஒரு போர் இலங்கையில்தான் உலகிலேயே முதன்முதலாக அரங்கேறியது.

இப்போது, சர்வதேச மவுனம் கலையத் தொடங்கி யதற்கான காரணங்கள் என்ன? சொந்த நாட்டு குடி மக்களின் உயிர் வாழும் உரிமைக்கே பொறுப்பேற்கத் தயாராக இல்லாத ஒரு அரசு இலங்கையில் நடப்பதும், தமிழர்களின் பாரம்பர்ய பிரதேசங்களை இராணுவத்தின் பிடிக்குள் முழுமையாகக் கொண்டு வந்ததும் தான் காரணம். இலங்கையின் அரசியல் அகராதியில் ‘அரசு’, ‘தேசிய அரசு’, ‘அரசியல்’, ‘இறையாண்மை’, ‘தேசியம்’, ‘தேச பக்தி’ என்ற அனைத்து சொல்லாடல்களுக்கும் ஒரே அர்த்தம் தான் உண்டு. அது ‘சிங்களம்’, ‘சிங்களம்’ என்பது தான். முழுமையான ஒரு போரை நடத்துவதற்கான அரசியல் வெளியை சர்வதேச சமூகம்தான் இலங்கைக்கு உருவாக்கித் தந்தது. ஆனால், அந்த அரசியல் வெளி நேர்மையான அரசியல் தீர்வுகளை நோக்கி நகர்த்துவதற்கு பயன்படுத்தப்படவில்லை என்பதுதான் சோகம் என்று துல்லியமாக படம் பிடிக்கிறார் நூலாசிரியர்.

இராணுவ ரீதியான ஒடுக்குமுறையே இலங்கை யின் நோக்கம் என்பதற்கு சான்றுகளை அடுக்கிக் காட்டுகிறார், நூலாசிரியர்.

சிவில் சமூகத்தில் இராணுவத்தைக் குவிப்பதில் எண்ணிக்கை அடிப்படையில் தெற்காசியாவிலேயே முன்னிற்பது இலங்கைதான். வடக்கு கிழக்கு மாகாணத்தில் 6 குடிமகனுக்கு ஒரு இராணுவம் என்ற வீதத்தில் இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதே அந் நாட்டில் நிலவும் “ஜனநாயகம்” - “சுதந்திரத்துக்கான” சான்று. ஏற்கனவே இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கை 4 லட்சம். போர் முடிவுக்கு வந்து விட்டது என்று இராஜபக்சே அறிவித்தப் பிறகு, மேலும் ஒரு லட்சம் பேரை தேர்வு செய்ய வேண்டிய அவசியம் என்ன? போர் முடிந்ததற்குப் பிறகும் இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீட்டை 20 சதவீதம் மேலும் ஏன் அதிகரிக்க வேண்டும்? 2006-லிருந்து 2009 வரை 14.4 மில்லியன் கிலோ கிராம் வெடி மருந்துகள் விமானத்திலிருந்து வன்னிப் பகுதியில் போடப்பட் டுள்ளன. இந்த 3 ஆண்டுகளில் இதற்காக 13,000 முறை விமானம் பறந்திருக்கிறது. இந்தப் புள்ளி விவரத்தை நாடாளுமன்றத்தில் வெளியிட்டவர் அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர். (இது வெளிப் படையாக அறிவிக்கப்பட்டது மட்டுமே) இந்த 3 ஆண்டுகளில் ஒவ்வொரு நாளும் விமானக் குண்டுவீச்சில் சராசரியாக 116 பேர் கொல்லப்பட்டனர் என்று அய்.நா. தயாரித்துள்ள உள்ளக அறிக்கையின் பதிவை ‘அயர்லாந்து சமாதானப் பேரவை’ அம்பலப்படுத்தி யிருக்கிறது. இலங்கை அரசு - கல்வி, சுகாதாரம், குடியிருப்பு, சமூகப் பாதுகாப்பு, மக்கள் நலத் திட்டங் களுக்கான நிதி ஒதுக்கீட்டை 50 சதவீதத்துக்கும் கீழே குறைத்து, பல மடங்கு கூடுதலாக இராணுவத்துக்கு ஒதுக்கி வந்துள்ளது. 1980களிலிருந்தே ஆட்சியை இராணுவ மயமாக்கும் போக்கு தொடங்கி விட்டது.

1965 ஆம் ஆண்டிலிருந்து அரசு இராணுவத்துக்கு படிப்படியாக உயர்த்திய நிதி ஒதுக்கீட்டை புள்ளி விவரங்களுடன் நூல் பட்டியலிட்டுள்ளது.

இந்த “இராணுவ மயமாக்குதலை” கவனத்தில் கொள்ளாது, பல உதவும் நாடுகள். வளர்ச்சித் திட்டங்களின் அமுலாக்கம் வழியாக அமைதியை ஏற்படுத்த முடியும் என்ற தவறான புரிதலுக்கு வந்தன. ‘சுனாமி’யால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் மறு வாழ்வுக்கும் ஏற்கனவே நடந்த போரில் பாதிக்கப் பட்ட தமிழர் பகுதிகளை மீட்டுருவாக்கம் செய் வதற்கும் தாராளமாக நிதியை வழங்கின. அம் முயற்சிகள் தோல்வியில் தான் முடிந்தன.

போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு சமாதானம், பேச்சுவார்த்தைகள் நடந்த காலத்திலேயேகூட தமிழர்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல இயலாமல் இராணுவத்தின் கெடுபிடிகள் இருந்தன. இஸ்ரேல்-பாலஸ்தீனத்துக்கு இடையே அமெரிக்க தலையீட்டில் ‘ஓஸ்லோ’ உடன்படிக்கை உருவானபோது சுயாட்சிப் பிரதேசங்களான காசா மற்றும் மேற்கு கரைப் பகுதிகளில் வாழ்ந்த பாலஸ்தீனர்கள் சுதந்திரமாக சென்று வருவதற்கு இஸ்ரேல் இராணுவம் அனுமதிக்கவில்லை. காசாவிலிருந்து மாம்பழங்களை ஏற்றிக் கொண்டு, மேற்குக் கரையின் நபுலுஸ் நகரத்துக்கு செல்லும் டிரக்குகள் காசா எல்லைப் பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தால் நிறுத்தப்படும். அங்கு மீண்டும் இஸ்ரேல் டிரக்குகளில் ஏற்றப்பட்டு மேற்கு கரை எல்லைப் பகுதி வரும்போது அந்த மாம்பழங்களை இறக்கி மற்றொரு முறை பாலஸ்தீனர்களின் டிரக்குகளில் ஏற்றப்பட்டப் பிறகே ‘நபுலஸ்’ நோக்கி செல்ல முடியும். இந்த நடைமுறைகள் முடிய 3 நாள்களாகி விடும். அதற்குள் மாம்பழங்கள் அழுகிப் போய்விடும். பாலஸ்தீனர்களின் பிரதேசங்கள் சுயாட்சி பெற்றிருந்தாலும்கூட இஸ்ரேல் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ்தான் இயங்க முடியும் என்பதை இஸ்ரேல் உணர்த்திக் கொண்டே இருந்தது. இதே நடைமுறையைத்தான் நார்வே சமாதான அமைதி உடன்படிக்கை அமுலில் இருந்தபோதும் இலங்கை இராணுவம் பின்பற்றியது. பேருந்துகளில் பயணிக்கும் தமிழர்கள் ஆங்காங்கே சோதனைச் சாவடிகளில் இறக்கி நீண்ட கியூ வரிசையில் நின்று இராணுவத்தில் சோதனைக்குள்ளாக்கப்பட்ட பிறகுதான் மாற்றுப் பேருந்துகளில் பயணிக்க வேண்டும். ஒரு மைல் தூரத்திற்குள்ளேயே இராணுவம் இப்படி பலமுறை சோதனைகளை நடத்துவதை வழக்கமாகக் கொண் டிருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு செல்வதோ, தமிழர் பகுதியான மட்டக் கிளப்புக்கு செல்வதோகூட அவ்வளவு எளிது அல்ல; அச்சத்துக் கும் மன உளைச்சலுக்கும் உள்ளாகியே தீர வேண்டும்.

நூலின் ‘இறுதித் தீர்வு’ என்ற அத்தியாயம் திட்டமிட்ட இனப்படுகொலையைத்தான் இலங்கை நடத்தியது என்பதற்கு ஏராளமான சான்றுகளை முன் வைக்கிறது.

போரில் உயிர் தப்பியவர்கள், பாதிக்கப்பட்டவர்

(3 ஆம் பக்கம்)

# மருத்துவமனைகள் மீது 64 முறை குண்டுகள் வீசப்பட்டன!

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் நேரடி சாட்சியங்கள் இரத்தத்தை உறையச் செய்கிறது. கற்பனை செய்து பார்த்திட இயலாத கொடூரங்களையும் அவலங்களையும் உணர்த்தி இதயத்தை சுமையாக்கி விடுகிறது.

இத்தனைக்கும் மக்களை காப்பாற்றக்கூடிய நவீன தொழில்நுட்ப சாதனங்கள் அரசிடம் இருந்தன. அதைப் பயன்படுத்தி தமிழ் மக்களைக் காப்பாற்ற, இலங்கை இராணுவம் தயாராக இல்லை. இராணுவத் தாக்குதலுக்கும் அப்பால் உணவு, மருந்துகளை வழங்க மறுத்து பட்டினி சாவுக்கு கதவு திறக்கப் பட்டது. அய்.நா. தலைமைச் செயலாளர் பான்கி.மூன் நியமித்த குழுவின் அறிக்கையிலிருந்தே இதற்கான சான்றுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. “போரில்லாதப் பகுதி” என்று இராணுவம் அறிவித்த பகுதிகளிலும், ஏன், அய்.நா. அலுவலர்களுக்கான பாதுகாப்புப் பகுதிகளிலும்கூட குண்டுகள் வீசப் பட்டதை தேதி வாரியாக பான்கி மூன் நியமித்த குழுவின் அறிக்கை பதிவாக்கியிருக்கிறது. சுமார் 3 லட்சம் மக்கள் உயிர் பாதுகாப்புக்காக திரண்டிருந்த ‘போரில்லாத பகுதியில்’ (பிப்.6, 2009) நிலம், கடல், வானம் என்ற மூன்று பகுதியிலிருந்தும் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி (பல் குழாய் துப்பாக்கி, நீண்டதூரம் சென்று தாக்கி அழிக்கும் பீரங்கிகள், ஏவுகணைகள்) தாக்குதல் நடத்தியதை அய்.நா. அறிக்கை பதிவு செய்துள்ளது. “இறுதித் தாக்குதல் நடக்கப் போகிறது; போரில்லாத பகுதிக்கு பொது மக்கள் போய்விடலாம்” என்று இடைவிடாமல் இராணுவம் அறிவித்துக் கொண்டும் துண்டுப் பிரசுரங்களை வீசிக் கொண்டும் இருந்தன; அரசின் நோக்கம் இனப்படுகொலைதான் என்பதற்கு இது வலிமையான சான்று. தனது குடி மக்களைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்க வேண்டிய ஒரு அரசு, இப்படி உயிர் பிழைக்கும் வாய்ப்பை மக்களிடமே ஒப்படைக்குமா?

இலங்கை அரசு நியமித்துக் கொண்ட ‘போரில் கற்ற பாடம்; தீர்வை எட்டுதல்” (எல்.எல்.ஆர்.சி.) விசாரணை ஆணையத்தில் இராணுவ செயலாளர் கோத்தபய ராஜபக்சே, விமானப்படை தளபதி குணதிலகா அளித்த வாக்குமூலங்கள் அப்பாவி மக்களை மரணத்திலிருந்து காப்பாற்றக் கூடிய தொழில்நுட்பங்கள் அரசிடம் இருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றன. அரசிடமிருந்த ஆள் இல்லாத விமானங்கள் வழியாக இரவிலும் பகலிலும் மக்கள் வாழும் பகுதிகள், மருத்துவமனைகள், பள்ளிக் கூடங்களை அடையாளம் காண முடியும். ஆயுதங் களோடு இருப்பவர்களையும் பிரித்துப் பார்க்க முடியும். குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட வேண்டிய இலக்குகளையும் தீர்மானிக்க முடியும். இந்த நவீன பாதுகாப்பு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தியதாகவும் பொது மக்களுக்கு எந்த ஆபத்தும் இல்லாமல் தாக்குதல் நடத்தப்பட்ட தாகவும் இலங்கை இராணுவ செயலாளர் வாக்கு மூலம் அளித்துள்ளார், ஆனால் நடந்ததோ நேர் மாறானது. அப்பாவி மக்களைக் கண்டறிவதற்கும், அவர்கள் மீது குண்டுகள் வீசு வதற்கும், பள்ளி மருத்துவமனைகளைக் கண்டறிந்து தாக்குதல் நடத்துவதற்குமே இவை பயன்படுத்தப்பட்டிருக் கின்றன. உதாரணமாக கைவிடப்பட்ட குழந்தை களுக்காக நடத்தப்பட்ட ‘செஞ்சோலை’ முகாமில் விமானக் குண்டு வீச்சு நடத்தி, 60க்கும் மேற்பட்ட குழந்தைகள் பிணமாக்கப்பட்டார்களே? அது குழந்தைகள் காப்பகம் என்பதைக் கண்டறிந்த பிறகுதானே? அதேபோல் இறுதிக் கட்டப் போரில் மருத்துவமனைகள் மீது குண்டுகள் வீசப்பட்டனவே, அது எப்படி? யுத்தக் களத்தில் சிக்கிக் கொண்ட செஞ்சிலுவை சங்க ஊழியர்கள், மருத்துவமனைகள் இருக்குமிடத்தை இராணுவத்திடம் பட்டியலிட்டுக் கொடுத்தனர். அங்கெல்லாம் குண்டுவீச்சு நடத்த வேண்டாம் என்று இராணுவத்திடம் வேண்டுகோள் வைத்தனர்.

இவ்வளவுக்குப் பிறகும் இராணுவம், மருத்துவ மனைகள் மீது இறுதிகட்டப் போரில் 64 முறை குண்டுகளை வீசியிருக்கிறது. மருத்துவமனைகள் இருப்பதை உறுதிப்படுத்தி, குண்டுகளை வீசுவதற்குத் தான் செஞ்சிலுவை சங்கம் வழங்கிய பட்டியலை இராணுவம் பயன்படுத்தியது. தாக்குதலிலிருந்து உயிர்பிழைத்த உள்ளூர் மருத்துவர்கள், மருத்துவ மனை இருக்கும் பகுதிகளை இராணுவத்திடம் தெரிவித்துவிட வேண்டாம் என்று செஞ் சிலுவை சங்கத்திடம் மன்றாட வேண்டியிருந்தது. 2009, பிப்.1 அன்று புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் 800க்கும் அதிகமான மக்கள் அடைக்கலம் புகுந்திருந்தனர். இதில் 500 பேர் நோயாளிகள் பிற்பகல் 3 மணியிலிருந்து 6 மணி வரையிலும் மீண்டும் இரவு 10.20 மணிக்கும், அடுத்த நாள் பிப்.2 ஆம் தேதி மாலை 6.40 மணிக்கும் மருத்துவமனை மீது குண்டுகள், வீசப்பட்டன. செஞ்சிலுவை சங்க மருத்துவ ஒருங் கிணைப்பாளர் மோர்வன்முர்ச்சிகன் லோசரி என் பவர் இதை தனது அறிக்கையில் உறுதி செய்துள்ளார்.

அரசு விசாரணை ஆணையத்திடம் (எல்.எல். ஆர்.சி.) வாக்குமூலம் அளித்த இராணுவ செயலாளர் கோத்தபய ராஜபக்சே (2010, ஆக.14) போர் நிறுத்தப் பகுதிக்குச் சென்று 20,000க்கும் மேற்பட்ட மக்களை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைத்ததாகவும் ஆனால் விடுதலைப் புலிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வற்காக மக்களை அங்கிருந்து போகவிடாமல், தடுத்து அவர்களை அச்சுறுத்த மனித வெடிகுண்டாக ஒரு போராளி மாறி மக்களை சாகடித்ததாகவும் வாக்குமூலம் அளித் துள்ளார். இது அப்பட்டமான பொய் என்பதை போர் முடிந்தவுடன் அதிபர் இராஜபக்சே ‘இந்து’ நாளேட்டின் ஆசிரியர் என்.ராமுக்கு அளித்த பேட்டி அம்பலப்படுத்திவிட்டது. (2009, ஜூன் 30) அந்தப் பேட்டியில், “போரில்லாத பகுதி எது என்று அறிவித்ததே இராணுவம்தான். அந்த இடங்களை அய்.நா.வோ அல்லது வேறு நபர்களோ அடையாளப்படுத்தவில்லை. நாங்கள் அப்படி அறிவித்த பகுதிக்குத்தான் பிரபாகரனும் அவரது போராளிகளும் வந்தனர். அவர்கள் தப்பிச் செல்ல வேறு எவருடைய வருகையையோ அங்கு எதிர்பார்த் திருந்தனர். இப்படி ஒரு இடத்தில் திரட்டி, சுற்றி வளைத்து தாக்கினோம்” என்று இராஜபக்சே உண்மையை வெளிப்படையாக கூறிவிட்டார்.

அய்க்கிய நாடுகள் அவையின் பயிற்சி மற்றும் ஆய்வு மய்யம் - இறுதி கட்டப் போரின் போது எடுத்த செயற்கைக் கோள் படம், இனப் படுகொலைக்கான வலிமையான சாட்சியமாகும். அமெரிக்காவில் இயங்கும் மனித உரிமை கண்காணிப்பகம், இந்தப் படங்களை தொழில்நுட்ப ஆய்வுக்கு உட்படுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் மக்கள் பெருமளவில் கூடியுள்ள பகுதிகளில் குண்டு வீச்சுகள் இராணுவம் நடத்தியிருப்பதை உறுதி செய்திருக்கிறது. போரின் கடைசி 6 மாதங்களில் மக்களுக்கு உணவு, மருந்துகள் மறுக்கப்பட்ட நிலையில் மிக அதிக அளவில் பட்டினிச் சாவுக்கு தள்ளப்பட்டனர். 2009 ஏப்ரலில் அகதி முகாம்களில் மடிந்து போன 30 மூத்த குடிமக்களின் சவப் பரிசோதனையில் அவர்கள் பட்டினியால் மடிந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.கே. அலெக்ஸ் ராஜா முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த சவப் பரிசோதனை அறிக்கை, கொழும்பில் உள்ள அய்.நா. தூதரக அறிக்கையில் இடம் பெற்றுள்ளது) தடை செய்யப்பட்டுள்ள இரசாயன வாயு, வெள்ளை பாஸ்பரஸ் மற்றும் கிளஸ்டர் குண்டுகளை இராணுவம் பயன்படுத்தி யிருப்பதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன. பாகிஸ்தானிலிருந்து இவைகளை இலங்கை அரசு வாங்கியதற்கான பாகிஸ்தான் ஏடுகள் வெளியிட்ட செய்திகள். தீக்காயங்களுடன் இறந்தவர்களை நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள், வாக்குமூலங்களை பல்வேறு சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் அறிக்கையிலிருந்து விரிவாக இந்த ஆவணம் பதிவு செய்திருக்கிறது.

விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் நடேசன், சமாதானப் பிரிவுத் துறை பொறுப்பாளர் புலித்தேவன் தலைமையில் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த 300 பொது மக்களை சர்வதேச நெறிமுறைகளுக்கு எதிராக இராணுவம் சுட்டுக் கொன்றது. சரணடைவதற்கு முதல் நாள் 2009, மே 18இல் நடேசன், புலித்தேவன் இலங்கை உயர் அதிகாரிகளுடன் பேசி, இதற்காக அரசு ஒப்புதல் உறுதியைப் பெற்றதற்குப் பிறகே வெள்ளைக் கொடியுடன் வந்தார்கள். இராணுவத்தின் சர்வதேச நெறிமுறைகளை புறந்தள்ளிய நடவடிக்கையை அப்போது இராணுவ தளபதியாக இருந்த சரத்பொன் சேகா வெளிப்படையாக கண்டித்துள்ளார். இது, ஒழுங்கு மீறிய செயல் என்பதை ஒப்புக் கொள்கிறார்.

இந்தப் படுகொலைக்குப் பிறகு டிசம்பர் மாதம் அய்.நா.வின் சிறப்பு தூதர் பிலிப் அல்ஸ்டன், ஒழுங்கு மீறல் குறித்து இலங்கை அரசிடம் விளக்கம் கேட்டு எழுதினார். எல்லாவற்றுக்கும் மேலாக ஆயுதம் தாங்கியப் போராளிக் குழுவின் **அரசியல் பிரிவு தலைவர்** ஒருவர் சரணடைய முன்வந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்பது சர்வதேச முக்கியத்துவம் பெறுகிறது.

2018 டிசம்பர் 15 முதல் 2009, மே 18 வரை ஒவ்வொரு நாளும் ‘போரில்லாத பகுதிகளில்’ நடந்த கிரைனட் ஷெல் வீச்சுகள், வீசப்பட்ட இடம். இறந்த பொது மக்களின் எண்ணிக்கைகளை ஆவணம் விரிவாக அட்டவணைப்படுத்தியுள்ளது. மே 9 ஆம் தேதி அன்றுதான் விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை நடத்தினர். ஆத்திரமடைந்த இராணுவம் போரில்லா பகுதியின் நான்கு திசைகளிலிருந்தும் ‘ஆர்ட்டிலரி’ தாக்குதல் நடத்தியதில் அந்த ஒரு நாளில் மட்டும் 1000 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1,122 பேர் படுகாயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டனர். இறந்து போன 1000 பொது மக்களில் 378 உடல்கள் மட்டுமே மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டன, எஞ்சிய உடல்களை இராணுவம் சாலை ஓரங்களிலும் கடற்கரையிலும் வீசி எறிந்தது. மே 9 ஆம் தேதியிலிருந்து 10 ஆம் தேதி காலை வரை ஒரே இரவில் 2000 பொது மக்களும், அதே நாள் மாலையில் 3200 பொது மக்களும் கொல்லப்பட் டுள்ளனர். அய்.நா.வின் புனர்வாழ்வுக்கான கள அதிகாரி லாரன்ஸ் கிறிஸ்ட் 3200 பேர் இறந்ததை உறுதிப்படுத்துகிறார்.

தற்காலிக மருத்துவமனையில் பணியாற்றிய இலங்கையின் அரசு மருத்துவர், மே 10 அன்று 391 சடலங்கள் அடக்கம் செய்ய கொண்டு வரப்பட்டது என்றும் 1300 பொது மக்கள் படுகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். 2009 மே 14 அன்று 1700 பேர் கொல்லப்பட்டு, 3000 பேர் படுகாயமடைந்துள்ளனர். மே 17 அன்று 150 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். குறிப்பாக மே 9 ஆம் தேதி விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்தியப் பிறகு வெறி கொண்ட இராணுவம், தொடர்ச்சியாக பொது மக்கள் மீது ஷெல்களை வீசத் தொடங்கி விட்டது. விமானங் களின் வழியாக மக்கள் வாழும் பகுதிகளைப் படம் பிடித்து குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதை இலங்கை இராணுவ உயர் அதிகாரிகளே ஒப்புக் கொண்டுள்ளனர்.

இது தவிர முகாம்களில் நடந்த மனித உரிமை மீறல்கள் காணாமல் போன பெண்கள், பாலுறவு வன்முறைகள், பெண்களுக்கு எதிராக நடந்த குற்றங்கள் பற்றிய ஏராளமான தரவுகளை மிக விரிவாக ஆவணம் பதிவு செய்துள்ளது.

ஈழத் தமிழர்களின் போராட்ட வரலாறுகள் குறித்து பல விரிவான நூல்கள் வெளி வந்துள்ளன. அமைதி காக்கச் சென்ற இந்திய இராணுவம், இலங்கையில் நடத்திய அத்துமீறல்கள், போர்க் குற்றங்கள், பாலுறவு வன்முறைகள் குறித்த விரிவான ஆவணத்தை ‘சாத்தானின் படைகள்’ என்ற தலைப்பில் விடுதலைப்புலிகள் இயக்கமே ஆவணமாக்கியது. ‘இராஜீவ் கொலை’ நடந்தபோது இந்திய உளவுத் துறை அந்த ஆவணங்களைக் கைப்பற்றி முற்றாக அழித்ததோடு, விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராஜீவ் கொலையில் தொடர்புபடுத்தவும், அந்த ஆவணத்தையே சான்றாக்கியது. அந்த வரிசையில், ஈழத் தமிழர்கள் மீது இராணுவம் இனப்படுகொலை நோக்கத்தோடு நடத்திய போர்க் குற்றம், ‘மனித குலத்துக்கு எதிரான போருக்கான’ முழுமையான ஆவணமாக வெளி வந் துள்ளது இந்த நூல் என்று உறுதியாக சொல்லலாம்.

சர்வதேச நாடுகளின் கண்களைத் திறக்கச் செய்யவும், இனப் படுகொலை போர் குற்ற விசாரணைகளுக்கான சான்று ஆவணமாகவும் இது நிச்சயம் பயன்படும்.

**நூல் :** Srilanka : Hiding the Elephant **பக்.** 976

**ஆசிரியர் : பேரா. இராமு. மணிவண்ணன்**

**அரசியல் மற்றும் பொது நிர்வாகத் துறை**

**சென்னைப் பல்கலைக்கழகம்.**

**விடுதலை இராசேந்திரன்**

*(‘தலித் முரசு’க்காக எழுதப்பட்டு, அதன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது)*

DATE OF PUBLICATION 22.10.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# அறிவியல் சிந்தனையற்ற நாடு!

இந்தியா, செவ்வாய் கிரகத்துக்கு 'மங்கள்யான்' அனுப்பியது நாட்டுக்கு பெருமைதான் என்றாலும் இந்த நாட்டு மக்கள் அறிவியல் மனப்பான்மையில்லாத மூடநம்பிக்கையாளர்களாகவே இருக்கிறார்கள். இப்படி கூறுவது பெரியார் இயக்கமல்ல; 'டைம்ஸ் ஆப் இந்தியா நாளேடு' - இப்படி ஒரு கட்டுரையை எழுதியுள்ளது. 2014 அக்டோபர் 4 ஆம் தேதி அந்த ஏட்டில் சேட்டன் பகத் என்பவர் எழுதியுள்ள கட்டுரையில் முன் வைத்துள்ள கருத்துகள்:

நாம் நமது குழந்தைகள், விஞ்ஞானப் பாடங்களை எடுத்துப் படிக்க வேண்டும். அதில் அதிக மதிப்பெண் பெற வேணடும் என்று விரும்புகிறோம். ஆனால், வாழ்க்கையில் இதற்கு நேர்மாறாக மூடநம்பிக்கையில் மூழ்கிக் கிடக்கிறோம். மற்ற நாடுகளைவிட நமது நாட்டில்தான் மூடநம்பிக்கைகள் அதிகம். விஞ்ஞான தேர்வை எழுதச் செல்வதற்கு முன்பு தயிரில் சர்க்கரையைக் கலந்து சாப்பிட்டால் தேர்வு எளிமையாக இருக்கும் என்று ஒரு மூடநம்பிக்கை. ஏதோ, மேலே 'கடவுள்' ஒரு தணிக்கை அலுவலகத்தை வைத்துக் கொண்டு எந்தக் குழந்தை எதைச் சாப்பிட்டு விட்டு தேர்வு எழுத வந்தது என்று கண்காணித்துக் கொண்டிருப்பதுபோல, ஒரு நம்பிக்கை! பாபாக்கள், சோதிடர்கள், சாமியார்கள் ஏராளம் இருக்கிறார்கள். குற்றம் செய்துவிட்டு கோயிலுக்குப் போய் 'பரிகாரம்' செய்து கொள்ளலாம். பல நேரங்களில் 'காணிக்கை'களோடு கடவுள் தரிசனம் நடக்கிறது.

வீதிகளில் மதச் சடங்குகள், மத ஊர்வலங்கள், சுற்றுச் சூழல் பாதிப்புகளோடு போக்குவரத்து நெருக்கடிகள் உருவாக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் மேலே இருந்துகொண்டு கடவுள் கண்காணிக்கிறாரா? நான் நம்பும் கடவுளை நம்பாமல், மற்றவர் வேறு ஒரு கடவுளை நம்பினால், அவர் வேறு; நான் வேறு என்ற பிரிவினை மனப்பான்மை. நான் நம்பும் கடவுளை நம்பும் ஒருவர், திடீரென மரணமடைந்து விட்டால், உடனே, அச்சம் தொற்றிக் கொள்கிறது. இந்த அச்சம், வேறு கடவுளை நம்புகிறவர் மீது உருவாகும் அச்சத்தைவிட பன்மடங்கு அதிகம். ஆமாம், நம்பும் கடவுள் மீதே சந்தேகம் வந்து விடுகிறது. விஞ்ஞானிகள் கண்டுபிடித்த மருத்துவத்தை பயன்படுத்துகிறோம். தொலை தொடர்பு வசதிகளை கணினிகளை பயன்படுத்துகிறோம். ஆனால், விஞ்ஞான சிந்தனையோ மனப்பான்மையோ இருக்கிறதா? விடை இல்லை என்பது தான்.

அறிவியலை பதவிகளுக்கும், சுயநலத்துக்கும் மட்டுமே பயன்படுத்துகிறோம். பழக்க வழக்கம், கலாச்சாரம், ஒழுக்கம், ஏன் தேச பக்தியைக்கூட அறிவியலைவிட மேன்மையானது என்று போற்றுகிறோம். இவ்வளவுக்கும் பிறகு, 'மங்கள்யான்' வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்த விஞ்ஞானிகளை பாராட்டுவதில் ஏதேனும் அர்த்தமிருக்கும் என்றால், வாழ்க்கையில் அறிவி யலுக்கு கொஞ்சமாவது கூடுதலாக மதிப்பளிப்பது தான்" என்று எழுதியுள்ளார் கட்டுரையாளர். பெரியார் இயக்கம் காலம் காலமாக முன் வைத்த கருத்துகள்தான். ஆனாலும், 'டைம்ஸ் ஆப் இந்தியா' போன்ற நாளேடுகளே இத்தகைய கட்டுரைகளை வெளியிடுகின்றன. இத்தகைய கட்டுரைகளை ஆபூர்வமாக வெளியிடும் இந்த நாளேடுகளாவது மூடநம்பிக்கைகளை, ராசி பலன்களை வெளி யிடுவதை நிறுத்தக் கூடாதா என்பதே நமது கேள்வி!

### உலகப் "பெருமை"

பகவான் அவதாரம் எடுத்ததாகச் சொல்லப்படும் 'புண்ணிய பூமி'க்கு மற்றொரு "உலகப் பெருமை" உண்டு. உலகிலேயே திறந்தவெளியை கழிப்பறையாக மாற்றுவதில் முதலிடத்தில் நிற்பதும் இந்த 'புண்ணிய பூமி' தான். திறந்த வெளியில் மலம் கழிக்கும் வழக்கத்தால் நீர்த் தொற்று தொடர்பான வியாதிகளால் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பேதி, தொற்று, சோகை போன்ற விதிகளால் ஆண்டுக்கு 3 இலட்சம் பேர் மரணமடைகிறார்கள். 5 வயதுக்குட்பட்ட 5200 குழந்தைகளிடம், 3039 குடும்பங்களில் அண்மையில் ஆய்வு நடத்தப்பட்டது. வீடுகளில் கழிப்பறை இருந்தும்கூட அதைப் பயன்படுத்தும் பழக்கம் வரவில்லை என்ற உண்மை ஆய்வில் கண்டறியப்பட்டது. ம.பி. மாநிலத்தில் மே 2009லிருந்து ஏப்ரல் 2011 வரை 80 கிராமங்களில் இந்த ஆய்வு நடந்தது. கழிப்பறைகள் இருந்தும் அதைப் பயன்படுத்த மறுக்கிறது இந்த மாநிலம். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஜார்க்கண்ட் மாநிலம்தான் மிக மோசம்; இம்மாநில கிராமங்களில் வாழும் மக்களில் 92.4 சதவீதம் பேர் கழிப்பறை இல்லாதவர்கள். ம.பி.யில் 86.9 சதவீதமும், ஒரிசாவில் 85.9 சதவீதமும், சத்தீஸ்கரில் 85.5 சதவீதமும், பீகாரில் 82.4 சதவீதமும், கழிப்பறையைப் பயன்படுத்தாதவர்கள். ஒட்டு மொத்தமாக இந்தியாவில் 69.3 சதவீத கிராமத்தினருக்கு கழிப்பறை இல்லை. இதிலும் பாலினப் பாகுபாடுகள் உண்டு. பெண்கள் கழிப்பறை வேண்டும் என்று வலியுறுத்தினாலும் ஆண்கள் அதற்காக செலவிட விரும்புவதில்லை.

இந்து மத நம்பிக்கை "ஆச்சாரங்களில்" ஊறிப்போன இந்த மாநிலங்களில் இத்தகைய பிற்போக்கு சிந்தனை வேரூன்றி இருக்கிறது. வீடுகள் தோறும் கழிப்பறைகள் இருந்தாலும்கூட அவை பயன்படுத்தப்படாமல் 'பார்வை'க்கு மட்டுமே வைக்கப்பட்டிருக்கின்றன.

## புதுவையில் கழகத் தோழர் மணவிழா

14.9.2014 அன்று காலை 8 மணியளவில் புதுவையில் கழகத் தோழர் தி.இராஜசேகரன்-கோ. இராஜசுலோச்சனா ஆகியோருடைய வாழ்க்கை இணையேற்பு விழா கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. புதுவை மாநில அமைப்பாளர் தந்தை பிரியன் அறிமுகவுரையாற்றினார். கழக புதுவை மாநிலத் தலைவர் லோகு அய்யப்பன் வரவேற்புரையாற்றினார். தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் மணமக்களை வாழ்த்தினார்.

# தனியார் துறையிலும் இடஒதுக்கீடு : முனைவர் ஜீவானந்தம் பேச்சு

திருவாரூர் மாவட்ட திராவிடர் விடுதலைக்கழகத்தின் சார்பில் தந்தை பெரியார் 136வது பிறந்த நாள் பொதுக்கூட்டம் மன்னார்குடியில் திராவிடர் விடுதலைக் கழக திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முனைவர் ஜீவானந்தம் சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில்,

பெரியார் பிறந்த நாளை கொண்டாடுவதன் நோக்கம், அவருடைய கொள்கைகளை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதற்காக நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோம். பெரியாரின் கொள்கைகள் நூற்றாண்டுகளை கடந்தும் இன்றைக்கும் மக்களுக்கு தேவையான கொள்கைகளாக இருக்கின்றன.

தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் பெற்றுத்தந்த இடஒதுக்கீடு மூலம் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் இன்றைக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் நல்ல பயனை அடைந்து வருகின்றனர். அதனை தடுப்பதற்கு மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்களை வேகவேகமாக தனியார் மயமாக்கிவருகிறது. இந்த சூழ்நிலையில் தனியார் துறையிலும், பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு அளிக்கவேண்டுமென இன்றைக்கு போராடுவதற்கும் பெரியாரின் கொள்கைகள் நமக்கு வழிகாட்டுகிறது. மகாராஷ்டிரா மாநிலத்தில் மறைந்த நரேந்திர தபோல்கருக்கு பெருமை சேர்க்கும் வகையில் மூடநம்பிக்கை ஒழிப்பு சட்டத்தை மகாராஷ்டிரா அரசு அமல்படுத்தியுள்ளது. தமிழகத்தில் தன் வாழ்நாள் முழுவதும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக போராடி மக்களிடையே பகுத்தறிவு சிந்தனைகளை பரப்பிய தந்தை பெரியார் நினைவாக தமிழக அரசும் உடனடியாக மூடநம்பிக்கை ஒழிப்பு சட்டத்தை இயற்றவேண்டுமென கேட்டுக் கொள்கிறோம். அதுபோல் ஜாதி மறுப்பு திருமணம் செய்கின்ற தம்பதிகளுக்கு பிறக்கின்ற பிள்ளைகளுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் ஜாதியற்றோர் என்ற பெயரில் தனியாக இடஒதுக்கீடு வழங்கவேண்டுமென தமிழக அரசிடம் பெரியாரின் பிறந்த நாளில் கோரிக்கையாக வைக்கின்றோம் என பேசினார்.

முன்னதாக பள்ளத்தூர் நாவலரசன் குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் கவிஞர் தம்பி, கவிஞர் கலைபாரதி திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட அமைப்பாளர் பாரி, மன்னை வட்ட லாரி உரிமையாளர்கள் சங்க பொருளாளர் சேரன்குளம் செந்தில்குமார், ஒன்றிய செயலாளர்கள் சேரன் ரமேஷ், நல்லிக்கோட்டை முருகன், செந்தமிழன் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## வில்வித்தை போட்டி: மாநிலத்தில் முதலிடம் பிடித்த மாணவர்



12.10.14 அன்று நாமக்கல்லில் நடைபெற்ற மூன்றாவது மாநில அளவிலான உள்ளரங்கு வில் வித்தைப் போட்டியில் 14 வயதிற்குட்பட்டோருக்கான பிரிவில் கழகக் குடும்பத்தைச் சார்ந்த கொளத்தூர் குமார்-தமிழரசி ஆகியோரது மகன் த.கு. இனியன், மாநில அளவில் முதலிடத்தைப் பிடித்து வெற்றி பெற்றுள்ளார். செய்தி அறிந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி நேரில் அழைத்து தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

### திராவிடர் விடுதலைக் கழக செயலவை திருச்சியில் கூடுகிறது

திராவிடர் விடுதலைக் கழக செயலவை 26.10.2014 அன்று காலை 10 மணியளவில் கூடுகிறது. செயலவை உறுப்பினர்கள் தவறாது பங்கேற்க வேண்டுகிறோம்.

**இடம் :** தாசூஸ் அரங்கம் (TASOSS Building), மார்சிங்பேட்டை, திருச்சி.

**பொருள் :** கழகத்தின் அடுத்த செயல்திட்டங்கள்;
கழக ஏட்டுக்கு உறுப்பினர் சேர்த்தல்.


தோழமையுடன்,

**கொளத்தூர் மணி** (தலைவர்)

**விடுதலை இராசேந்திரன்** (பொதுச் செயலாளர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 23rd October 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | அக்டோபர் 30, 2014 | புரட்சி 13 | முழக்கம் 42 | விலை: ரூ.3.00


**+ ‘தீண்டாமை’ குறித்த கணக்கெடுப்பு + தனியார் துறையில் இடஒதுக்கீட்டுக்கு இயக்கம் + ‘கவுரவ’க் கொலையை எதிர்த்தும், வேளாண் பல்கலை ‘பஞ்சாங்க’ ஆதரவை எதிர்த்தும் ஆர்ப்பாட்டங்கள் + மதத்தை அரசியலில் கலக்கும் அ.இ.அ.தி.மு.க. போராட்ட வடிவங்களுக்கு கண்டனம் + விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குக!**

# திருச்சியில் கூடிய செயலவை தீர்மானங்கள்






திராவிடர் விடுதலைக் கழக செயலவைக் கூட்டம் 26.10.2014 அன்று திருச்சி தாகூஸ் அரங்கத்தில் பகல் 11 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் கூடியது. திருச்சி மாநகர அமைப்பாளர் தமிழ்முத்து, கடவுள், ஆத்மா மறுப்புகளைக் கூற, மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி வரவேற்றுப் பேசினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கோவை செயலவைக்குப் பிறகு நடந்த கழக நிகழ்வுகளையும், கழகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் பரப்புரைத் திட்டங்களையும் விளக்கி அறிமுக உரையாற்றினார். தொடர்ந்து தீர்மானங்களை கழகத் தலைவர் முன் வைத்தார். தீர்மானங்கள் மீது செயலவை உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்த தோடு, புதிய தீர்மானங்களையும் ஆலோசனைகளாக முன் வைத்தனர். அதனடிப்படையில் புதிய தீர்மானங்கள் சேர்க்கப்பட்டன.

காலை நிகழ்வுகள் 2.30 மணி வரை தொடர்ந்தன. மதிய உணவுக்குப் பிறகு 3.30 மணியளவில் செயலவை கூட்டம் தொடர்ந்தது. ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு உறுப்பினர்கள் சேர்ப்பது குறித்து மாவட்ட வாரியாக தோழர்கள் எண்ணிக்கை இலக்குகளைத் தெரிவித்தனர்.

அமைப்புகள் குறித்தும் தோழர்கள் பல்வேறு கருத்துகளை முன்வைத்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தோழர்கள் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகள் அணுகுமுறைகள் செயல் திட்டங்கள் குறித்து விரிவாக பதிலளித்துப் பேசினார். ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கான உறுப்பினர் சேர்ப்பு படிவங்கள் மாவட்ட வாரியாக வழங்கப்பட்டன. மாவட்ட அமைப்பாளர் குணாராஜ் நன்றி கூற 7 மணியளவில் செயலவை நிறைவடைந்தது.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:**

- திராவிடர் விடுதலைக் கழகத்தின் களப் பணிகளையும், திட்டங்களையும், பெரியாரிய சிந்தனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வாகனமாக வாரந்தோறும் வெளிவந்து கொண்டிருக்கும் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு, புதிய உறுப்பினர்களை சேர்க்கும் இயக்கத்தை நவம்பர் 15 முதல் டிசம்பர் 15 முடிய தோழர்கள் தீவிரமாக மேற்கொண்டு, கழக வார ஏட்டினை விரிவாக நாடெங்கும் பரப்ப வேண்டுமென இச்செயலவை தீர்மானிக்கிறது.
- தமிழ்நாட்டில், தீண்டாமை பல்வேறு வடிவங்களில் தொழிற்பட்டு வருவதை எதிர்த்து, பெரியார் திராவிடர் கழகமாக இருந்தபோதும், திராவிடர் விடுதலைக் கழகம் எனும் இப்புதிய பெயரில் இயங்கி வருகிறபோதும் கழகம் போராடி வருகிறது. தீண்டாமையைப் பின்பற்றும் உணவுக் கடைகள், தேனீர்க் கடைகள், கிராமங்கள், சுடுகாடுகள் முதலியவற்றின் பட்டியலை தயாரித்து, அதற்கு எதிராகப் போராட்டங்களையும் வழக்குகளையும் முன்னெடுத்தோம். ‘ஆறுமுகம் சேர்வை’ வழக்கில் உச்சநீதிமன்றமே தமிழகத்தில் தீண்டாமைக் கொடுமைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டியதோடு, அதைத் தடுக்கத் தவறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மீது இடைநீக்கம், வழக்குப் பதிவு, துறைசார் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வற்புறுத்தியது. உச்சநீதிமன்றத்தின் இந்த ஆணையை தமிழக அரசு நிர்வாகம் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. அண்மையில், தருமபுரி மாவட்டத்தில் மட்டும் இரட்டைக் குவளை தீண்டாமைக் கொடுமைகளை நடைமுறைப்படுத்திய தேனீர் கடைக்காரர்கள் சிலர் மீது காவல்துறை நடவடிக்கை எடுத்த செய்திகள் வந்துள்ளன. இந்த நிலையில் ஏற்கெனவே ‘தீண்டாமையைப் பின்பற்றிய கிராமங்கள், தேனீர்க் கடைகள், முடிதிருத்தகங்கள், கோயில்கள் முதலியவற்றில் தீண்டாமை முடிவுக்கு வந்துவிட்டதா? தொடர்கிறதா? என்பதைக் கண்டறிய நவம்பர் 1 முதல் 15 ஆம் தேதி வரை கிராமம்தோறும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மீண்டும் கணக்கெடுத்து, பட்டியல்களைத் தயாரிப்பது என இச்செயலவை தீர்மானிக்கிறது.
- ஜாதி மறுப்புத் திருமணம் செய்ய விழைவோர், சமூக, குடும்ப அச்சுறுத்தல் காணமாக பொது நல அமைப்புகள், வழக்குரைஞர்கள் வழியாக பாதுகாப்புடன் பதிவுத் திருமணம் செய்து கொள்கிறார்கள். இந்த முறைக்கு எதிராக, அண்மையில் (17.10.2014) உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்து மிகவும் கவலைதருவதாகும். அத்துடன் சப்தபதி என்ற ஆரியச் சடங்கைத் தவிர்ப்பது மட்டுமே சுயமரியாதைத் திருமண முறை என்று உயர்நீதி மன்றம் கூறியிருப் பது, அத்திருமண முறையை சிறுமைப்படுத்து வதே ஆகும். சடங்குகள் மறுப்பு என்பதையும் கடந்து, ஆடம்பர விழா கொண்டாட்டங்கள் இல்லாத - சிக்கனம், எளிமை ஆகியவற்றையும் உள்ளடக்கியதே சுயமரியாதைத் திருமணம் என்பதை இத்திருமண முறையை அறிமுகப்படுத்திய பெரியார், தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார். கொண்டாட்டமாகவும், விழாவாகவும் நடத்தப்படுவதுதான் திருமணம் என்று உயர்நீதிமன்றம் உரையறை செய்வது ஒரு பண்பாட்டுத் திணிப்பே ஆகும்

(2 ஆம் பக்கம்)

# பூரி சங்கராச்சாரியை கைது செய்ய ஆணையிட்ட தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்துக்குப் பாராட்டு!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

என்பதோடு, எளிமையாகவும், சிக்கன மாகவும், பதிவு மட்டுமே செய்துகொண்டு, இல்வாழ்க்கையைத் தொடங்க விரும்புவோரின் உரிமைகளைக்கூட பறிப்பதாகும். திருமணங்களைக் கொண்டாட்டம், விழாக்கள் சடங்குகளாக உறுதிப்படுத்தும் உயர் நீதிமன்றத்தின் இந்த பழமைவாதக் கருத்தையும் சுயமரியாதைத் திருமணத்தின் நோக்கத்தைக் குறைத்து மதிப்பிடும் கண்ணோட்டத்தையும் இந்த செயலவை அழுத்தமாக மறுக்கிறது.

- மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி பதவியேற்றப் பிறகு, இந்தி, சமஸ்கிருதத் திணிப்புகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டே வருகிறது. அரசு ஊடகமான 'தூர்தர்ஷனில்' ஆர்.எஸ்.எஸ். தலைவர் உரையை நேரடி ஒளிபரப்பு செய்த மோடி ஆட்சி, இப்போது 'அகில இந்திய வானொலி'யில், ஒவ்வொரு நாளும் 7 மணி நேரம் வரை இந்தி மொழியிலான நிகழ்ச்சி, செய்திகளை ஒலி பரப்ப மேற்கொள்ளும் முயற்சிகள் வன்மையான கண்டனத்துக்கு உரியவையாகும். இந்தி மொழி பேசாத 'சி' பிரிவு மாநிலங்களில், மாநில மொழியுடன் ஆங்கிலம் மட்டுமே நீடிக்கும் என்ற சட்டத்துக்கு எதிரான இந்த முயற்சியை பா.ஜ.க. ஆட்சி உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்; இல்லையேல் தமிழகம் கொந்தளிக்கும் என்பதை இந்த செயலவை எச்சரிக்கிறது.

### தனியார் மயமாக்கல் ஆபத்து

- தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல் என்ற கொள்கை அமுலுக்கு வந்த பிறகு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இளைஞர்கள் கடும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறார்கள். பெரும் முதலீட்டில் செயல்படும் 'கார்ப்பரேட்' நிறுவனங்களில் உரிய எண்ணிக்கையில் வாய்ப்புகள் மறுக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, தனியார் துறைகளிலும் இடஒதுக்கீட்டை வலியுறுத்தி - இயக்கங்களைத் தொடர்ந்து நடத்தி வந்தோம். மன்மோகன் சிங் ஆட்சியானாலும் மோடி ஆட்சியானாலும் இந்த முக்கிய பிரச்சினையை அலட்சியம் செய்வதோடு, பொதுத் துறை நிறுவனங்களையும் தனியார் மயமாக்கும் முயற்சிகளைத் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

அண்மையில் 'நோக்கியா' நிறுவனம் தனது கைபேசி தயாரிப்பு தொழிற்சாலையை மூடி, ஏறத்தாழ 18,000 தொழிலாளர்களைத் தவிக்க விட்டுள்ளது.

தனியார் நிறுவனங்களின் நிலை இதுவென்றால், தமிழகத்தில் வருமான வரித்துறை, சுங்கத் துறை, கலால் துறை, தொடர் வண்டித் துறை போன்ற மத்திய அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளில் தமிழர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு, பெருமளவில் வடநாட்டுக்காரர்கள் குவிக்கப்பட்டு வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்கும் நிறுவனங்களிலும், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்படுவதும் இல்லை.

கருநாடக மாநில அரசு தங்கள் மாநிலத்தில் தொழில் தொடங்க வரும் தனியார் நிறுவனங்கள், 'டி' பிரிவு வேலைகளில் 100 விழுக்காடும், 'ஏ', 'பி' மற்றும் 'சி' பிரிவு வேலைகளில் குறைந்தது 70 விழுக்காடுமான வேலை வாய்ப்புகளை உள்ளூர் மக்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என்று அறிவித்துள்ள தொழில் கொள்கையை தமிழ்நாடு அரசும் பின்பற்ற வேண்டும் என்று இச்செயலவை வலியுறுத்துகிறது.

- அரசுத் துறைகள் படிப்படியாக ஒழிக்கப்படுவதையும், தனியார் துறைகளில் சமூகநீதி மறுக்கப்பட்டு, பார்ப்பன-பனியா ஆதிக்கத்தில் இருப்பதை எதிர்த்தும் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் உரிமை இயக்கத்தை தீவிரமாக முன்னெடுக்கவும், கிராமம் மற்றும் நகரங்களில் இளைஞர்களை அணி திரட்டி பல்வேறு வடிவங்களில் இயக்கங்களை நடத்திடவும் இச்செயலவை தீர்மானிக்கிறது.

- அய்ரோப்பிய ஒன்றிய நீதிமன்றம், அண்மையில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கியுள்ளதோடு, அதற்கான முறையான காரணங்கள் முன்வைக்கப்படவில்லை என்பதையும் விடுதலைப்புலிகள் இயக்கம் குறித்து இந்தியாவிலிருந்து தரப்பட்ட தகவல்கள் உண்மைக்கு மாறாக இருந்தன என்பதையும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிலையில் இந்தியாவில் தொடரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை - இரண்டாம் தாயகமாக கருதி தமிழகத்துக்கு பாதுகாப்புக்காக தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழர்களுக்கும் அச்சுறுத்தலாகவும், அப்பாவி ஈழத் தமிழ் இளைஞர்களை சிறப்பு முகாம்களில் முடக்கவும், தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் இயக்கங்களை ஒடுக்கவும் முறைகேடாக பயன்படுத்தப்பட்டு வருவதால் இந்திய அரசு விடுதலைப் புலிகள் மீதான தடையை உடனே நீக்க வேண்டும் என இச்செயலவை வலியுறுத்துகிறது.

- பெண்களுக்கான திருமண வயதை 21 ஆக உயர்த்த வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்றக் கிளை தெரிவித்துள்ள ஆலோசனையை திராவிடர் விடுதலைக் கழகம் வரவேற்கிறது. இந்த வயது வரம்பு உயர்வு திருமண பதிவுக்கு மட்டுமில்லாது, குடும்பத்தினர் நடத்தும் ஏற்பாட்டுத் திருமணங்களிலும் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். ஜாதி மறுப்புத் திருமணங்களை எதிர்க்கும் ஜாதிய சக்திகள், அந்தத் திருமணங்களைத் தள்ளிப் போடுவதற்கு ஒரு வாய்ப்பாக பெண்களுக்கான வயது வரம்பை உயர்த்த எண்ணுகிறார்கள்.

இந்த நிலையில் 21 வயதுக்குட்பட்டு பெண்கள் திருமணத்தை நடத்திடும் குடும்பத்தார் மற்றும் அதற்குத் துணை நின்றவர்களையும் குற்றவாளிகளாக வழக்குப் பதிவு செய்து, தண்டிக்கும் வகையில் இந்த வயது வரம்பு உயர்வுக்கான சட்டம் இயற்ற வேண்டும் என்று செயலவை வலியுறுத்துகிறது.

- தமிழ்நாட்டில் ஜாதி மறுப்புத் திருமணங்களை ஏற்க மறுத்து, 'கவுரவக் கொலைகள்' என்ற பெயரில் ஜாதி வெறிக் கொலைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. கடந்த 20 மாதங்களில் நாம் அறிய இவ்வாறான 32 கொலைகள் ஜாதி வெறியர்களால் நடத்தப்பட்டுள்ளன.

கடைசியாக உசிலம்பட்டியில் தலித் இளைஞரைத் திருமணம் செய்த விமலாதேவி என்ற பெண் காவல்துறையின் மறைமுக உதவியுடன் எரித்துக் கொல்லப்பட்ட செய்தி அதிர்ச்சியூட்டுகிறது.

இந்தச் சூழலில் குற்றவாளிகள் மீதும், குற்றத்தை மறைக்க உடந்தையாக செயல்பட்ட, செயல்படும் காவல்துறையினர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் ஜாதி மறுப்பு இணையர்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு சட்ட ஆணையம் 2012இல் வடிவமைத்துக் கொடுத்திருக்கிற 'திருமண விவகாரத் தலையீட்டுத் தடைச் சட்டத்தை' உடனடியாக நிறைவேற்றக் கோரியும், தமிழ்நாடு முழுவதும் காவல்துறையில் உள்ள அந்தந்தப் பகுதிகளின் ஆதிக்க ஜாதிகளைச் சேர்ந்த அதிகாரிகளைப் பிற பகுதிகளுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யக் கோரியும் தமிழக அரசை வலியுறுத்தி 11.11.2014 செவ்வாய் அன்று ஒத்த கருத்துள்ள அமைப்புகளை திரட்டி கண்டனப் போராட்டத்தை மதுரையில் நடத்துவது என இச்செயலவைத் தீர்மானிக்கிறது.

- கோவையில் செயல்படும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துறைகளில் ஒன்றான 'வேளாண் கால நிலை ஆராய்ச்சி மையம்' 2014 ஆம் ஆண்டுக்கான மழை முன்னறிவிப்புகள் பற்றி விவசாயிகளுக்கு கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் ஒரு பகுதியாக அறிவியலுக்கு புறம்பான 13 பஞ்சாங்கங்களின் தகவல்களையும் எடுத்துக்காட்டி மழை முன்னறிவிப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பஞ்சாங்கங்களுக்குள்ளேயே இதில் முரண்பட்ட தகவல்கள் அடங்கியுள்ளன. போலி அறிவியலான பஞ்சாங்கக் கருத்துகளை அறிவியலை கற்பிக்கும் பல்கலைக் கழகம் அங்கீகரித்து விவசாயிகளைக் குழப்புவதோடு சமூகத்தையும் பின்னோக்கி இழுத்துச்செல்லும் இந்தப் போக்கைக் கண்டித்தும், பஞ்சாங்கக் குறிப்புகளை நீக்கி அறிவிப்பதோடு, எதிர்காலத்தில் இத்தகைய அறிவியலுக்கு எதிரான பரப்பல்களில் ஈடுபடக் கூடாது என்று வலியுறுத்தியும், நவம்பர் 17, திங்கட்கிழமையன்று கோவை வேளாண் பல்கலைக்கழகத்துக்கு முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என இச்செயலவை தீர்மானிக்கிறது.

- தலித் சமுதாயத்தைச் சார்ந்த பீகார் முதல்வர் ஜித்தன் ராம்மஞ்சி கோயிலுக்குள் சென்றதால் கோயில் தீட்டாகிவிட்டது என்று பார்ப்பன அர்ச்சகர்கள் கோயிலைக் கழுவி தீட்டுக் கழித்த 'தீண்டாமை'யையும் பார்ப்பனிய வெறியையும் இச்செயலவை வன்மையாகக் கண்டிப்பதோடு, அச்செயலுக்குக் காரணமான புரோகிதர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர வேண்டும் என வற்புறுத்துகிறது. ஒரு மாநிலத்தின் முதல்வருக்கே இத்தகைய அவமதிப்புகள் நடப்பது நாட்டுக்கே அவமானம் என்பதை சுட்டிக்காட்டுகிறது.

- முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் விடுதலை கோரி நடத்தப்பட்ட - நடந்து வரும் போராட்ட வடிவங்கள் (மொட்டை அடித்தல், பால்குடம் எடுத்தல், அங்கப்பிரதட்சணம், மண்சோறு சாப்பிடுதல், யாகம்) இந்துமத அடையாளங்களாக இருப்பது மதச்சார்பற்ற அரசியலில் மதத்தைக் கலந்து 'இந்துத்துவா' மதவெறிக் கொள்கைக்கு துணை போவதே ஆகும். மதத்தை அரசியலில் கலந்து, மதச்சார்பின்மை கொள்கைக்கு ஊறு விளைவிக்கும் அண்ணாவின் கொள்கைக்கு எதிரான அகில இந்திய அண்ணா தி.மு.க.வின் இந்தப் போக்கு ஆபத்தானது, கண்டனத்துக்கும் உரியதாகும்.

- இராமநாதபுரத்தில் காவல் நிலையத்துக்குள் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஒரு இஸ்லாமிய இளைஞர் - காவல்துறை ஆய்வாளரால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு செயலவை வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கிறது. உண்மையில் இது படுகொலையே தவிர 'வீர-தீரச்' செயல்கள் அல்ல. இத்தகைய 'மோதல்-கொலை'கள் நடத்தப்படும்போது உச்சநீதிமன்றம் வகுத்துள்ள நெறிமுறைகள் பின்பற்றப்படுவதும் இல்லை. நீதிமன்ற விசாரணைகள் இல்லாமலே காவல்துறையே காவல் நிலையங்களில் வழங்கி வரும் இந்த 'மரண தண்டனை'களுக்கு காவல்துறை சார்பில் உண்மைக்கு மாறான காரணங்கள் கூறப்பட்டு குற்றமிழைத்த காவல் துறையினர், எந்த நடவடிக்கையும் இல்லாது தப்பிவிடுகின்றனர். எனவே, காவல்நிலைய விசாரணைகளில் நடக்கும் உண்மைகளைக்

(3 ஆம் பக்கம்)

### கழகச் செயல் திட்டங்களுக்கு ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்

உசிலம்பட்டி விமலாதேவி ஜாதி வெறிக் கொலையைக் கண்டித்து கழகம் நடத்தும் ஆர்ப்பாட்டத்தை தூத்துக்குடி பால். பிரபாகரன் ஒருங்கிணைப்பார்.

கோவையில் வேளாண் பல்கலை முன் நடைபெற இருக்கும் கண்டன ஆர்ப்பாட்டத்தை கோவை கழக மாவட்டத் தலைவர் நேரு ஒருங்கிணைப்பார்.

'புரட்சிப் பெரியார் முழக்கம்' வார ஏட்டுக்கு உறுப்பினர்கள் சேர்ப்பு – அதற்கான சந்தாத் தொகையைப் பெறும் பணிகளை செயலவை உறுப்பினர் ஈரோடு இரத்தினசாமி ஒருங்கிணைப்பார்.

திருச்சி செயலவைக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி இதை தெரிவித்தார்.

# பெரியார் சிந்தனை சுதந்திரத்துக்கு எதிரானவரா?

***தமிழக அரசியல் தலைவர்கள் தொண்டர்களை 'அடிமை'களாக வைத்திருக்கும் சர்வாதிகாரம், பெரியாரிடமிருந்து வந்தது என்று 'தமிழ் இந்து' நாளேட்டில் அக்டோபர் 22 அன்று க. திருநாவுக்கரசு என்பவர் (இவர் திராவிட இயக்க ஆய்வாளர் திருநாவுக்கரசு அல்ல) எழுதிய கட்டுரைக்கு மறுப்பு தெரிவித்து, விடுதலை இராசேந்திரன் எழுதிய மறுப்பு கட்டுரையை நவம்பர், 25 அன்று அந்த ஏடு சில மாற்றங்களுடன் வெளியிட்டது. அந்த மறுப்புக் கட்டுரை எழுதியனுப்பிய வடிவத்தில் இங்கே வெளியிடுகிறோம்.***

'பெரியாரின் வாரிசுதான் ஜெயலலிதா!' என்ற கட்டுரை 'பெரியார் அவமதிப்பு' என்ற உள் நோக்கத்தை மட்டுமே கொண்டிருப்பதாகவே தெரிகிறது. 'அரசியல் அதிகாரம்' என்ற ஒற்றை இலட்சியத்தோடு செயல்படும் அரசியல் கட்சிகளின் 'தலைமை பக்தி'யையும் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தையும் ஒப்பிடுவதே தவறு. பெரியார் - தேர்தலுக்காக அரசியல் கட்சி நடத்தவில்லை. சமுதாய மாற்றத்துக்காக இயக்கம் நடத்தினார்.

"சுயமரியாதை அழித்தொழிப்பு இன்று தமிழக அரசியலில் முழுமை பெற்றிருக்கிறது என்றால், அதற்கான தொடக்கம், பெரியார் உருவாக்கி வளர்த்த சுயமரியாதை இயக்கத்திலும் திராவிடர் கழகத்திலும் இருக்கிறது" - என்கிறது கட்டுரை.

சுயமரியாதை என்ற சொல்லையே தமிழ்ச் சமூகத்துக்கு அறிமுகப்படுத்தியவர் பெரியார். இன்று அரசியலில் நிகழும் அழித்தொழிப்புகள், பெரியார் பேசிய சுயமரியாதைக்கு முற்றிலும் எதிரானது. தன்மானத்தைவிட இனமானமே பெரியது என்றார் பெரியார். சமூக சுயமரியாதைக்காக தனது சுயமரி யாதையை பலியாக்கி, கல்லடி, முட்டை வீச்சு, செருப்பு வீச்சுகளுக்கிடையே பெரியார் இயக்கத்தை நடத்தினார்.

அதற்கு மாறாக அதிகாரம் ஒன்றே இன்றைய அரசியல் கட்சிகளின் நோக்கம். அதிகாரத்தில் பங்கு போடத் துடிப்பவர்கள் தலைமைக்கு துதி பாடுகிறார்கள். கட்சித் தலைமைகள் இதை உற்சாகமாக வரவேற்று மகிழ்கின்றன.

பெரியார் - கடவுள் மத பக்தியை எதிர்த்தது போலவே தன்னை புகழ்ந்து பேசுவதையும் விரும்பாதவர்; தனது காலில் விழுவதை அனுமதிக் காதவர்; அதை கண்டித்தவர்; தன்னோடு கால்மீது கால் போட்டுக் கொண்டே மற்றவர்கள் பேசுவதில் தவறே இல்லை என்று கூறியவர். தன் முன்னால் தன்னிடம் பணிந்து கைகட்டி நிற்பதை வெறுத்தவர். மாறாக தன்னை கடுமையாக விமர்சித்துப் பேசுவதை வரவேற்றவர். அதன் மூலம் தமது கொள்கை பரவும் என்று கருதினார். அரசியல் தலைவர்களைப்போல் தன்னைத் தாக்கிப் பேசியவர்கள் மீது அவமதிப்பு வழக்குகளை அவர் தொடர்ந்தது இல்லை; மாறாக அந்த எதிர்ப்பையும் கொள்கையைப் பரப்புவதற்குப் பயன்படுத்த விரும்பியவர்.

ஒரு உதாரணம்; 1971ஆம் ஆண்டு சேலத்தில் பெரியார் நடத்திய ஊர்வலத்தில் இந்து கடவுள்களை அவமதித்ததாக அவரது எதிர்ப்பாளர்கள் பெரியார் படத்தை எரித்து செருப்பாலடித்தபோது தானே பாதி விலையில் தனது படத்தையும் செருப்பையும் அனுப்பி வைப்பதாக அறிக்கை விடுத்தார், பெரியார்.

புத்தர் இயக்கம் ஊடுருவலால் அழிக்கப்பட்டது போல் தனது இயக்கம் அழிந்துவிடக் கூடாது என்ற கவலை பெரியாரின் இயக்க சர்வாதிகாரத்துக்கு முக்கிய காரணமாக அமைந்தது. பல நேரங்களில் அதை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

"நான் சொல்வது சரியா தவறா என்று சிந்தித்துப் பார்த்துச் சரியென்று பட்டால் ஏற்றுக் கொள் ளுங்கள் என்று மக்களிடம் கேட்டுக் கொண்ட பெரியார், ஒருபோதும் அந்தச் சிந்தனை சுதந்திரத்தை, தனது இயக்கத்திலிருந்த பிற தலைவர்களுக்கோ, தொண்டர்களுக்கோ வழங்கவில்லை" என்கிறது கட்டுரை.

பெரியார் இயக்கம் நடத்தியது மக்களுக்கான சிந்தனை சுதந்திரத்துக்குத்தான். எனவே மக்களிடம் அந்தக் கேள்வியை வைத்தார். இயக்கத்துக்கான சிந்தனை சுதந்திரத்துக்கு அவசியமோ தேவையோ இல்லை. பெரியார் கொள்கைகளை ஏற்றவர்கள் தானே இயக்கத்துக்கு வந்தனர். இந்தக் குற்றச்சாட்டே அடிப்படையற்றது.


ஜெயலலிதா பெரியாரின் வாரிசா?
• விடுதலை ராஜேந்திரன் •

கட்டுரையாளர் கூறியதுபோல் கருத்து சுதந்திரத்தை பெரியார் அனுமதிக்காதவரும் அல்ல!

இயக்கத்துக்குள்ளும் பிற தலைவர்களிடமும் தாராளமான கருத்து சுதந்திரத்தை பெரியார் அள வுக்கு வேறு தலைவர்கள் வழங்கியிருக்க முடியாது.

உதாரணத்திற்கு சில:

- பெரியார், பொதுவுடைமைக் கொள்கைகளை கைவிட்டார் என்று அப்போது பெரியார் இயக்கத்திலிருந்த தோழர்கள் சிங்காரவேலர், ஜீவா போன்றவர்கள் பெரியாரைக் கடுமையாக விமர்சித்து எழுதுவதற்கு தனது 'குடிஅரசு' ஏட்டிலே பெரியார் இடம் தந்தார்.
- சுதந்திர நாளை 'துக்க நாள்' என்று பெரியார் அறிவித்தபோது அவரிடம் கருத்து மாறுபாடு கொண்டு அண்ணா 'இன்ப நாள்' என்று எதிர்த்து அறிக்கை வெளியிட்டார். அண்ணா மாறுபட்ட கருத்தை கூறினாலும் அந்த 'சிந்தனை சுதந்திரத்தை' பெரியார் அனுமதித்தார். அடுத்த ஆண்டு 1948இல் ஈரோட்டில் பெரியார் நடத்திய மாநாட்டில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அண்ணாவை அழைத்து சிறப்புச் செய்தார். 1949இல் அண்ணா தாமாகவே வெளியேறினாரே தவிர, பெரியார் இயக்கத்தைவிட்டு நீக்கவில்லை என்று. இத்தகைய பண்பை இன்றைய தலைவர் களிடம் பார்க்க முடியுமா?
- பெரியார் நடத்திய 'குடிஅரசு' பல்வேறு மாறுபட்ட சிந்தனைகளுக்கு தனது பக்கங்களை ஒதுக்கியது. 'கற்பு' குறித்த பெரியார் கருத்தை மறுத்து தமிழறிஞர் பி.ஆர். பரமசிவ முதலியார் எழுதிய கட்டுரையை பெரியார் தனது ஏட்டிலேயே வெளியிட்டார்.
- மறைந்த பொதுவுடைமை கட்சித் தலைவர் தோழர் பால தண்டாயுதமும், பெரியாரும் ஒரே மேடையில் பேசியபோது 'தேசியம்', 'கம்யூனிசம்' குறித்து பெரியார் எழுப்பிய கேள்விகளுக்கு பெரியாரை மறுத்துப் பேசினார் பாலதண்டா யுதம். தோழரின் மறுப்பு உரையை எழுத்து வடிவமாக கேட்டுப் பெற்று தனது 'விடுதலை' நாளேட்டில் வெளியிட்டார் பெரியார்.
- பொதுக் கூட்ட மேடைகளிலேய தனது கருத்தை எதிர்த்து; கேள்விகள் கேட்க அனுமதித்தவர் பெரியார்.
- தனது மனைவி நாகம்மையாரை பொது வுடைமையாக்குவீர்களா? என்று பொதுக் கூட்டத்தில் நேரில் எதிர்ப்பாளர்கள் கேட்ட போதுகூட பெரியார் ஆத்திரப்படவில்லை. இதை நாகம்மையாரிடம் கேளுங்கள் என்று பதிலளித்த தலைவர். அவரது 'சிந்தனை சுதந்திரம்' அந்த எல்லைக்கு நீண்டது. இன்றைய அரசியல் தலைவர்களிடம் இந்தப் பண்புகளைப் பார்க்க முடியுமா?

இப்படிப் பல நிகழ்வுகளைப் பட்டியலிட முடியும்.

எல்லா சர்வாதிகாரிகளும் சொல்லும் அதே நியாயத்தைத்தான் பெரியாரும் தனது சர்வாதி காரத்துக்கு சொல்வதாக - கட்டுரையாளர் எழுது வதை வரலாறு மன்னிக்காது. ஏனைய சர்வாதி காரிகளைப்போல் பெரியார் கேள்விக்கு அப்பாற்பட்ட தலைவராக இருந்ததில்லை. அதற்காக அதிகாரங்களைத் தேடி ஓடியதும் இல்லை. ஏனைய சர்வாதிகளைப்போல் அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களைப் பணிய வைத்தவர் அல்ல; மாறாக அதிகார அடுக்குமுறைகளை எதிர்கொண்டு மக்களை நிமிர்ந்து நிற்கச் சொன்னவர். இரண்டு முறை ஆட்சி அமைக்கும் வாய்ப்புகள் தன்னை நோக்கி வந்த போதும் பிடிவாதமாக மறுத்தவர்.

விடுதலைக்குப் போராடும் ஒரு இராணுவம், தளபதியின் சர்வாதிகாரக் கட்டளைக்குப் பணிந்து நடக்க வேண்டும் என்பதைப் போன்றதுதான் பெரியாரின் இயக்கச் சர்வாதிகாரம்.

இன்று அ.இ.அ.தி.மு.க.வின் தலைவர் ஜெயலலிதா, தொண்டர்களால் தெய்வமாக்கப்படுகிறார். மதச் சடங்குகளே அரசியல் போராட்ட வடிவங்களாக மாற்றப்பட்டுவிட்டன. இவை எல்லாம் பெரியார் பேசிய சுயமரியாதைக் கொள்கைகளுக்கே நேர் எதிரானது. சொல்லப் போனால், பெரியார் சுயமரியாதைக் கொள்கைகளுக்கே சவால் விடக் கூடியவை. இதை பெரியார் கொள்கையின் வழி வந்தவைகளாக எழுதுவது உண்மைகளை தலைகீழாகப் புரட்டிப் போடுவதே ஆகும். இந்த அரசியல் கட்சிகளின் 'தலைமை பக்தி'க்கான ஊற்றுக்கள் எங்கிருந்து தொடங்குகிறது? குருவுக்கு சீடன் அடிமையாவதையும் மேல் ஜாதிக்கு கீழ் ஜாதி பணிந்து போவதையும் புனிதமாகவும் சமூக தர்மமாகவும் இந்த சமூகத்தில் காலம்காலமாக கட்டமைக்கப்பட்ட உளவியலின் தொடர்ச்சி தானே?

ஆன்மிகத் தலைவர்களை கடவுள்களாக்கி குடியரசுத் தலைவர்களாக இருந்தாலும் அவர்களின் காலடியில் அமர வேண்டும் என்பதை 'தர்மமாக்கிய' 'ஏற்றத்தாழ்வு' தத்துவங்களின் நீட்சிதானே? இதைப் பெரியார் இயக்கத்துடன் முடிச்சுப் போடுவது முறைதானா? இப்படி மனிதர்களை ஏற்றத் தாழ்வு சிறைக்குள் அடைத்து வைத்த 'புனிதங்களையும்', 'தர்மங்களையும் எதிர்த்து கேள்வி கேட்ட பெரியார் இயக்கம்தான் இந்த சீரழிவுக்கு காரணம் என்று குற்றம் சாட்டுவது காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடு தானே?

முதல் சுயமரியாதை மாநாட்டை செங்கல்பட்டில் நடத்தியவரே பெரியார்தான்! மாநாட்டுத் தலைவராக சவுந்தரபாண்டியனை தேர்வு செய்தவரும் பெரியார் தான்! அதற்குப் பிறகு முன்மொழிதல், வழிமொழிதல் என்ற போலி சடங்குகள் வேண்டாம் என்று பெரியார் நேர்மையாக அறிவித்தது கட்டுரை யாளருக்கு சர்வாதிகாரமாகத் தெரிகிறது. அந்த சடங்குகள் நடந்திருந்தால் பெரியார் ஜனநாயகவாதியாக மாறியிருப்பாரோ! நல்ல வேடிக்கை!

உ.பி.யில் மாயாவதி ஆட்சியின் ஊழல் முறைகேடுகளுக்கும் அம்பேத்கர்தான் காரணமாக இருந்தார் என்று எழுதினாலும் வியப்பேதும் இல்லை!

பெரியாரின் சமூக பங்களிப்புகளை - மடை மாற்றம் செய்யும் முயற்சிதான், இந்தக் கட்டுரை! ✦

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 30.10.2014**

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்டறியவும் எதிர்காலத்திலாவது கண்காணிப்புக் காமிராக்களை ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பொருத்த வேண்டும் என்று தமிழக அரசை இச்செயலவை கேட்டுக் கொள்கிறது.

- ம.பி. மாநிலம் இராஞ்சியில் நடந்த மதவிழா ஒன்றில் பேசிய பூரி சங்கராச்சாரி நிச்சலானந்தா, தாழ்த்தப்பட்டவர்களும் சூத்திரர்களும் கோயிலுக்குள் நுழைவதை அனுமதிக்கக் கூடாது என்று பேசியதற்காக அவரை கைது செய்ய தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் உத்தரவிட் டுள்ளதை செயலவை வரவேற்று பாராட்டுகிறது. அதே நேரத்தில் பகவத் கீதையின் 16ஆவது அத்தியாயம் கூறும் 'வர்ணாஸ்ரமம்' கூறும் நான்கு வர்ண தர்மங்களின் அடிப்படையிலேயே இந்தக் கருத்தைத் தாம் கூறுவதாக சங்கராச்சாரி வெளிப்படையாக உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார். இந்த நிலையில், சங்கராச்சாரி எடுத்துக் காட்டிய கீதையின் வர்ணாஸ்ரமப் பகுதிகளையும் தடைசெய்ய தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் பரிந்துரைக்க வேண்டும் என்று இந்த செயலவை வலியுறுத்துகிறது.

## இரங்கல்

திருச்சி செயலவைக் கூட்டத்தில் மரணமடைந்த தோழர்களுக்கு ஒரு நிமிடம் மவுனம் காத்து மரியாதை தெரிவிக்கப்பட்டது. சட்ட எரிப்பில் சிறைச் சென்ற ஆனைமலை தோழர் காளிமுத்து, இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராஜேந்திரன், தாராபுரம் திராவிடர் கழகத் தோழர் அரங்கசாமி, கொளத்தூர் கழகத் தோழர் மோகன்ராஜ், நூறாண்டைக் கடந்து வாழும் பேராவூரணி கழகத் தோழர் வைத்தியலிங்கம் அவர்களின் துணைவியார் காசியம்மாள், ஈரோடு மீனாட்சி, சென்னை மந்தைவெளி பெரியார் தொண்டர் பக்கிரிசாமி, திராவிடர் கழகத்தைச் சார்ந்த மூத்த தொண்டர் மதுராந்தகம் ஏழுமலை ஆகியோருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

DATE OF PUBLICATION 29.10.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# கழகத் தோழர்கள் உடனடி எதிர்ப்பு எதிரொலி: வானொலியில் இந்தி திணிப்பு நிறுத்தம்

அகில இந்திய வானொலி தமிழ் ஒலிபரப்பில் நாள்தோறும் 7 மணி நேரம் இந்தி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கான சுற்றறிக்கையை மோடி அரசு அனுப்பியது. இந்த செய்தி வந்தவுடன் கழகத்தினர் செயலில் இறங்கினர். தொலைக்காட்சி ஒன்று இந்த செய்தியை ஒளிபரப்பியவுடன் கழக வழக்கறிஞர்கள் துரை. அருண், திருமூர்த்தி மற்றும் சென்னை மாவட்ட கழகச் செயலாளர் உமாபதி, தலைவர் பா.ஜான், விழுப்புரம் அய்யனார் உள்ளிட்ட 15 தோழர்கள், தபசி குமரன் தலைமையில் 25.10.2014 பகல் 11 மணிக்கு வானொலி நிலைய இயக்குனரை சந்தித்து, கீழ்க்கண்ட கோரிக்கை மனுவை அளித்தனர். கழகத் தோழர்கள் வரவிருக்கும் செய்தியை உளவுத் துறை வழியாக அறிந்த காவல்துறையினர் ஏராளமாகக் குவிக்கப்பட்டிருந்தனர். கோரிக்கை மனு விவரம்:

“இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அந்தந்த மாநில மக்களின் தாய்மொழிக்கென உள்ள உரிமையைப் பறிக்கும் வகையிலும், தென்னிந்தியாவில் அலுவல் மொழிச் சட்டத்தின் அட்டவணை ‘சி’ பிரிவில் கூறியுள்ள மாநில மொழி தமிழும் தொடர்பு மொழி ஆங்கிலமும் என வரையறுக்கப்பட்டிருக்கும் நிலையிலும், தமிழகத்தில் வழங்கி வரும் வானொலியின் தமிழ்மொழிச் சேவையில் இந்திய அரசு இப்போது இந்தித் திணிப்பை புகுத்த திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தி மொழிக்கென தனி அலைவரிசை இயங்கி வரும் வேளையில் தமிழ் மக்களுக்கென தமிழ் மொழிச் சேவையில் இந்தியை குறைந்தது 4 மணி நேரம் எனத் துவங்கி 7 மணி வரை உயர்த்த இந்திய அரசு முயலுமானால் அதை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. இந்திய அரசு இது தொடர்பாக வெளியிட்டுள்ள சுற்றறிக்கையை உடனடியாக திரும்பப் பெறவேண்டும் என கேட்டுக் கொள்வதோடு இது தொடருமானால் பல்வேறு கட்சிகள் இயக்கங் களைத் திரட்டி போராட்டங்கள் நடத்த வேண்டிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.”

மனுவைப் பெற்றுக் கொண்ட இயக்குனர், மேலிடத்துக்கு அனுப்புவதாக தெரிவித்தார். அடுத்த நாள் இந்தி ஒலிபரப்பு நிகழ்ச்சி இல்லை என்று வானெலி நிலைய இயக்குனர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். கழகத்தினர் உடனடியாக மேற்கொண்ட நடவடிக்கைக்கு வெற்றி கிடைத்துள்ளது.

## திருச்சியில் ஜாதி எதிர்ப்பு மாநாடு

“சாதி மறுப்புத் திருமணத்தில் பெண்கள் மீதான வன்கொடுமைத் தடுப்பு மாநாடு” 5.10.14 அன்று திருச்சி.ரோசன் மஹாலில் நடை பெற்றது. ‘சாதி மறுப்பு மக்கள் கூட்டியக்கம்’ நடத்திய இந்த மாநாட்டில் கழக தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

மேலும் இம்மாநாட்டில் - கு. இராமகிருட்டிணன் (தந்தை பெரியார் திராவிடர் கழகம்), பொழிலன், (தமிழ்த் தேச நடுவம்), முனைவர் சத்யபால் (ஆந்திரப் பிரதேசம்), நிலவழகன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), நிலவன் (சாதி மறுப்பு மக்கள் கூட்டியக்கம்), கண. குறிஞ்சி (மக்கள் சிவில் உரிமைக் கழகம்), அரங்க குணசேகரன்( தமிழக மக்கள் புரட்சிக் கழகம்), கயல் (வழக்குரைஞர்), இளமதி, பொற்கொடி மற்றும் பல்வேறு இயக்கத்தினர் பங்கேற்றனர்.

## விழுப்புரம் மாவட்ட கழக தொடர் நிகழ்வுகள்

விழுப்புரம் மாவட்டம் கழகம் சார்பில் 16.2.2014 அன்று மாலை 6 மணியளவில் பெரியார் 136ஆவது பிறந்த நாள் விழாவும், கழகத் தோழர் க.இராமர்-தனலட்சுமி ஆகியோரின் புதல்வி திராவிடர் செல்வி முதலாம் ஆண்டு பிறந்த நாள் விழாவும் கடுவனூர் பெரியார் திடலில் நடைபெற்றது. விழாவிற்கு மாவட்டச் செயலாளர் ச.பெரியார் வெங்கட் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் ந. வெற்றிவேல், செஞ்சி கோ. சாக்ரடீசு, சி. சாமிதுரை, இராமலிங்கம் (வி.வி.மு.), விழுப்புரம் அய்யனார், பேராசிரியர் அ. பெரியார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியில் கல்லை சி. ஆசைத்தம்பி, மு.நாகராசு, செ. குப்புசாமி, சங்கை ராஜேஷ் உள்பட பல பகுதிகளிலிருந்தும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

விழுப்புரம் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 29.9.2014 அன்று மாலை 4 மணியளவில் அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை கொண்டாடுவதைக் கண்டித்து, கண்டன ஆர்ப்பாட்டம் சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு சி. சாமிதுரை தலைமை வகித்தார். ரா.சிவராமன், மு.நாகராஜ், மா.குமார், வீ. முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்க, ச.கு. பெரியார் வெங்கட், ந. வெற்றிவேல், செ.வே. ராஜேஷ், க. இராமர், இராமலிங்கம் (வி.வி.மு.) ஆகியோர் கண்டன உரையாற்றினர். மு. குமரேசன் நன்றி கூறினார். கல்லை சி.ஆசைத்தம்பி, கி.ஆனந்த், அன்பு உள்பட பல தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**சங்கராபுரம் :** தந்தை பெரியார் 136 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 17.9.2014 அன்று காலை 9 மணியளவில் சங்கராபுரத்திலுள்ள பெரியார் சிலைக்கு மாவட்டச் செயலாளர் ச. பெரியார் வெங்கட் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. காலை 11 மணியளவில் செம்பராம்பட்டு துவக்கப்பள்ளி 250 மாணவ மாணவிகளுக்கு எழுதுகோல், நோட்டு புத்தகம், இனிப்புகள் வழங்கப்பட்டன. அந்தப் பகுதியைச் சார்ந்த ராஜேஷ், அன்பு ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். மாவட்ட அமைப்பாளர் செ.நாவாப்பிள்ளை, சி. சாமிதுரை, மு.நாகராஜ், மா.குமார் உள்பட பல பகுதிகளிலிருந்தும் தோழர்கள் பங்கேற்றனர்.

# மேட்டூரில் மாணவர் விவாத அரங்கம்



தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பில் மேட்டூரில் இடஒதுக் கீடு குறித்து மாணவர் விவாத அரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. 17.10.14 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மேட் டூர் தங்கம் அரங்கில் தொடங்கிய இந்த விவாத அரங்கில் கொளத்தூர் ஒன்றியத் தலைவர் காவை ஈசுவரன், பட்டுக்கோட்டை சதாசிவம் ஆகியோர் கருத்துரை வழங்கி தொடங்கி வைத்தனர். மேட்டூரைச் சுற்றியுள்ள பள்ளி, ஐ.டி.ஐ. பாலிடெக்னிக்குகளில் பயிலும் 60-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த விவாத அரங்கில் பங்கேற்றனர். இடஒதுக்கீடு என்றால் என்ன? ஜாதி அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க வேண்டியதன் அவசியம் என்ன? என்பவை தொடர்பாக அடிப்படையான சில செய்திகளை விளக்கி தி.தாமரைக்கண்ணன், மே.கா.கிட்டு ஆகியோர் உரை யாற்றினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, “இடஒதுக்கீட்டின் வரலாறு, ஜாதி அடிப்படையிலான இடஒதுக்கீட்டினால் தமிழ்நாட்டில், சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், கல்வி வேலை வாய்ப்புகளில் ஏற்பட்டுள்ள சமவாய்ப்புகள்” ஆகியவை குறித்து விரிவாக விளக்கவுரை ஆற்றினார். இறுதியாக மாணவர்களின் அய்யங்களுக்கு உரிய விளக்கங்களைக் கொடுத்தார். மாணவர் கழகப் பொறுப்பாளர் ஈரோடு வெங்கட், மாணவர் கழகத் தோழர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி நிகழ்வில் பங்கேற்றார். தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல், மேட்டூர் பகுதி தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் நாகரஜ், சுசி, விவேக் ஆகியோர் நிகழ்ச்சியை திட்டமிட்டு நடத்தினர். சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகப் பொறுப்பாளர்களும், தோழர்களும் நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

## வினாக்கள்... விடைகள்...!

- இந்தியாவில் தேசியப் பாதுகாப்புப் படையில் முதல்முறையாக ‘பெல்ஜியம் ஷெப்பர்டு’ நாய்கள் சேர்க்கப்பட்டுள்ளன. – **செய்தி**

  இந்து தேசியத்தைக் காப்பதற்கு கிறிஸ்தவ நாட்டு நாய்களா என்று இராம. கோபாலன்கள் எதிர்க்க மாட்டார்கள் என்று நம்புவோமாக! ‘ஆமென்’.

- சென்னையில் ‘கத்தி’ படம் ஓடும் திரையரங்கு வளாகத்தில் நடிகர் விஜய்க்கு ரசிகர்கள் சிலை. – **செய்தி**

  அப்படியே, சிலைக்கு அர்ச்சனை டிக்கட் போட்டு அதையும் ‘கவுண்டரிலேயே’ விக்கிறதுக்கு ஏற்பாடு செஞ்சுடுங்க...

- சோனியா, அத்வானி, முலாயம் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த 401 எம்.பி.கள், தங்கள் சொத்து விவரங்களை இன்னும் அறிவிக்கவில்லை. – **செய்தி**

  அவசரப்படாதீங்க... சொத்துகள் எங்கெங்கே பரவி கிடக்குதுன்னு கண்டுபிடிக்க கால அவகாசம் வேணும்ல.

- மோடி கூட்டிய தீபாவளி விருந்து விழாவில் தூய்மை இந்தியா திட்டத்தை வலியுறுத்தினார். – **செய்தி**

  குப்பையைப் பெருக்கி சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் தீபாவளியைக் கொண்டாடாதீங்கன்னு சொல்லியிருப்பார் போல!

- திருப்பதி ஏழுமலையான் ‘தரிசன’ டிக்கட்டுகள் இனி அஞ்சலகங்களிலேயே கிடைக்கும். – **செய்தி**

  அப்படியே, அஞ்சலக அதிகாரிகளாக புரோகிதர்களை நியமிச்சிடுங்க. மந்திரம் ஓதிண்டே ‘டெலிவரி’ செய்யலாம்!

- தீண்டாமையை வலியுறுத்திய பூரி சங்கராச்சாரியை கைது செய்ய தாழ்த்தப்பட்டோர் தேசிய ஆணையம் ஆணை. – **செய்தி**

  சிறைக்குள்ளும் தீண்டாமையை கடைப்பிடிப்பாரே; அப்ப என்ன செய்யறது? பேசாம ஆணையத்தையே கலைச்சுட வேண்டியது தான்!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 30th October 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN